

# சிலப்பதிகாரச் செய்தி

பொ. குருசாமி

சிறந்த
குறிக்கோளோடு
இந்நூல்
எழுந்துள்ளதெனக்
கூறல்வேண்டும்.

—தெ. பொ. மீனாட்சி
சுந்தரனார்.

# சிலப்பதிகாரச் செய்தி

ம. ரா. போ. குருசாமி,
தமிழ் விரிவுரையாளர்,
பி. எஸ். ஜி. கலைக் கல்லூரி,
பீளமேடு, கோவை.

விற்பனை உரிமை :

பாரி நிலையம்,
59, பிராட்வே, சென்னை.

முதற்பதிப்பு: ஜூன், 1955.
உரிமை ஆசிரியர்க்கு

விலை ரூ. 2

கலைக்கதிர் அச்சகம்,
பாப்பநாயக்கன்பாளையம்,
அவினாசிரோடு, கோயமுத்தூர்.

★

படையல்:

கலைக்கதிர் ஆசிரியர்

திரு. ஜி. ஆர். தாமோதரன்

B.Sc.Elec., B.Sc.Mech.(Durham), M.I.E.E.(London), A.M.I.E.(India)M.P.

அவர்களுக்கு

★



# உள்ளுறை

★


| | | |
|---|---|---|
| க. | வரலாற்றுக் காப்பியம் | 1 |
| உ. | பதிகமும் காவியமும் | 5 |
| ங. | இயற்கை இறந்த நிகழ்ச்சிகள் — 1 | 19 |
| ச. | இயற்கை இறந்த நிகழ்ச்சிகள் — 2 | 35 |
| ரு. | ஏன் எழுதினர்? | 57 |
| சு. | இலக்கியத்தில் கலைஞன் இதயம் | 75 |
| எ. | ஒற்றுமைக் காப்பியம் | 87 |
| அ. | உரிமையும் உறவும் | 103 |

பல்கலைச்செல்வர்

## தெ. பொ. மீனாட்சிசுந்தரனார்

# வாழ்த்துரை

---

நண்பர் திரு. ம. ரா. போ. குருசாமி 'சிலப்பதிகாரச் செய்தி' என்ற இலக்கிய ஆராய்ச்சி நூல் ஒன்று எழுதியுள்ளார். இலக்கிய ஆராய்ச்சி நூல்கள் பல தமிழில் இல்லாத குறையை ஒருவாறு தீர்க்க ஆசிரியர் முயன்றுள்ளார். சிறந்த குறிக்கோளோடு இந்நூல் எழுந்துள்ளதெனக் கூறல் வேண்டும். சிலப்பதிகாரத்தில் அதன் ஆசிரியரைக் கண்டு, நமக்கும் காட்டுகின்றார் ஆசிரியர். சிலப்பதிகாரம் ஒற்றுமைக் காப்பியம் என அழகாக விளக்குகின்றார். என்னையும் இழுத்துவிட்டுள்ளார் முற்பகுதியில். அதனால் அதனைப்பற்றி நான் எழுதுவது அழகாகாது. தமிழறிஞர்க்கும், தமிழன்பர்க்கும் இந்நூல் இனிய விருந்தாகும்.

**வாழ்க இளங்கோ! வாழ்க இந்நூல்!! வாழ்க குருசாமி!!!**

**தெ. பொ. மீ.**

பேராசிரியர்

## அ. ச. ஞானசம்பந்தனார்

# அணிந்துரை

---

திரு. குருசாமி அவர்கள் எழுதிய சிலப்பதிகாரச் செய்தியைப் படிக்கும் பேறு கிடைத்தது. நெஞ்சை அள்ளும் அப்பெருங் காப்பியம் மலர்ந்து ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகள் ஆயினும் இன்றுவரை யில் தமிழ்மக்களுக்கு அது பல நற்செய்திகளைக் கூறி வந்துள்ளது. இதிலுள்ள சிறப்பு யாதெனில் ஒவ் வொரு காலத்திலும் வாழ்ந்தவர் தம் காலத்திற் கேற்ப அதன்கண் ஒவ்வோர் உண்மையைக் கண்ட னர். பல சந்தருப்பங்களில் அவர்கள் அந்நூலிற் கண்டதாகக் கூறிய பொருள்கள் அவர்களுடைய மனத்தில் தோன்றியவை யாகவே இருத்தலும் உண்டு.

முழுமுதற் பொருள் தன்னைக் காண்பார் சக்தி யளவாகவே தன் உண்மையை அறிவிப்பதுபோல் இப்பெருநூலும் தன்னிடத்து உண்மைகாண விழை வார் நுண்ணறிவு, ஆர்வம் என்பவற்றின் அளவா கவே, தன் உண்மையை வெளியிட்டுள்ளது. இவர் கள் கூறிய, கூறும் அனைத்தும் அந்நூலுள் உண்டு என்பதில் எள்ளளவும் ஐயமின்று. காண்பார் கருத் தளவினும் மேம்பட்டு நிற்கும் முழுமுதற் பொருள்

போலவே இப்பெருநூலும் தன்னை ஆய்வார் கருத்தளவின் மேம்பட்டுச் சில உண்மைகளைத் தன்னகத்தே கொண்டு விளங்குகிறது.

சேரன் தம்பி இசைத்த சிலம்பில் காணப்படும் செம்பொருள் மூன்று எனக் கண்டு பதிக ஆசிரியர் கூறிச் சென்ருர். ஆனல் ஆழ்ந்து காண்பார்க்கு இக்கூற்றுச் சில ஐயங்களை உண்டாக்காமல் விடாது. எனவே திரு. குருசாமி பதிக ஆசிரியர் கூற்றுப்படி கண்டால் நேரும் இன்னலை (பக். 13) நன்கு எடுத்துக் காட்டுகிருர். 'முடிகெழு வேந்தர் மூவர்க்கும் உரியது' என்ற பதிக அடியால் சுட்டப்பட்ட கருத்து இதுவே என்று ஆசிரியர் விளக்கும் திறன் சிறப்புடன் அமைந்துள்ளது.

கண்ணகியை விட்டுக் கோவலன் பிரிந்து சென்ற காரணத்தைத் தம் நுண்மாண் நுழைபுலன் கொண்டு ஆசிரியர் ஆய்கின்ருர் (பக். 20). அவரால் தெய்வம் என்று போற்றப்படும் கண்ணகியிடத்துக் காணப்படும் சிறு குறையை, மானிடப் பெண்ணுக அவளைக் கருதுமிடத்து ஏற்படும் இச் சிறு குறையை, ஆசிரியர் அச்சமின்றி எடுத்துக்காட்டுகிருர் (பக். 31).

'இயற்கை இறந்த நிகழ்ச்சிகள்' என்ற தலைப்பில் தற்காலத்தில் எழும் சில வினுக்கட்கு விடை

கூறுமுகமாக இலக்கியத் திறனாய்விற் சில உயிர்நாடிகளை நன்கு விளக்குகிறார். இலக்கியம் என்பது நடைபெற்ற மெய்ம்மைகளை (facts) அப்படியே கூறும் தினசரிப் பத்திரிகை அன்று என்ற கருத்தை விளக்கி மெய்ம்மை, பொய்ம்மை ஆராய்ச்சிக்கு இலக்கியம் ஏற்ற இடமன்று என்பதையும் விளக்குகிறார்.

இப்பகுதிவரை ஆசிரியர் எழுதியவை புறத்தே இருந்து செய்த திறனாய்வு. 'ஏன் எழுதினார்' முதலாகவுள்ள கட்டுரைகள் ஆசிரியரின் கலைமனப் பான்மைக்கும், திறனாய்வு வன்மைக்கும் தக்க சான்றுகளாகும். சிலப்பதிகாரம் சமய சமரசம் கூறியது என்ற உண்மை பலரும் அறிந்துகூறியதே. ஆனால் சமுதாய, அரசியல் ஒற்றுமையும் அந் நூலுள் இழைந்து நிற்பதை ஆசிரியர் எடுத்துக் காட்டுவது நம் மதிப்புக்குப் பாத்திரமாகிறது. இதனை அடுத்து உரிமைக்கும் உறவுக்கும் உள்ள தொடர்பை விளக்கி அதுவும் இப்பெருங் காப்பியத்தின் உட்பொருள் என்று இம்முறையில் முதலாவதாகக் கூறிய பெருமை ஆசிரியரையே சாரும். இவ்வாறு நடுநிலையுடன் நூலுள் நுழைந்து நுண்பொருள் காணும் இவர்வாயிலாக இன்னும் பல நூல்கள் வெளிவர இறைவன் அருள்புரிவானாக.

**அ. ச. ஞானசம்பந்தம்**

# பொன் வைக்கும் இடத்தில் பூ

**தமிழினம்** அழிக்கமுடியாத அமர இனம் என்று ஓர் ஆழ்ந்த நம்பிக்கை பாரதியாரின் உள்ளத்திலே நிலவியது. எத்துணையோ சோதனைகட்கும் அல்லல்கட்கும் இரையாகி யும் தமிழினம் அழியாது என்று அவர் நம்பியதற்குக் கார ணம் என்ன ?

சிலப்பதி காரச் செய்யுளைக் கருதியும்
திருக்குறள் உறுதியும் தெளிவும் பொருளின்
ஆழமும் விரிவும் அழகும் கருதியும்
எல்லையொன் றின்மை எனும்பொரு ளதனைக்
கம்பன் குறிகளால் காட்டிட முயலும்
முயற்சியைக் கருதியும்

தமிழச் சாதி அமரத்தன்மை வாய்ந்தது என இறுமாந்தது அந்தக் கவி நெஞ்சம். அத்தகைய இறுமாப்புக்குக் காரண மான மூன்று நூல்களில் ஒன்று சிலப்பதிகாரம்.

அச் சிலம்புச் செல்வத்துக்கு உரைவகுக்கப் புகுந்த **அடியார்க்குநல்லார்** ஒரு பெறலரும் புலவர் பெருமா னுவார். அவர் இளங்கோவடிகள் நல்கிய இலக்கியத்தை யும் தாம் உரைவகுக்கப் புகுந்த செயலையும் நினைந்து பார்த்து,

எழுத்தின் திறனறிந்தோ இன்சொற் பொருளின்
அழுத்தந் தனிலொன் றறிந்தோ—முழுத்தும்
பழுதற்ற முத்தமிழின் பாடற்கு உரைஇன்று
எழுதத் துணிவதே யான்

என்று பாடினுர். முழுவதும் பழுதற்ற முத்தமிழ்க் காப்பி யத்திற்குச் சீரிய உரை வரைந்த புலவர் பெருமான் தயக்கம் இது.

இத்தகு மாண்பு படைத்த சிலப்பதிகாரத்தை ஆராய்ந்து நூல் வகுத்திடத் தமிழகத்தில் புலவர் பெருமக்கள் பலர் உளர்; எனினும், ஏனே தயங்குகின்றனர்! அடியார்க்கு நல்லாரின் அவையடக்கம் அவர்கள்பால் சார்ந்ததோ — அறியேன்.

பல்கலைச் செல்வமும் பன்மொழிப் புலமையும் திற ஞய்வுத் திறமும் விரித்துரைக்கும் வித்தகமும் படைத்தவர் **தெ. பொ. மீனுட்சி சுந்தரனுர்.** அவர் பேராசிரியர்களின் உற்பத்திச் சாலை.

நாவீறு படைத்த சொல்லின் செல்வமும் புலமையின் தலைமைப் பேறும் பொருந்தப் பெற்றுப் பொலிபவர் **ரா. பி. சேதுப்பிள்ளை** அவர்கள். அவர் சுவைஞர்களின் வழிகாட்டி.

அறநெறியால், அறிவுநெறியால் இளைஞர்களின் இதயத்தில் வீற்றிருக்கிருர் டாக்டர் **மு. வரதராசனுர்.** நூல்கள் வரைந்து உளக்கோட்டம் நீக்கும் திருப்பணியில் அவர் இன்றைய திரு. வி. க.

தோற்றத்தால் மட்டுமன்றித் தோலாப் புலமை வளத்தாலும் இன்று நம்மிடையே உலவும் அகத்தியர் **அ. ச. ஞானசம்பந்தனுர்.** இலக்கியத் திறனுய்வுத் துறையில் தமிழகத்தில் இன்று அவர் இட்டது சட்டமாகி வருகின்றது.

புலவர் பெருமக்களின் குறுகிய பேரவைகளிலே ஒலித்துக்கொண் டிருந்தது சிலம்பு. சிறையில் தவமிருந்து செந்தமிழ்ச் செல்வத்தைச் சேர்த்தார் ஒரு மறவர். சிலம்பின் ஒலி மக்களின் இதயங்களிலே பேரொலி எழுப்பும் தகுதியுடையதுஎனக் கண்டார் அவர். குறுகிய ஒரு குழுவின் தனிச் சொத்தாக இருந்த சிலம்பு, குடிமக்கள் காப்பியமாய்த் தமிழகம் எங்கணும் ஒலித்தது. அப்பேரொலி எழுப்புதற்கு இலக்கியத்தை ஓர் இயக்கமாகவே ஆக்கினுர் சிலம்புச் செல்வர் **ம. பொ. சி.**

இன்னும் எத்துணையோ பலர் உள்ளனர். அவர்கள் வாயிலாகச் சிலப்பதிகார ஆராய்ச்சி நூல்கள் பல வெளி வருதல் வேண்டும். அவை தமிழன்னைக்கு நல்ல பணிகளாய்ப் பொலியும். இடையே யான் நுழைகின்றேன். என்னுடைய சிறு காணிக்கை இது. **'பொன் வைக்கும் இடத்தில் பூ'** என்று இதைத் தமிழ்ப் பெருமக்கள் ஏற்க வேண்டுகின்றேன்.

இம் முன்னுரையில் ஒரு விளக்கம் தரவேண்டியுள்ளது. இந் நூலின் 30,31 பக்கங்களில் கண்ணகியைப் பற்றி ஒரு குறிப்பு வருகின்றது. அணிந்துரை நல்கியுள்ள என் பேராசிரியர் அவர்கள் அதுபற்றிச் சுட்டியுள்ளார். கண்ணகியைக் குறையுடையள் எனக் குறிக்கும்போது, அவளுக்கு மாசு கற்பிக்கும் எண்ணம் ஒரு சிறிதும் எனக்கு இல்லை என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகின்றேன். காப்பியப் பாத்திரம் பற்றிய ஆராய்ச்சியை இருவகையாக நிகழ்த்தலாம். ஒன்று: உலகியல் நெறியி லிருந்து நிகழ்த்தும் ஆராய்ச்சி. மற்றொன்று: அப்பாத்திரத்தின் கண்ணோட்டத்திலிருந்து நிகழ்த்தும் ஆராய்ச்சி. இவ்விரு நெறிகளுள் முன்னதாகிய வெறும் உலகியல் (லௌகிக) ஆராய்ச்சியே இங்குத் தரப்பெறுவது. கண்ணகிபற்றிய முழு ஆராய்ச்சிக்கு இந்நூலின் அமைப்பு இடம் தராமையால் விரிவாக எழுதவில்லை. சிலப்பதிகாரப் பாத்திரங்களைப் பற்றி வரையவிருக்கும் நூலில் விரிவாக எழுத நினைந்துள்ளேன். இவ்விளக்கத்தைத் திருவுளங்கொண்டு பயில வேண்டுகின்றேன்.

சென்னை நகரில் 24—3—51-ல் நடைபெற்ற சிலப்பதிகார மாநாட்டில் 'வரலாற்றுக் காப்பியம்' என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றும் வாய்ப்புக் கிடைத்தது. அதன்பின் என் தமையனுர் திரு. **ம. ரா. பாலகணபதி** அவர்களின் விருப்பத்திற் கிணங்கக் கீழமூங்கிலடி காந்தி ஆதாரப் பயிற்சிப் பள்ளியில் 'சிலப்பதிகாரம்: ஓர் எச்சரிக்கை' என்னும் தலைப்பில் பேசினேன். இவ்விரு சொற்பொழிவுகளையும் நூல்வடிவாக்க நினைந்து அவ்வப்போது கட்டுரைகளாக எழுதி வந்தேன். அவை **கலைக்கதிர்** இதழில் வெளிவந்தன.

கலைக்கதிரின் பதிப்பாசிரியர் குழுவில் எனக்கும் ஓர் இடம் பெற்றுத் தந்து, என் முயற்சிகளுக்கெல்லாம் ஊக்கம் ஊட்டி வருபவர் எங்கள் கல்லூரித் தலைவர் திரு. **போ. ரா. கிருஷ்ணமூர்த்தி நாயுடு** அவர்களாவர். அவருடைய அன்பின்றேல் இக்கட்டுரைகள் வெளிவந்திரா. அவர்க்கு யான் செய்யக்கூடிய கைம்மாறு ஏதும் இல்லையே.

கலைக்கதிரின் ஆசிரியர் திரு. ஜி. ஆர். தாமோதரன் அவர்கள் என்னைப்போன்ற பலரை ஆதரிக்கும் பெருந்தகை. வளமாக இந்நாட்டில் அறிவு பரவவேண்டும் என்ற பேரார்வம் கொண்டவராய் – பொருள்வெறிகொண் டலையும் உலகியலில் அறிவுநெறி விளக்கும் கலைக்கதிரைச் சிறப்புற நடத்து கின்றார். அவருடைய அன்பு கலைக்கதிராலயத்தில் எனக்கு ஓர் இடம் தந்துள்ளது.

சிறுவன் சிறுசெயல் எனப் புறக்கணித்துவிடாமல், பல்கலைச் செல்வர் தெ. பொ. மீ. ஒரு வாழ்த்துரை வழங்கி யுள்ளார். கல்லூரி நாட்களில் மட்டுமன்றி அதன் பின்னரும் இலக்கியத் திறனாய்வில் எனக்குச் சுவையூட்டி வழிகாட்டும் பேராசிரியர் அ. ச. ஞானசம்பந்தனார் என்பால் கொண்ட அன்பால் ஓர் அணிந்துரை தந்துள்ளார். இவ்விரு பெருந் தகையாளரின் இதயங்களில் எனக்கு இடம் கிடைத்தது என் பெரும்பேறு.

இந்நூல் உருவாகி வெளிவர உதவினார் ஒருவர். பெயர் தெரிவிக்க அவர் விரும்பவில்லை. பெயர் தெரிவிக்க விரும்பாத அவருக்கு நான் என்ன தெரிவிப்பது!

கலைக்கதிர் அச்சகம் தேர்ந்த தொழில் வல்லுநரால் நடத்தப் பெறுகின்றது. அத்தொழில் வல்ல பெருமக்கள்-குறிப்பாகத் திரு. பார்த்தசாரதி, திரு. வேலுசாமி-யாவருக் கும் நன்றி செலுத்திகொள்கின்றேன்.

பாரி நிலையம் என் வீடு போல. அந்நிலைய உரிமை யாளர் திரு. செல்லப்பன் இதனைத் தம் பொறுப்பில் அன் புடன் ஏற்றுத் தமிழகத்திற்குத் தருகின்றார்.

குறைகள் பல காணலாம்; அவற்றை என் சிற்றறி வின் விளைவுகளாகக் கொள்ள வேண்டுகிறேன். நிறைவூட் டும் நற்கருத்துக்கள் சிலவேனும் காணலாம்; அவை தமிழன் னையின் செல்வங்களென ஏற்றருள வேண்டுகிறேன்.

பீளமேடு,
கோவை.

**ம. ரா. போ. குருசாமி**

௧

# வரலாற்றுக் காப்பியம்

தமிழ்ப் புலவர்களும் ஆராய்ச்சியாளர்களும் சிலப்பதி காரத்தை ஒரு வரலாற்றுக் காப்பியம் என்று கூறுகின்றனர். அவ்வாறு அவர்கள் கூறுங்கால் வரலாற்றுச் சிறப்பு – அதாவது சரித்திரத்தில் இடம் பெறத்தக்க சிறப்பு அமைந்த (Historic) காப்பியம் எனவும், நாட்டு வரலாற்று நிகழ்ச்சி களைக் கூறும் (Historical) நூல் எனவும் கருதுகின்றனர்.

தமிழ் மொழியின் இலக்கிய வரலாற்றின் நெடுஞ் சாலையை ஒரு முறை நோக்கினாலும், சிலப்பதிகாரத்தின் தோற்றமே வரலாற்றுச் சிறப்பு உடையது என்று உணரலாம்.

சங்க இலக்கியங்களில் நாம் காண்பன எல்லாம் தனித் தனி நிகழ்ச்சிகளை உதிரியாகப் பாடிவைத்துள்ள தனிப்பாடல் களாகும். அவற்றுள் பலவற்றை ஆராய்ச்சித் திறத்தோடு

கோவை செய்து நோக்கிஞல், ஒரு சில வரலாறுகள் உருவாதல் கூடும். ஒரே நெடுங்கதையை முழுவதாகக் கூறிவிடுவது என்ற வழக்கம் பெரும்பாலும் இல்லை என்றே சொல்லிவிடலாம். தனி நிகழ்ச்சிகளின் எழிலமைந்த காட்சியே எட்டுத்தொகையிலும் பத்துப்பாட்டிலும் நாம் காணுகின்றோம்.

இவ்வாறு தனிப் பாடல்களாகப் பாடிப் போற்றிவந்த தமிழகத்திலே முதன் முதல் உருவான நெடுங்கதைப் பாடல் சிலப்பதிகாரமே யாகும். இன்னொரு வகையாக இக் கருத்தைச் சொல்லலாம். சங்க இலக்கியப் பாடல்களை இக்காலத்துச் சிறுகதைகளோடு ஒப்பிடலாம்; சிலப்பதி காரத்தை இன்றைய புதினங்களோடு ஒருங்குவைத்து எண்ணலாம். இவ்வாறு தன் தோற்றத்தாலேயே சிலப்பதி காரம் வரலாற்றுச் சிறப்பு அமைந்ததாக உள்ளது.

இயல், இசை, நாடகம் என்ற முக்கூறுகளையும் தன்ன கத்தேகொண்டு விளங்கும் சிறப்பாலும் வேறு பல வகைக ளாலும் தமிழ் இலக்கிய வரலாற்றிலே முதன்மையான இடம் பெறுவது சிலப்பதிகாரம் என்ற செந்தமிழ்க் காப் பியம்.

இனி, இக்காப்பியத்தை வரலாற்று நூலாகவும் கொள்ள லாம். வரலாற்று நூல் என்ருல், மன்னர் பரம்பரையினரின் முடிசூட்டு விழாக்களையும், பிறந்து இறந்த ஆண்டுகளையும், போர் புரிந்து அழிவு செய்த நாட்களையும் குறித்துப் புள்ளி விவரம் தருவது அன்று. நாட்டில் நடந்த சில அடிப்படை நிகழ்ச்சிகளை ஆதாரமாக வைத்துப் புனைந்துரைகளைப் புகுத்தி ஆக்கப்பெற்ற நூல் என்றே இங்கே கொள்ளவேண்டும். வால்ட்டர் ஸ்காட் என்னும் ஆங்கிலப் புலவர் எழுதியுள்ள சரித்திரப் புதினங்கள் இங்கே நினைவுகூரத் தக்கன. தமிழில்

அண்மையில் வெளிவந்துள்ள பார்த்திபன் கனவு, சிவகாமியின் சபதம், வீரபாண்டியன் மனைவி முதலியன போலச் சிலப்பதிகாரமும் வரலாற்றுப் புதினமே (Historical novel) யாகும்.

சிலப்பதிகாரத்தில் எந்த எந்த நிகழ்ச்சிகள் நடந்தன என்ற ஆராய்ச்சி பயன் தராத ஒரு முயற்சியாகும். வரலாறு என்பதன் சரியான விளக்கம் என்ன? சென்ற காலத்தின் சிறப்பைமட்டும் சித்தரிப்பது சரியான சரித்திரம் ஆகாது. சிறப்பையும் சீர்கேட்டையும் சேர்த்துச் சொல்வதே நேர்மையான வரலாற்று நூலாகும். இவ்வாறு அமையும் நூலே நிகழ்கால எதிர்காலங்களின் சந்ததியார்க்கு வழிகாட்டும் வான்பொருளாய் அமைந்து வாழ்க்கைச் சாலையிலே வழுக்கி விழாமல் காப்பாற்றும் ஊன்றுகோலாக உதவும். இந் நோக்கம் கொண்டு பார்க்குமிடத்துச் சிலப்பதிகாரம் மிக உயர்ந்த வரலாற்று நூலாக ஒளிர்வதைக் காணலாம்.

சிலப்பதிகாரத்தில் உள்ள வரலாற்றுக் கூறுகள் (Historical elements) அனைத்தையும் எடுத்துக் கூறுவது இந்நூலின் நோக்கம் அன்று. இலக்கியப் பாணியிலும் வரலாற்றுத் துறையிலும் இன்றைய வாழ்க்கைக்கு விளக்கம் தரக்கூடிய சிற்சில குறிப்புகளைமட்டுமே இங்கே காணலாம் அந்தக் குறிப்புகள் யாவும் நம் வாழ்வில் ஏற்படக்கூடிய— ஏற்பட்டுள்ள — குறைகளி னின்றும் நம்மைச் சீர்திருத்திக் கொள்ள உதவும் எச்சரிக்கைகளாக இருக்கும். சுருங்கச் சொன்னால், சிலப்பதிகாரம் இன்றைய தமிழனுக்கு ஒரு வகையால் எச்சரிக்கைக் காப்பியமாக உள்ளது.

வாழ்க்கை அமைந்துள்ள பாங்கினை உள்ளது உள்ள படியே உருவெடுத்தமைப்பது இலக்கியம் என இலக்கிய ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். அது பொருத்தமான

கருத்தே யாகும். ஆயினும், வாழ்க்கையினை எதிரொளி செய்து, வாழ்வின் இதயப் பேச்சினை எதிரொலி செய்து அமைகின்ற அளவில் அமைவதினும் சீரிய நிலை ஒன்று இலக்கியத்துக்கு உண்டு. வாழ்க்கை எவ்வாறு அமைந்துள்ளது என்பதைக் காட்டுவதோடு, அஃது எவ்வாறு அமைதல் வேண்டும் என்பதையும் சுட்டுவதாக அமைவதே சீரிய இலக்கிய மாகும். உள்ளதை உள்ளவாறு கூறுதல் அரிதே; எனினும், உள்ளதை மாற்றவேண்டின் அம்மாறுதலைச் செய்தற்குரிய ஆற்றல் குறிக்கோளைச் சுட்டும் இலக்கியங்களால் தான் பெறுதல் இயலும்.

இளங்கோவடிகள் இயற்றிய சிலப்பதிகாரம் தமிழர்களுக்கு அத்தகைய உயரிய இலக்கியமாய் வாய்த்துள்ளது. சங்க காலத்தை அடுத்து வாழ்ந்த தமிழர்கள் எவ்வாறு வாழ்ந்தனர் என்பதைப் படம் பிடித்துக் காட்டுகிறார்; அந்நிலையினோடு அமையாது, எதிர்காலத் தமிழர்கள் எவ்வாறு வாழ்தல் வேண்டும் என்பதற்கான குறிப்பீடுகளையும் தூரிகை யோவியம் போன்று சுட்டிச் செல்லுகின்றார்.

வரலாறு என்பது சென்ற காலத்தில் வேர் பாய்ச்சி, நிகழ் காலத்தில் விழுது வீழ்த்தி அமையும் ஓர் ஆலமரம். அப் பெரு மரத்தின்கண் தளிர்கள் மிளிர்ந்து எதிர்கால ஆக்கத்தையும் புலப்படுத்தி நிற்கும். சிலப்பதிகாரமும் அத்தகைய ஒரு வரலாற்றுக் காப்பியமே யாகும். முக்காலத்தையும் தன்னுள் அகப்படுத்தி நின்றொளிரும் மாமணியாய்—நந்தா விளக்கமாய்—நாயகமாய்ப் பொலிவது நம் இளங்கோவடிகளின் இலக்கியம்.

உ

# பதிகமும் காவியமும்

சிலப்பதிகாரக் காவியம் நமக்குத் தெரிவிக்கும் செய்திகள் மிகப் பல. அவ்வவர் பயிற்சியின் ஆழத்திற்கும் நுண்மாண் நுழைபுலத்திற்கும் ஏற்றவாறு சிந்தையைத் திறை கொள்ளும் அச்செந்தமிழ்க் காப்பியம் நற்செய்திகள் பலவற்றைப் புலப்படுத்திக்கொண்டே செல்லும். நவில்தொறும் நயந்தரும் நூல் சிலப்பதிகாரம்; பயில்தொறும் இன்னியல் தோற்றும் பண்புடையார் இளங்கோ. நூலுள் நுழைந்து நம் காலக் கண்கொண்டு நாமே செய்திகளைத் தேரப் புகுமுன், சிலப்பதிகாரமே தன் செய்தி இதுவெனத் தெளிவுறுத்தும் இடங்கள் உண்டோ எனக் காணுதல் வேண்டும். இளங்கோ வடிகளின் காப்பிய மாளிகைக்குள் நுழையு முன்னர், அம் மாளிகையின் வரைப்படம்போல் ஒன்று முதற்கண் அழகுறப் பொலிகின்றது. சிலப்பதிகாரத்தின் முன்னுரையாய்ப்

பொலியும் பதிகம், சிலப்பதிகாரத்தின் குறிக்கோள்கள் இவைதாம் எனக் கூறுகின்றது.

## பதிகத்தின் நிலை

பதிகம் தெரிவிக்கும் சிலப்பதிகாரச் செய்தியின் விளக்கத்தைப் பார்க்கப் புகுமுன், பதிகம் பற்றிய குறிப்பினை மனங்கொள்ள வேண்டியுள்ளது. சிலப்பதிகாரத்தின் பதிகமும் நூற்கட்டுரையும், மணிமேகலையின் பதிகமும் தமிழ் ஆராய்ச்சியாளர்க ளிடையே சிக்கல்கள் பலவற்றை எழுப்பியுள்ளன. அப் பதிகங்களின் கூற்றுக்களை ஒருங்கு இணைத்துக் கண்டு, இளங்கோவடிகளும் சாத்தனாரும் ஒரு காலத்தே ஒருவரை யொருவர் அறிந்து அளவளாவி வாழ்ந்தவர் என்று கொள்வர் ஒரு சாரார். இவ்விரு நூல்களின் இயல்புகளையும், இவ்விரு காவியங்களை இயற்றி யருளிய ஆசிரியர்களின் இதயப் பாங்குகளில் உள்ள போக்குகளையும் கண்டுணரும் வேறு சில புலவர்கள் இளங்கோவடிகளும் சாத்தனாரும் ஒரு காலத்து ஒருங்கியைந்து வாழ்ந்திருத்தல் இயலாது என்று கொள்வர். இவ்விருவரையும் சமகாலத்தவராகக் கொள்ளுதற்கு அடிப்படையாக வுள்ள பதிகங்கள் பிற்காலத் தொருவரால் இயற்றப்பெற்று இரு நூல்களிலும் சேர்க்கப்பட் டிருத்தல் வேண்டும் என்பது அவர்கள் துணிபு. அன்றி, இளங்கோவடிகட்குப் பின்னர்த் தோன்றிய மணிமேகலையின் ஆசிரியரே இவ்விரு பதிகங்களையும் இயற்றிச் சேர்த்திருத்தல் கூடும் எனக் கொள்வாரும் உளர். இருவரையும் சமகாலத்தவராகக் கொள்வோரும், அவ்விருவரையும் வெவ்வேறு காலத்தவராகக் கொள்வோரும் அகச்சான்று புறச்சான்றுகளை அவ்வவர் திறனுக்கு ஏற்ப எடுத்துக் காட்டுகின்றனர். தீர்ந்த முடிபு இதுதான் என்று இதுகாறும் துணிபு ஏற்படவில்லை.

பதிகத்தின் நிலை இவ்வாறு ஐயுறுதற்கு ஏற்றதாக உள்ளது. எனினும், சிலப்பதிகாரப் பதிகத்தை இயற்றியவர்—எவரே யாயினும், எக்காலத்தவ ராயினும்—சிலம்புச் செல்வத்திலே ஊறித் திளைத்தவர் என்பதில் ஐயம் இல்லை. நூலினுள் வரும் சொற்களும் தொடர்களும் பதிக ஆசிரியரின் ஆட்சிக்கு இயைபுறக் குழைந்து போந்து பதிகச் செய்யுளை அணி செய்துள்ளன. நூலினிடத்துத் தோய்ந்த நெஞ்சினர்க்கே இத்தகைய நடைச் செல்வம் கிடைக்கும். நடை ஒருபால் இருக்க, பதிகத்தின் கூற்றுக்களை ஒருகால் பயின்றாலும் கண்ணகியார் வரலாற்றில் அவ்வாசிரியர் கொண்டிருந்த ஈடுபாடும், அத் தெய்வத்திற்குச் சொற்கோவில் சமைத்த இளங்கோவடிகளின் புலமையில் கொண்டிருந்த மதிப்பும் எளிதில் புலப்படுகின்றன.

எனவே, பதிகத் தோற்றம் பற்றிய ஐயப்பாடு எங்ஙனமாயினும், அதனுள் கூறப்படும் கருத்துக்கள் எளிதிலே புறக்கணிக்கத் தக்கனவாக இருத்தல் இயலாது.

## பதிகச் செய்திகள்

பதிகத்துள் சிலப்பதிகாரச் செய்திகளாக மூன்று உண்மைகள் குறிப்பிடப்படுகின்றன. அவை,

*அரைசியல் பிழைத்தோர்க்கு*
*அறம்கூற்று ஆவதூஉம்*
*உரைசால் பத்தினிக்கு*
*உயர்ந்தோர் ஏத்தலும்*
*ஊழ்வினை உருத்துவந்து*
*ஊட்டும் என்பதூஉம்*
*சூழ்வினைச் சிலம்பு*
*காரணம் ஆக*

*நாட்டுதும் யாம் ஓர்*
*பாட்டுடைச் செய்யுள்*

(பதிகம்: ருரு–சுய)

என்ற வரிகளின் முற்பகுதியில் புலப்படுகின்றன. அரசியலில் பிழை செய்வார் அறக் கடவுளின் ஒறுத்தலுக்கு இரையாவர் என்பது ஒரு செய்தி; புகழ்புரிந்த இல்லினராம் கற்புடைப் பெண்டிரைத் தேவரும் போற்றுவர் என்பது இரண்டாவது செய்தி; மற்றென்று சூழினும் தான் முந்துற்றுப் பெருவலியுடையதாய் ஊழ்வினை தன் பயனை ஊட்டியே செல்லும் என்பது மூன்றுவது செய்தி. பதிக ஆசிரியரின் கருத்துப்படி—அவர் சிலப்பதிகாரத்தைக் கண்டுணர்ந்த நெறிப்படி—இம்மூன்று செய்திகளையும் தெரிவிப்பதற்கே சிலம்பை மையமாக வைத்து இக் காப்பியத்தை ஆசிரியர் இயற்றினர் எனத் தெரிகின்றது.

## சிலம்பால் நிகழ்ந்தவை

இம்மூன்று கருத்துக்களும் சிலப்பதிகார ஆசிரியர்க்கு உடன்பாடே; எனினும் பதிகம் கூறுவதுபோலச் 'சிலம்பு காரணமாக' இவை நூலுள் வலியுறுத்தப் பெறவில்லை. சிலம்பு எவ்வெந் நிகழ்ச்சிகட்குக் காரணம் ஆயிற்று என்பதைச் சிலப்பதிகாரமே குறித்துள்ளது,

*தீவினைச் சிலம்பு*
*காரணம் ஆக*
*ஆய்தொடி அரிவை*
*கணவற்கு உற்றதும்*
*வலம்படு தானை*
*மன்னன் முன்னர்ச்*
*சிலம்பொடு சென்ற*
*சேயிழை வழக்கும்........*

(காட்சி. சுசு–எஉ)

இப்பகுதியி லிருந்து கண்ணகியின் கணவனுகிய கோவலன் கொலையுண்ணவும், பாண்டியன்முன் சென்று கண்ணகி வழக்காடி வெல்லுதற்குமே சிலம்பு காரணமாக இருந்ததை நாம் உணரலாம். வழக்குரைகாதையின் ஈற்றிலே காணப் படும் வெண்பாக்களில் உள்ள **'காவி உகுநீரும் கையில் தனிச் சிலம்பும்......கண்டு அஞ்சிக் கூடலான் கூடா யினன்,' 'கையில் தனிச் சிலம்பும்... வையைக் கோன் கண்டளவே தோற்றான்'** என்ற தொடர்களும் சேயிழை யின் வெற்றிக்குச் சிலம்பு காரணம் ஆயிற்று என்பதை வலி யுறுத்துகின்றன.

## ஊழும் சிலம்பும்

கோவலன் கொலைக்கும் காவலன் தோல்விக்குமே சிலம்பு காரணமாகின்றது. அரைசியல் பிழைத்தோர்க்கு அறம்கூற்று ஆவதூஉம், ஊழ்வினை உருத்துவந்து ஊட்ட லும் சிலம்புகாரணமாக நிகழ்ந்தன எனக் கொள்ள வழி யில்லை. 'அரைசியல் பிழைத்தல் காரணமாக அரசனை ஒறுத் தது அறம். அறக்கடவுளுக்கு ஒரு கருவியாயிற்று சிலம்பு.' இவ்வாறு வலிந்து கொள்வதாயின் முதற்கருத்தைத் தெரி வித்தற்கும் சிலம்பு காரணம் ஆகின்றது எனலாம். 'சிலம் பின் வென்ற சேயிழை தன் வெற்றியால் கற்பியல்பினைப் புலப்படுத்தினள்; அம்மாண்பு கண்ட யாவரும் கண்ணகி யைப் போற்றினர். எனவே உயர்ந்தோர் ஏத்தலுக்கும் சிலம்பு காரணம் ஆகின்றது.' இதுவும் வலிந்துகொள்ளும் நெறியே யாகும். இதனையும் சரி என ஏற்றுக்கொள்ளினும், மூன்ரு வதாக உள்ள ஊழ்வினை ஆற்றலுக்குச் சிலம்பு காரணம் ஆகுமாறில்லை. எவ்வெந் நிகழ்ச்சிக்கும் தான் காரணமாய் முன்னிற்கும் ஊழுக்குச் சிலம்போ காரணம் ஆகவல்லது? இதற்கும் ஏதேனும் வலிந்துகொள்ளும் விளக்கம் காணுதல் கூடும்.

## பதிகமும் காண்டப் பெயர்களும்

ஆனால், சிலப்பதிகார அமைப்பின் நெறிமுறையினை நோக்குவார்க்கு அக் காவியத்தின் சிறப்பான உள்ளுறை இம்மூன்றே என்று கொள்வது பொருந்தாது என்பது தெளிவாய்ப் புலப்படும். பதிக ஆசிரியர் இந் நூலின் தோற்றத்தைச் சுட்டும்பொழுது கண்ணகியின் கதை 'முடிகெழு வேந்தர் மூவர்க்கும் உரியது' என்று பாடுகின்றார். சிலப்பதிகாரத்தின் செந்நெறியும் இப் பொதுமைச் சிறப்பையே கலை நலம் பொலியக் காட்டுகின்றது. இதனைப் பதிக ஆசிரியர் உணர்ந்துள்ளா ராயினும், சிலப்பதிகார உள்ளுறை இவை யெனக் குறிக்கும்போது இக் கருத்தைக் கூறவேயில்லை.

சிலப்பதிகாரத்தின் மூன்று காண்டங்களும் தமிழகத்தின் முப்பெருந் தலைநகரங்களின் பெயர்கொண்டு ஒளிர்கின்றன. கதையும் 'முடி மன்னர் மூவரும் காத்து ஓம்பும்' தமிழகப் பகுதி மூன்றிலும் நிகழ்கின்றது. கதையின் நிகழ்ச்சிகள் மூன்று பகுதிகளிலும் நிகழ்ந்தன என்பதால்மட்டுமே சிலப்பதிகாரத்தைப் பாடினார் இளங்கோவடிகள் என்று சொல்லி விட இயலாது. கதை நிகழ்ச்சிகள்மட்டுமே ஆசிரியர் மனத்துள் கருதியிருப்பின் காண்டங்களுக்கு வேறு பெயர்கள் இட்டிருக்கலாம். கண்ணகியை விட்டுக் கோவலன் பிரிந்து மாதவியோடு வாழ்ந்து அவளையும் விடுத்துவந்த நிகழ்ச்சிகளைக் கூறும் முதற் பகுதியைத் தவறுணர் காண்டம் எனச் சொல்லியிருக்கலாம்; அல்லது பொறை நிலைக் காண்டம் எனலாம். அங்ஙனமே ஏனை இரு காண்டங்களையும் முறையே எரியிடு காண்டம் எனவும், தெய்வதக் காண்டம் எனவும் பெயரிட்டிருக்கலாம். அவ்வாறிடாமல் புகார், மதுரை, வஞ்சி எனத் தலைநகர்களின் பெயரோடு புணர்த்துக் குறிப்பிட்டதற்குத் தகுந்த காரணம் இருத்தல்

வேண்டுமன்றோ? புகார் நிகழ்ச்சிகள் புகார்க் காண்டத்திலும், மதுரை நிகழ்ச்சிகள் மதுரைக் காண்டத்திலும் கூறப் பட்டன எனின், வஞ்சிக் காண்ட நிகழ்ச்சிகள் வஞ்சி நகரத்திலா நடந்தன? இல்லையே! எனவே, இவ்வாறு பெயரிட்டமைக்கு வேறு தகுந்த காரணம் இருத்தல் வேண்டும். இக் காரணத்தை ஒவ்வொரு காண்டத்தின் இறுதி யிலும் உள்ள கட்டுரைப் பகுதிகள் ஒருவாறு குறிப்பாகப் புலப்படுத்துகின்றன. அக்கருத்தினைத் தெளிவுறச் சொன்னால், (பிளவுற்ற) மூன்று தமிழகமாக இல்லாமல் மூன்று பகுதிகளாலாகிய மும்மைத் தமிழகமாக ஒன்றுபட்ட காட்சியைக் காண விரும்பினார் இளங்கோவடிகள் எனலாம். கண்ணகியின் கதை இந்நோக்கத்தற்கு இயைந்த ஒன்று என்று கண்டே இளங்கோவடிகள் இதனைப் பாடினார்.

பதிக ஆசிரியர் இதனை உணர்ந்துள்ளார். எனினும், உள்ளுறை இதுவெனக் குறிக்கவேண்டிய இடத்தில் இத் தலைமைக் கருத்தைக் குறிக்காமல் வேறு எவையோ மூன்றினைக் கூறிவிட்டார்.

## காண்டங்களின் உள்ளுறை:
(பதிகப்படி)

இங்கே சிலர் ஒரு விளக்கம் தருதல் கூடும். அரைசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றுதல் மதுரைக் காண்டத்தாலும், உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோர் ஏத்தல் வஞ்சிக் காண்டத்தாலும் புலப்படுத்தப்பட்டன என்பர். ஆயின் புகார்க் காண்டத்தின் உள்ளுறை எது? பதிக ஆசிரியர் குறித்த மூன்றனுள் எஞ்சியிருப்பது ஒன்றே — ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும் என்பது. இது புகார்க் காண்டத்தின் உள்ளுறையா? மதுரைக் காண்டத்தில் இந்த உள்ளுறை இல்லை என்று சொல்ல முடியுமா? புகாரை விடுத்துப் புலருமுன்

கோவலன் கண்ணகியோடு புறப்பட்ட செய்தியைச் சொல்ல வந்த ஆசிரியர்,

*வினைகடைக் கூட்ட*
*வியங்கொண்டான் கங்குல்*
*கனைசுடர்க் கால்சீயா*
*முன்*

(கனாத்திறம். எஅ-எகூ)

என்று ஊழ்வினை உருத்துவந்து ஊட்டியதைக் குறிக்கின்றார். இவ்வாறே இதன் முன்னரும்,

*யாழிசைமேல் வைத்துத்தன்*
*ஊழ்வினைவந்து உருத்த தாகலின்*

(கானல். ருரு)

மாதவியை விட்டுக் கோவலன் பிரிந்து போனதாக இளங்கோவடிகள் குறிக்கின்றார். புகார்க் காண்டத்துத் தலைமையான நிகழ்ச்சிகள் இரண்டுக்கும் இவ்வாறு ஊழ்வினையை முன் நிறுத்திய ஆசிரியர், மதுரைக் காண்டத்திலும் அதன் வலிமையைப் புலப்படுத்துகின்றார். வளையாத செங்கோலினனாகிய பாண்டியனின் செங்கோல் வளையக் காரணமான நிகழ்ச்சியைக் குறித்த இளங்கோவடிகள் ஊழ்வலியைச் சுட்டுகின்றார்.

*வினைவிளை காலம்*
*ஆதலின் யாவதும்*
*சினையலர் வேம்பன்*
*தேரான் ஆகி*

(கொலைக்களம். கசஅ-கசகூ)

மாசற்ற கோவலனின் கொலைக்குக் காரண மாகின்றான்; ஊழ்வினையின் வலிய கரத்திலே எளியகருவியாய்க் கிடக்கின்றான்.

பாண்டியரின் வளையாத செங்கோல் வளைதற்கும் கோவலன் கொலைப்படுதற்கும் காரணமாக இருந்தது ஊழ்வினை.

*காவலன் செங்கோல்*
*வளைஇய வீழ்ந்தனன்*
*கோவலன் பண்டை*
*ஊழ்வினை உருத்தென்*
(கொலைக்களம். உகசு-உகஎ)

கொலைக்களக் காதையின் இறுதியிலுள்ள வெண்பாவும் இதே கருத்தினை வலியுறுத்துகின்றது. இதுவரையிலும் கூறிய கருத்துக்களால் ஊழ்வினை உருத்துவந்து ஊட்டும் என்ற உண்மை சிலப்பதிகாரத்தின் தலைமையான நிகழ்ச்சிகள் பலவற்றிற்குக் காரணமாக இருப்பதை உணரலாம்.

அரசியற் பிழைசெய்தோர் அறத்தின் ஒறுத்தலுக்கு இரையாவர் என்பதை மதுரைக் காண்டத்துக்கும், பத்தினிக்கு உயர்ந்தோர் ஏத்துகின்ற நிலை கிடைக்கும் என்பதை வஞ்சிக் காண்டத்துக்கும் உரிமை ஆக்கிவிட்டால், புகார்க் காண்டத்துக்கெனத் தனியாக ஓர் உள்ளுறை இல்லை என்ற குறை இருக்கும்.

## காண்டங்களின் உள்ளுறை:
(காவியப்படி)

ஒரு காவியத்தால் தெரிவிக்கப்படுகின்ற உண்மைகள் அல்லது நீதிகள் அக் காவியப் பிரிவுகட்கு இயைந்திருக்க வேண்டும் என்பது கட்டாய நியதியோ எனச் சிலர் வினவலாம். கட்டாயம் இல்லை என்பது உண்மைதான். பொதுப் படையாக உள்ள நீதிகளைத் தெரிவிப்பதே காவியத்தின் நோக்கமாயின், சிலப்பதிகார இறுதியில் வரந்தரு காதையுள்

பரிவும் இடுக்கணும் பாங்குற நீங்குமின், தெய்வம் தெளிமின் தெளிந்தோர்ப் பேணுமின் என்பன முதலாகக் கூறப்பட்டவற்றையே சிலப்பதிகாரச் செய்திகளாகக் குறித்துச் சொல்லிவிடலா மன்றோ? அங்கே பேசப்படுகின்ற நீதிகள் யாவும் உயர்ந்தன அல்லவோ? அவை யாவும் சிலப்பதிகாரத்தால் தெளியப்படுவன அல்லவோ? ஆம்; அவை யாவும் உயர்ந்தவையே. ஆனால், சிலப்பதிகாரக் காப்பிய அமைப்பின் வாயிலாகவே அதன் ஆசிரியர் ஒரு தலைமையான செய்தியைத் தெரிவிக்க நினைக்கின்றார். அத் தலைமையான கருத்தை ஒருவாறு உணர்ந்திருந்தும், பதிகத்தை இயற்றிய ஆசிரியர் அதனைத் தெளிவாகக் கூறாமல் விடுத்தார் என்பதே இங்கே நாம் காணவேண்டிய கருத்து.

முடிகெழு வேந்தர் மூவர்க்கும் உரியது இந்தக் கதை என்று சுட்டிய பதிகத்தார் அதுவே காவியத்தின் சிறப்பான உள்ளுறையாக அமைந்தது எவ்வாறு என்பதை விளக்கவில்லை. அதனை விடுத்து வேறு எவையோ மூன்றினைக் குறித்துச் சென்றார். வரந்தரு காதையுள் விரிவாகச் சொல்லப்பட்ட நீதிகள் யாவும் எவ்வாறு இளங்கோவடிகட்கு உடன்பாடோ, அவ்வாறே பதிக ஆசிரியர் குறித்த உண்மைகள் மூன்றும் அவர்க்கு உடன்பாடே. உள்ளுறைகள் பல இருக்கலாம். ஆயினும் மூன்று காண்டங்களாய்—மூவர் தலைநகர் பெயராலும் அமைந்த காவியத்தின் தலைமையான உள்ளுறை யாதேனும் ஒன்று இருக்கவேண்டு மன்றோ? அஃது எது? பதிகத்தில் தெளிவான விடை இல்லை.

இவ் வினாவுக்கு உரிய விடை சிலப்பதிகாரச் செய்திகளுள் தலைமை சான்றதாக இருக்கும். சிலப்பதிகாரக் காவியத்தின் வாயிலாகப் பத்தினி வழிபாடு என்ற ஒரு புதிய சமயத்தையே உண்டாக்கினார் இளங்கோவடிகள். புகாரிலே

பிறந்த சாதாரண மானிடப் பெண் தன் கற்பொழுக்கத்தால் தேவர்களும் போற்றுகின்ற தெய்வம் ஆயினுள். அத் தெய் வத்தின் திறத்தால் தமிழகத்து மூவேந்தருள் ஒவ்வொரு வரும் ஒவ்வோர் உண்மையை உலகுக்கு விளக்கும் நிலை பெற்றனர்.

சோழன் வாயிலாகக் கண்ணகி என்ன உண்மையைக் கூறினுள்? சோழனுக்கு அந்தத் தெய்வம்—பார் தொழுது ஏத்தும் பத்தினித் தெய்வம்—அளித்தது என்ன? அரசாட்சி முறை செம்மையாக இருந்தா லன்றித் தகைசான்ற சொற் காத்துச் சோர்விலா ராகிய பெண்டிரின் கற்பு நெறி மாண் புருது. இதனைச் சோழன் வாயிலாக உணர்த்தினுள். **'நன் னடை நல்கல் வேந்தற்குக் கடனே'**—இது பொன்முடி யார் விளக்கம். சோழனுடைய நாடு கேளிக்கையையே நாடும் நாடாய்விட்டது. செல்வத்துப் பயன் செழிக்கத் துய்த்தலே என்ருகிவிட்டது. புலனுணர்வுக்கு இரையாகும் இடத்தில் ஒழுக்கம் ஏது, கற்பு ஏது? ஆடவரினும் பெண் டிரே கற்பின் களஞ்சியங்களாய் அன்று வாழ்ந்தனர்; இன் றும் அவ்வாறே. ஆட்சி முறையிலே செம்மை இன்றேல் பெண்டிரின் கற்பு—பெருமழை தரவேண்டின் தருகிற்கும் பெருமை—வாழாது, வாழ முடியாது. மழை வளம் தருதற்கு இந்திரனை நம்பி, மனையுறை மகளிரின் மாண்பினை மறந்தது சோழநாடு. கண்ணகி போன்ற கற்புடை மகளிர் வாய் வாளாமை மேற்கொண்டொழுக நேர்ந்தது. அப்பெண்ணி னல்லாரின் தவ வலிமைபோலும் கண்ணகியாய் உருவெடுத் துச் சோணுட்டின் குறையைச் சுட்டிற்று.

இனி, பாண்டியனுக்கு அப் பத்தினித் தெய்வம் யாது அளித்தது எனக் காண்போம். அரசனுக்கு வெற்றி தருவது எது? வேலா, அன்றிச் செங்கோலா? வள்ளுவர் கூறினுர்:

*வேல் அன்று வென்றி*
*தருவது மன்னவன்*
*கோல்; அதூஉம் கோடாது*
*எனின்.*

(ருசசு)

இதையே புறநானூறு,

*கடுஞ்சினத்த கொல்களிறும்*
*கதழ்பரிய கலிமாவும்*
*நெடுங்கொடிய நிமிர்தேரும்*
*நெஞ்சுடைய புகல்மறவரும் என*
*நான்குடன் மாண்டது*
*ஆயினும் மாண்ட*
*அறநெறி முதற்றே*
*அரசின் கொற்றம்*

(புறம். ருரு)

என்று விரிவாக விளக்கிற்று. மன்னுயிர்க் கெல்லாம் மண்ணுள் வேந்தனே உயிராக இருக்கின்றான். அவன் வாழ்வின் கோணல்—ஆட்சியின் கோணலாய்—மக்களின் வாழ்வைத் தாக்குவது திண்ணம். நோயுற்று வாழ்வது தீங்கினை வளர்க்கும்; வழி தவறிய மன்னன் நாட்டைக் கெடுப்பான். அவனுக்கு மனச்சான்று இருக்குமாயின் உயிரை விடுப்பான். அறம் தழைக்கும், நாடு நலமுறும். வளைந்த கோலைத் தன்னுயிர்கொண்டு நிமிர்த்திய பாண்டியன் வாயிலாக இச் செங்கோன்மைச் சிறப்பினைக் குறித்தாள் கண்ணகி.

நன்னடை நல்கலும், கோன்முறை காத்தலும் ஆகிய இரண்டு பண்புகளோடு மன்னர் அமைதல் போதாது. இவை இரண்டையும் போல மற்றொரு பண்பும் மன்னுயிர் ஓம்பும் மன்னர்க்கு வேண்டும். இவ்விரு மாண்பு பெற்றிருந்தும்

உறுதியற்ற நெஞ்சினராய் வாழ்ந்தால் பிற நாட்டாரின் இகழ்ச்சியே கிடைக்கும். ஒழுக்கமும், ஒழுங்கும் வீரத்தால் சிறப்புறுவன. வீரம் இல்லாதாரிடத்து அமைந்துள்ள ஒழுங்கும், ஒழுக்கமும் கோழைமை என்று பழிக்கப்பட இடனுண்டு. அதற்கு இடந்தருதல் ஆளுகின்ற மன்னன், ஆளப்படும் மக்கள் யாவருக்கும் இழுக்குத் தருவதாகும். இழுக்கை நீக்க வல்ல வீரத்தைச் சேரன் வாயிலாக விளக்கினுள் பத்தினித் தெய்வம்.

சோழ நாட்டில் முகிழ்த்து, பாண்டி நாட்டில் மலர்ந்து, சேர நாட்டில் மணம் பரப்பிய கண்ணகி என்ற கற்பு நறுமலரின் முழு வரலாற்றையும் விவரித்த இளங்கோவடிகளே இங்கே குறித்த கருத்துக்களைத் தருகின்றுர். வஞ்சிக் காண்டத்து நடுகற்காதையுள் ஒளிர்கின்ற வரிகள் தந்த கருத்துக்களே இவை:

*அருந்திறல் அரசர்*
*முறைசெயி னல்லது*
*பெரும்பெயர்ப் பெண்டிர்க்குக்*
*கற்புச் சிறவாதெனப்*
*பண்டையோர் உரைத்த*
*தண்டமிழ் நல்லுரை*
*பார்தொழுது ஏத்தும்*
*பத்தினி யாகலின்*
*ஆர்புனை சென்னி*
*அரசற்கு அளித்துச்*
*செங்கோல் வளைய*
*உயிர்வா ழாமை*
*தென்புலங் காவல்*
*மன்னவற்கு அளித்து*
*வஞ்சினம் வாய்த்தபின்*
*அல்லதை யாவதும்*
*வெஞ்சினம் விளியார்*
*வேந்தர் என்பதை*

*வடதிசை மருங்கின்*
*மன்னவர் அறியக்*
*குடதிசை வாழும்*
*கொற்றவற்கு அளித்து*

(நடுகல்: உ0ஏ—உகஏ)

மூன்று காண்டத்து நிகழ்ச்சிகளினூடு வெளிப்படையாகவும் மறைமுகமாகவும் உயிர்நாடியாய்ப் பொலிகின்ற கண்ணகி யின் வாழ்க்கை எவ்வாறு முடிகெழு வேந்தர் மூவர்க்கும் உரியதாயிற்று என்பதை இப்பகுதி மிகத் தெளிவாகக் காட்டு கின்றது.

பதிகத்துள் சுட்டப்பட்டதாயினும், அதனை எழுதிய ஆசிரியர் விளக்க மறந்துவிட்ட கருத்து இது. மூவர்க்கும் இன்னும் என்னென்ன இக் காவியம் தெரிவிக்கின்றது? இதன் விடையைப் பிற கட்டுரைகளில் காணலாம்.

சிலப்பதிகாரச் செய்யுள் வேலையற்ற சோம்பேறியின் பொழுதுபோக்கிலே தானே உதிர்ந்துவிட்ட வெற்றுரை அன்று. சீரமைந்த வாழ்க்கை சிறப்புற அமைய வழிவகுத்த செந்தமிழ்க் காப்பியம் சிலப்பதிகாரம். தமிழர் வாழ்க்கை யிலே இருந்த நிறைவைப் பாராட்டி, குறைவை எடுத்துக் காட்டி, ஐந்தொகை வகுத்த தணிக்கையாளர் இளங்கோ, வாழ்க்கை இவ்வாறு இருந்தது என்று படம் பிடிக்கும் நிழற் படமாகவோ, கண்ணாடியில் தெரியும் எதிர்ப்பிழம்பாகவோ மட்டும் சிலப்பதிகாரம் அமையவில்லை. வாழ்க்கை இவ் வாறு அமைதல் வேண்டும் என்ற குறிக்கோளையும் புலப் படுத்துகின்ற வண்ண ஓவியமாய்—மங்கா ஒளிபடைத்த காவியமாய்—தமிழன்னையின் திருவடியில் பொருந்தித் தமி ழினத்தின் நடையும், நடத்தையும் இவையென ஒலிக்கும் சிலம்பாய்ப் பொலிவது சிலப்பதிகாரம்.

## ௩

# இயற்கை இறந்த நிகழ்ச்சிகள்-1

கற்பனையை இரண்டு வகைப்படுத்திக் கூறலாம். உள்ளது புனைதல் என்பது ஒருவகை; இல்லது புனைதல் என்பது மற்றொரு வகை. வாழ்க்கையில் நடக்கக்கூடிய—நம்பக் கூடிய—நிகழ்ச்சிகளைக் கற்பித்துக் கூறுவது உள்ளது புனைதலாகும். எளிதிலே காணமுடியாத அல்லது காணவே முடியாதவற்றைக் கற்பனைக் காட்சியில் காட்டுவது இல்லதுபுனைதலாகும். உயர்வு நவிற்சி என்ற பண்பு மேற்கூறிய இரண்டு வகைகளிலும் இடம்பெறுதல் கூடும். மனித எல்லைக்கு அப்பாற்பட்ட கூறுகள் (Supernatural elements) பின்னதாகிய இல்லது புனைதலால் ஏற்படுபவை. தேவர்கள் தோன்றுதல் போன்ற நிகழ்ச்சிகளை இதற்கு எடுத்துக்காட்டுகளாகக் கூறலாம். வாழ்க்கையின் எல்லைமீறிய நிகழ்ச்சிகளைப் புலவர்கள் ஏன் கூறுகின்றார்கள் என்பது மிகச் சிக்கலான கேள்வி.

அதுபற்றி ஆராய்வது தனி ஒரு கட்டுரையாக விரியும். இவ்விடத்தில் ஒன்றுமட்டும் மனங்கொள்ளத் தக்கது. எல்லை மீறிய நிகழ்ச்சிகள் யாதேனும் ஒரு நற்பயன் கருதியே புலவரால் புகுத்தப் பெறுகின்றன என்பதை உணர்தல் வேண்டும்.

சங்க இலக்கியப் பாடல்களில் இத்தகைய எல்லை மீறிய நிகழ்ச்சிகளைக் காணுதல் அரிது. அகநானூற்றிலே ஒரு நிகழ்ச்சி கூறப்படுகின்றது. கடல் கடந்து இலங்கை ஏகு முன்னர் ஆலோசனைக்காக ஓர் ஆலமரத்தி னடியில் இராமன் முதலியோர் குழுமியுள்ளனர். அம்மரத்தில் இருந்த பறவைகளின் ஒலியை இராமன் தன் கை கவித்து அடக்குகிறான். இந்நிகழ்ச்சி எல்லை மீறியதுதான். இத்தகைய நிகழ்ச்சிகள் சங்க இலக்கியத்தில் மேலும் ஒன்றிரண்டு இருக்கலாம்; அவ்வளவே.

சங்க இலக்கியத்தின் பின்னர்த் தமிழக வரலாற்றிலே மிக மிகப் பெரிய மாறுதல்களும் மாறுபாடுகளும் தோன்றலாயின. இந்தக் குறிப்பை உணராவிடில் பிற்காலத்து இலக்கிய அமைப்பைப் புரிந்துகொள்வதே முடியாது. எடுத்ததற்கெல்லாம் இல்லது புனைவதையே இயற்கையாகக்கொண்ட காலம் ஒன்று தமிழ் இலக்கிய வரலாற்றிலே ஏற்பட்டது. சங்க காலம் தென் துருவம் என்றால் இங்கே குறிப்பிட்டது வடதுருவம் ஆகும்.

பிற்காலத்து இல்லது புனைதலுக்கும் சங்க இலக்கியத்தின் உள்ளது புனைதலுக்கும் இடைப்பட்ட காலத்துப் பண்பினைச் சிலம்பிலே காணலாம். இல்லது புனைதலைத் தமிழ் மொழியின் ஓர் உத்தியாக ஆக்கிய முதல் காப்பியம் சிலப்பதிகாரமே ஆகும்.

முதல் தொடர்நிலைச் செய்யுளாகிய சிலப்பதிகாரத்துள் வருகின்ற எல்லை மீறிய நிகழ்ச்சிகளுக்குத் தகுந்த விளக்கங்

கள் கூறலாம். ஒன்றிரண்டு நிகழ்ச்சிகளின் விளக்கத்தைத் தருமுன்னர் ஓர் எச்சரிக்கை செய்யவேண்டி யுள்ளது. புராணகால இலக்கியங்களின் பண்பிலே ஊறிவந்த நம்மிடம் ஒரு தீய வழக்கம் உள்ளது. ஏதோ ஒரு கருத்தை விளக்கு தற்குக் கற்பனை எழுகின்றது என்ற உண்மையை மறந்துவிடு கின்றோம்; அம் மறதியால், கருத்தை விடுத்துக் கற்பனை யையே கொண்டாடுகின்றோம். இப்பண்பே இன்றைய நம் சீரழிவுக்கு ஓரளவு பொறுப்பாகின்றது. இந்நிலை உணர்ந்தே வள்ளலார் 'கலையுரைத்த கற்பனையே நிலையெனக் கொண் டாடும் கண்மூடி வழக்கமெலாம் மண்மூடிப்போக' என்று பாடினார். கற்பனையைப் போற்றுவதோடு நின்றுவிடாமல் கற்பனையைத் தோற்றுவித்த கருத்து யாது என்று உணர முயல்வதே அறிவுடையோர் செயலாகும்.

## மதுரை எரிந்தது

மதுரையம் பதியைக் கண்ணகி எரித்திருக்க முடியுமா? பகுத்தறிவின் 'நுனிக்கொம்பர்' ஏறியுள்ள நம்மனோர்க்கு இவ்வினா எளிதிலே தோன்றிவிடுகின்றது. இவ் வினா எழுவ தற்குக் காரணமே கற்பனையின் அடிப்படைக் கருத்தைக் காண இயலாமையே யாகும். அடிப்படையிலே என்ன கருத்து இருக்கும் என்பதை உணர்வதற்கு ஆன்றவிந்தடங் கிய கோட்பாடும், நடுவு பிறழாத நன்னெஞ்சமும் வேண்டும். மதுரை எரியுண்ட கற்பனைக்குப் பேராசிரியர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் கூறிய விளக்கத்தை இங்கே காணலாம்.

தமிழ்ச் சமுதாயத்தில் மட்டு மன்றி உலகச் சமுதாயம் அனைத்திலுமே ஒரு குறை உள்ளது. அக்குறை ஒழியும் வரை சிலப்பதிகாரங்கள் உலகெங்கணும் நடந்த வண்ண மாகத்தான் இருக்கும்; வேறு வழி இல்லை. அக்குறைபாட்

டால்தான் மதுரை எரியுண்டது. மதுரைமட்டுமோ எரிந் தது? இல்லை. உலகமே ஒரு பெண்ணின் சீற்றத்துக்கு இரையாயிற்று. அன்றுமட்டுமோ இப்பெருந் தீ பரவியது? இல்லை. அன்று பற்றியது இன்று வரையிலும் பரவியுள்ளது. இனியும் வளரக்கூடும். அழியாத இக்கனலை அழிக்கும் ஆற்றலை மனிதர்கள் தேடவேண்டும் என்ற எச்சரிக்கையைப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே இளங்கோவடிகள் தம் சிலப்பதிகார வாயிலாக விடுத்துள்ளார். ஆயினும் இது காறும் தக்க பயன் விளையவில்லை.

உலகம் முழுவதுக்குமே ஓர் அடையாளமாகச் சிலப்பதி காரத்தில் வந்துள்ளது மதுரை. உலகின் சுருங்கிய வடிவ மாகிய மதுரையை எரிக்கக் காரணமாக இருந்த சமுதாயக் குறை யாது?

பெண்களிடையே இரண்டு முரண்பட்ட பிரிவுகளை ஏற் படுத்தியதே அப்பெருங் குறையாகும். குடும்ப வாழ்வையும் கலை வாழ்வையும் தனித் தனியாகப் பிரித்தனர். குடும்பப் பெண்டிர் ஆடல் பாடல் போன்ற கலைத்துறை முயற்சிகளில் ஈடுபடுவது இல்லை. கலைத்துறை மகளிர் குடும்பப் பெண்டிர்க் குரிய நல் வாழ்வை ஏற்கும் தகுதியும் உரிமையும் மறுக் கப்பட்டனர். பொருள் படைத்த ஆடவர் தம் கேளிக்கைக்கு உரிய பொருள்களினோடு ஒருங்குவைத்துப் பெண்களையும் கரு தினர். குடும்பக் கடமையையே பெரிதாகப் போற்றினர் குல மகளிர்; கலைக் கவர்ச்சியையே துணையாகக் கையாண்டனர் கலைத்துறை மகளிர். குல மகளிர் என்றும், கலை மகளிர் என்றும் ஆடவரின் பொருளாதிக்கம் இரண்டு பிரிவுகளைப் பெண்களிடையே ஏற்படுத்தியது. முன்னேற்றக் கருத்துக் கள் முழக்கப்படுகின்ற இக்காலத்திலும் பெண் உலகுக்கு ஏற்பட்ட இவ் விழுக்கு ஒழிந்தபா டில்லை. இந்த மாசு துடைக்

கப்பட்டால் சிலப்பதிகாரம் விடுத்த எச்சரிக்கை பயன்பட்ட தாகும்.

கடமை வாழ்வை மேற்கொண்டவள் கற்பரசி கண்ணகி; குலமகளிர்க் குற்ற பண்பனைத்தும் குறைவறப் பெற்றவள்· கொள்ளை அழகு குலவிய வடிவம்; கற்பின் இமயம்; பெண் ணுலகு போற்றிய புகழினள்; குண மலையான காதற் பண் பினள். இளங்கோவடிகள் இயம்புகின்றார்:

*போதிலார் திருவினாள்*
*புகழுடை வடிவென்றும்*
*தீதிலா வடமீனின்*
*திறம்இவள் திறம்என்றும்*
*மாதரார் தொழுதேத்த*
*வயங்கிய பெருங்குணத்துக்*
*காதலாள்.................*

(மங்கல வாழ்த்து: உசு—உகூ)

இப்புகழ்மாலை ஆசிரியர் கூற்றாக அமைந்தது. இனி, கோவ லனும் அவள்தன் அழகை அறியாதவன் அல்லன். அவ ளுடைய அழகின் மயக்கிலே ஊன்றி நின்று அவன் பாராட் டிப் பேசிய இன்மொழிகளை விரிவாகச் சொன்ன இளங்கோ வடிகள்

*'உலவாக் கட்டுரை*
*பலபா ராட்டி*

(மனையறம்: அக)

யதாக இறுதியில் கூறுகின்றார். (கோவலன் பாராட்டு மிக நீண்டது; விரிவஞ்சி இங்கே சொல்லவில்லை. மனையறம் படுத்த காதை ௩அ—அ0 வரிகளில் காணலாம்). அழகனும்

அழகியும் கலந்த வாழ்வு; ஆகையால்தான்,

*தயங்கிணர்க் கோதை*
*தன்னொடு தருக்கி*
*வயங்கிணர்த் தாரோன்*
*மகிழ்ந்து.............*

(மனையறம்: அஉ-அரு)

வாழ்ந்ததாக ஆசிரியர் கூறுகின்றார். மனையறம்படுத்த காதை இறுதியில் உள்ள வெண்பா கோவலன்—கண்ணகியரின் இன்பியல் வாழ்வைத் தெளிவாகக் காட்டவல்லது:

*தூமப் பணிகளொன்றித்*
*தோய்ந்தா லெனஒருவார்*
*காமர் மனைவியெனக்*
*கைகலந்து—நாமம்*
*தொலையாத இன்பமெலாம்*
*துன்னினார்—மண்மேல்*
*நிலையாமை கண்டவர்போல்*
*நின்று*

'கவவுக்கை ஞெகிழாது' வாழத் தொடங்குவதும், இணை பிரியாது இருப்பதும் பருவத்தின் ஆற்றலால் முதலில் இருத்தல் கூடும். ஆயின் சில ஆண்டுகள் அளவில் வெறும் பருவ வேகம்மட்டும் நிற்றல் இயலாது. கண்ணகியின் பண்பாற்றலும் எழிலாற்றலுமே அவள்தன் இல்லறத்தை 'வடு நீங்கு சிறப்பின் மனையக'மாக ஆக்கின. எழிலார்ந்த மனைவியோடு இன்பமாக வாழ்ந்த கோவலன் சில ஆண்டுகள் ஆனபின்னர்ப் பிரியக் காரணம் என்ன ?

ஆண் மகன் தீயவனாக இருப்பின் மனைவியைப் பிரிந்து வேறு மகளிரை நாடுதல் கூடும். ஆனால், சிலப்பதிகாரத்

தின் தலைவனாகிய கோவலனே நற்பண்பு வாய்ந்த நம்பியாகக் காட்சி யளிக்கின்றான். அடைக்கலக் காதையில் மாடல மறையோன் கோவலனைப் புகழ்ந்துரைக்கும் ஒரு பகுதியே நம் கதைத் தலைவனின் சிறப்பைப் புலப்படுத்தப் போதுவ தாகும். கருணையும் மறமும் ஒருங்குபெற்று உயர்ந்தோங்கிய அவன் நற்பண்புகளை யெல்லாம் தொகுத்துக் கூறியபின் இறுதியில்,

*'இம்மைச் செய்தன*
*யான்அறி நல்வினை*
*உம்மைப் பயன்கொல்*
*ஒருதனி உழந்துஇத்*
*திருத்தகு மாமணிக்*
*கொழுந்துடன் போந்தது'*

(அடைக்கலம்: ௬௬—௬௯)

என்று மறையோன் வினவுகின்றான். கண்ணகியுடன் கான் வழியே போந்து துயரடைந்தமைக்கு முன்பிறப்பிற் செய்த தீவினையே காரணமாக இருக்கவேண்டும் என்று மாடலன் கருதுகின்றான். இவ்விடத்தில் ஓர் ஐயம் எழலாம். கண்ணகி தவிரப் பிறரிடத்துமட்டுமே இரக்கமும் இனிய பண்பும் கொண்டு கோவலன் ஒழுகி யிருத்தல் கூடாதோ எனச் சிலர் எண்ணுதல் கூடும். சற்று எணணிப் பார்ப்பார்க்கும் இந்த ஐயம் பொருத்தமற்ற தெனத் தெளிவாகப் புலப்படும். மாத வியை விடுத்து மீண்டபின் கண்ணகியின் 'வாடிய மேனி வருத்தங் கண்'டதி லிருந்து வானுலகம் எய்துங்காறும் கோவலனின் செயல்களையும் சொற்களையும் கூர்ந்து நோக்கி னால், கண்ணகியிடத்து அவன் எத்துணை இனியனாக இருந் தனன் என்பது தெளிவாகும். புறஞ்சேரியிறுத்த காதையில்

வரும் ஓர் இடம் மட்டும் இங்கே காணலாம்:

*புரிநூல் மார்பர்*
*உறைபதிச் சேர்ந்து*
*மாதவத் தாட்டியொடு*
*காதலி தன்னை ஓர்*
*தீதுதீர் சிறப்பின்*
*சிறையகத் திருத்தி*
*இடுமுள் வேலி*
*நீங்கி ஆங்கோர்*
*நெடுநெறி மருங்கின்*
*நீர்தலைப் படுவோன்*
*காதலி தன்னொடு*
*கானகம் போந்ததற்கு*
*ஊதுலைக் குருகின்*
*உயிர்த்தனன் கலங்கி*
*உட்புலம் புறுதலின்*
*உருவம் திரியக்*
*கட்புல மயக்கத்துக்*
*கௌசிகன் தெரியான்*

(புறஞ்சேரி: ௩௯—௪௭)

இவ்வடிகளில் அடையாளம் காண முடியாத படி உருமாறி இருந்தனன் கோவலன் என்ற செய்தி தெரிவிக்கப்படுகின்றது; இச் செய்தி பெரிதும் கருதுதற்கு உரியது. காரணமும் இளங்கோவடிகளே கூறியுள்ளார். 'கண்ணகியோடு கடுங்கானக வழியில் வந்துவிட்டோமே, அவள் மென்மைக்கு ஏலாத இச்செயலை மேற்கொண்டோமே' என்ற துயரம் கோவலனை வாட்டிற்று. அந்த உள்ளத் துயர் காரணமாக மேனி வாடி உருவமே மாறிப்போனான். மண்மகள் அறிந்திலா வண்ணச் சீறடி வருந்துமே என்று துயர்ப்படும் கோவலன்,

கண்ணகிமாட்டு இரக்கமும் இனியபண்பும் கொண்டவனல்லன் என்று கருதுவது தவறே யன்றோ?

இவ்விடத்து வேறு ஒரு தடை எழலாம். மாதவியை விட்டு நீங்கிய பின்னர்க் கண்ணகியிடத்துக் கோவலன் நெஞ்சு ஈர்க்கப்பட் டிருத்தல் கூடும் என்று சிலர் எண்ணலாம். இந்தத் தடையும் பொருந்தாததே யாகும். ஏனெனில், மாதவிபால் விடுதலறியா விருப்பம் கொண்டு வடு நீங்கு சிறப்பின் தன் மனையகம் மறக்குமுன்னரும் கண்ணகியிடத்துக் கடுமையாகக் கோவலன் நடந்துகொண்டதாக எவ்வகையான குறிப்பும் கிடையாது. கோவலன் கண்ணகியின் நலம் பாராட்டிய வகையினை விளக்கிச் சொன்னவுடன் அவர்கள் இருவர்க்கும் தனிமனை ஏற்படுத்திய செய்தியைச் சில வரிகளில் சொல்லி, இளங்கோவடிகள்

*யாண்டுசில கழிந்தன*
*இற்பெருங் கிழமையின்*
*காண்தகு சிறப்பின்*
*கண்ணகி தனக்கென்*

(மனையறம்: அகூ—கூ0)

என்று மனையறம்படுத்த காதையை முடிக்கிறார். இந்தச் சில யாண்டுகளில் வேறு எவ்விதமான துயர நிகழ்ச்சிகளும் நடைபெறவில்லை என்பதே ஆசிரியர் குறிப்பு. கண்ணகியைக் கோவலன் வெறுப்பதற்கு எவ்வகையான காரணமும் இருக்க முடியாது.

*'...........................யாவதும்*
*மாற்ரு உள்ள வாழ்க்கையேன்'*

(கொலைக்களம்: அக—அஉ)

என்று தன்னைப்பற்றிக் கண்ணகி கூறிக்கொள்வது பொய்

யுரை யன்று; பொருளுரையே. சிலம்பின் நிகழ்ச்சிகளை ஊடுருவி நோக்கின் இவ்வுண்மை புலப்படும். தன் பண்பால் மண்ணக மாதர்க்கு அணியாய கண்ணகியைக் கோவலன் வெறுப்பதற்குக் காரணம், சிந்தனையின் களங்கத்தோடு நோக்கும் சிலருடைய சீரழிந்த அறிவிலே எழக்கூடும்; சிலப்பதிகாரத்தில் கிடையாது.

இதுவரை பார்த்தவற்றால் கோவலனும் தீயனல்லன், கண்ணகியும் தீயளல்லள் என்பது தெளிவாக விளங்கும். எனவே, கண்ணகியைப் பிரிந்து கோவலன் மாமலர் நெடுங்கண் மாதவியை அடைய வேறு ஏதாவதுதான் காரணம் காணவேண்டும். இன்னதுதான் காரணம் என்று வெளிப்படையாகச் சொல்லவில்லை, குறிப்பாகச் சுட்டுகிறார் இளங்கோவடிகள்.

கண்ணகி—கோவலன் வாழ்விலே இணக்கத்தைஅன்றிப் பிணக்கம் ஒரு சிறிதும் காண இயலவில்லை. உடலழகும், உயர்வாகிய உள்ளப் பண்பும் கொண்டிருந்தாள் கண்ணகி. அவளைக் குறிப்பிடும் இடங்கள் பலவற்றில் 'காதலி' என்ற சொல்லாலேயே இளங்கோவடிகள் குறிப்பிடுகிறார். கோவலனையும் பல இடங்களில் 'காதலன்' என்று குறித்துள்ளார் அழகு இருக்கிறது; பண்பு நலன்உள்ளது; காதலும் காணுகின்றோம். ஆயினும் பிரிவு ஏற்படுகின்றது. ஏன்?

வள்ளுவர் சொன்ன உண்மை இங்கே நினைவுகூரத் தக்கது.

*உப்பமைந் தற்றால் புலவி* (கங0உ)

இப்பேருண்மை காதலுலகின் தெளிவுரையாகும். 'விருந்தே காமம்' என்று கூறிய சங்கப் பாடலின் கருத்து யாது?

'புதுமை; புதுமை; எப்போதும் எவ்விடத்தும் புதுமையாக இருப்பதே காதல்' என்பதுதானே? காதலிலே என்றும் புதுமை காணவேண்டுமாயின் ஊடல் வேண்டும்.

*ஊடுதல் காமத்திற்கு இன்பம்* (கங௩0)

என்பது வள்ளுவர் வாய்மொழி. காமமே இன்பம்தான்; அதற்கும் இன்பமாய் அமைவது ஊடுதல். உண்ணும் பண்டத்திற்கு உப்பு; உயர்ந்த காதலர் வாழ்வுக்கு ஊடல்.

இந்த ஊடலை உரிமையுடைய காதலரிடையே காண முடியும். அடிமைக் காதலரிடத்தே காணுதல் இயலாது. கண்ணகியைக் கோவலன் அடிமையாக்கிய தில்லை; ஆனால், உரிமை கொண்டாடும் செயலைக் கண்ணகி மேற்கொள்ள வில்லை. கணவனைத் தெய்வமாகக் கொண்டொழுகிய செயலைத்தவிரக் காதலனும் ஒரு மனிதன் என்ற நிலையிலே கோவலனை அவள் கருதியதாகவே தெரியவில்லை. கண்ணகியினிடத்து ஊடலை நீக்கிக் கூறிய இளங்கோவடிகள்,

*நிலவுப் பயன்கொள்ளும்*
*நெடுநிலா முற்றத்துக்*
*கலவியும் புலவியும்*
*காதலற்கு அளித்து*

(அந்திமாலை: ௩க–௩உ)

எனவும்,

*கூடலும் ஊடலும்*
*கோவலற்கு அளித்து*

(கடலாடு: க0கூ)

எனவும்,

*கலவியால் மகிழ்ந்தாள்போல்*
*புலவியால் யாழ்வாங்கி*

(கானல் வரி: உச)

எனவும் மாதவியைப் பற்றிக் குறிப்பிடுவது ஆழ்ந்த சிந்தனைக்கு உரியது. இந்த ஊடற் பண்பு கோவலன் கண்ணகியரிடையே இருந்திருக்குமாயின் மாதவிக்கு வேலையில்லை; சிலம்புக்கும் பணி இல்லை.

கண்ணகியிடத்து இப்பண்பு இல்லாமைக்குக் காரணம் என்ன? காதற் பண்பில் நிறைந்த அவளுக்கு ஊடல் இயலாததோ? இந்தச் சிந்தனை அந்தப் பழைய காலத்துச் சமூகத்தை ஆராயத் தூண்டும். சமூகத்திலேயே இருந்த குறையால் குலமகளாகிய கண்ணகியிடத்து ஊடல் இல்லையாயிற்று? அல்லது அக்காலச் சமூகத்தில் ஊடலுக்குத் தடையில்லாதிருந்தும் கண்ணகியிடத்தில்மட்டும் அப்பண்பு இல்லாமல் போயிற்று?

பழைய தமிழகத்துச் சமுதாயம் ஊடலுரிமையைக் குலமகளிர்க்கு மறுத்ததில்லை. பாண்டிய மன்னனின் தேவி ஊடிய செய்தியைச் சிலப்பதிகாரத்திலேயே காணுகின்றோம். எனவே, ஊடலுரிமையைக் கையாள்வதன் மூலம் காதலைப் புதுமை மாறா வண்ணம் செய்யாதது கண்ணகியின் குறையேயாகும்.

கண்ணகியைக் குறையுடையள் என்று குறிப்பிடுவது கண்டு, பலர் மனம் நொந்துபோதல் கூடும். அவர்கட்கு விளக்கம் ஒன்று தரும் கடப்பாடு உண்டு. இலக்கிய ஆராய்ச்சித் துறையில் ஈடுபடுவோர் பாத்திரங்களின் நிலைகட்கு அவ்வப் பாத்திரங்களின் செயல்களிலேயே இயைபு

காண முயலுதல் வேண்டும். இவ்வாறு நோக்குமிடத்து, கோவலன் — கண்ணகியர் பிரிவுக்கு அவர்தம் செயல்களி டையே காரணம் காணல் வேண்டுமென்பது தெளிவாகும். கோவலன் நிலை ஒருபால் இருக்க, கண்ணகியும் பிரி வுக்கு ஒருவாறு பொறுப்புடையவள் ஆகின்றாள் என் பதே இங்கு உள்ள குறிப்பு. கண்ணகி குறையுடையள்; குற்றம் உடையள் அல்லள். மானிடர்களின் நிலைகட்கு அவ்வவரின் பண்பின் கூறுபாடே அடிப்படையாம். கண்ணகி தலைவனை உயிரொடு பறிகொடுக்க நேர்ந்தமைக்கு அவள் மாட்டிருந்த குறை காரணம் ஆதல் கூடும்.

கோவலன் ஓர் உணர்ச்சிப் பிண்டம்; கலைத்துறையிலே கருத்துச் செலுத்தியவன். எந்த மனிதனுக்குமே புதுமையில் நாட்டம் இருக்குமெனில், உணர்ச்சி வயத்தனாய்க் கலை வாழ்வு வேட்பவனாய் இருந்த கோவலனைப் பற்றிச் சொல்வா னேன் ?

ஊடலற்ற காதல் வாழ்வு; புதுமை மெருகு மாறிவரும் நிலை; யாண்டுகள் சில கழிந்துவிட்டன. இந்நிலையில் கலை உள்ளே புகுகிறது, மாதவியின் வடிவிலே.

*ஆடலும் பாடலும்*
*அழகும் என்று இக்*
*கூறிய மூன்றின்*
*ஒன்றுகுறை படாமல்*

(அரங்கேற்று: அ–கூ)

மாதவி சிலம்பின் அரங்கிலே ஏறிக் காட்சி யளிக்கின்றாள். உணர்ச்சி என்னும் ஊஞ்சலிலே திளைக்கின்ற கோவலனு டைய வாழ்விலே மாதவி வாராதிருந்தாலும் இறுதிவரையில்

கண்ணகியோடு வாழ்ந்திருப்பான் என்று சொல்ல முடியாது. மாதவி இல்லாவிடில் இன்னொரு மங்கை வந்தே ஆக வேண்டும். அந்தக் காலத்துச் சமுதாயத்தில் இருந்த பெருங் குறை அதுதான். பணம் படைத்தவர் வாழ்விலே அந்தக் குறை ஆதிக்கம் செலுத்தியது. குலமகளிரிடத்து நிறைவு காணுத குபேரர்கள் கலைமகளிரை நாடினர். அங்கே புதுமை கண்டனர்; திளைத்தனர். இந்தக் குறையே மதுரையை எரித்தது.

புகாரிலே எழுந்த தீ பரந்துவந்து மதுரையை எரித்தது. புகார் எரியாமல் மதுரை எரியக் காரணம் என்ன? புகார் மட்டு மல்லாமல் எங்கணும் இருந்த குறையைப் புலப் படுத்தவே புகாரின் நெருப்பு மதுரைக்கு வந்து பொசுக்கியது.

குல ஒழுக்கத்தையும் கலை வாழ்க்கையையும் பிரித்து வைத்ததால் மதுரை எரிந்தது என்பதற்கு வேறு சான்று உண்டா ? உண்டு. கண்ணகி—கோவலன்—மாதவி ஆகிய மூவர் வாழ்வின் நிகழ்ச்சிச் சூழலால் கருவாகி உருவெடுத்த கருத்தை மதுரையிலே சுருக்கமாகக் காட்டுகின்றுர், இளங்கோவடிகள்.

பாண்டியன் அரங்கிலே கலை நிகழ்ச்சி; அந்நிகழ்ச்சி களிலே கலந்துகொண்ட மகளிரின் தோற்றத்தில் மன்னவன் உள்ளம் பறிபோகிறது. பாண்டிமாதேவி இதனைக் காணு கின்றுள். விளைவு? ஊடல். அதை வெளியே காட்டவில்லை. 'தலை வலிக்கிறது' என்று காரணம் காட்டி எழுந்து போய் விடுகிறுள். மன்னவனுக்கு விளங்குகிறது; அவ் விளக்கம் மனக்கவலையைத் தருகிறது. ஊடலை நீக்க விரைகிறுன் அந் தப்புரம் நோக்கி. இந் நிலையில் வருகிறுன் பொற் கொல்லன். ஊடல் நீக்கமே குறிக்கோளாய்ச் செல்லும் மன்னனுக்கு அறிவிலே தெளிவில்லை. கொலை நேர்கிறது — மதுரை

கொளுத்தப்பட.

*கூடல் மகளிர்*
*ஆடல் தோற்றமும்*
*பாடற் பகுதியும்*
*பண்ணின் பயங்களும்*
*காவலன் உள்ளம்*
*கவர்ந்தன என்றுதன்*
*ஊடல் உள்ளம்*
*உள்கரந்து ஒளித்துத்*
*தலைநோய் வருத்தம்*
*தன்மேல் இட்டுக்*
*குலமுதல் தேவி*
*கூடாது ஏக*
*மந்திரச் சுற்றம்*
*நீங்கி மன்னவன்*
*சிந்தரி நெடுங்கண்*
*சிலதியர் தம்மொடு*
*கோப்பெருந் தேவி*
*கோயில் நோக்கி.........*

(கொலைக்களம்: கஉக—கஉகூ)

என்று வரும் அடிகளை ஊன்றி நோக்கின், புகார்த் தீ கூட லுக்கு வந்ததை உணரலாம்.

குல மகளிர்க்கு வேண்டாதது என ஒதுக்கிய கலை— விலை மகளிர்க்கே உரியது என விதித்த கலை என்ன செய்தது? மதுரையை எரித்தது. குல ஒழுக்கத்துக்கு முரண்பட்டதா யும் விலைக்குரிய வாணிகச் சரக்காயும் கலை உள்ளவரையிலே கோவலரும் கண்ணகியரும் மாதவியரும் திரும்பத் திரும்ப

வருவர்; ஒரு மதுரை யன்று; மதுரைகள் பற்பல எரியும். பெண்ணுலகின் நெஞ்செரிச்சல் கொளுத்துகின்றது சமூக அமைப்பை. அந்தக் காலத்துச் சமூகத்துக்கு அமைப்பாளன் அரசன். ஆகலின், கோன் நகர் சீறினுள் கண்ணகி. இன்றைய சமுதாயத்திலே குடியரசு பெரிதும் பேசப்படுகின்றது. குல வாழ்வினின்றும் கலை இனியும் பிரிக்கப்பட்டால் பழைய கதைதான்—சிலப்பதிகாரங்கள்—சீரழிந்த வாழ்வுகள்தான்.

இதனைத் தெளிவுறுத்த மதுரையை எரித்துக் காட்டிச் சிலப்பதிகாரம் மனிதக் கூட்டத்தை எச்சரிக்கிறது.

ரு

# இயற்கை இறந்த நிகழ்ச்சிகள் - 2

## தெய்வவடிவில் கண்ணகி

**சி**லப்பதிகாரத்தின் இறுதிக் காண்டத்தில் உள்ள

*பொன்னஞ் சிலம்பிற்*
*புனைமே கலைவளைக்கை*
*நல்வயிரப் பொற்றோட்டு*
*நாவலம் பொன்னிழைசேர்*
*மின்னுக் கொடியொன்று*
*மீவிசும்பில் தோன்றுமால்*

(வாழ்த்து: கூ)

என்ற வரிகளிலே எல்லைமீறிய மற்றொரு நிகழ்ச்சி கூறப் படுகின்றது. கண்ணகி தெய்வ வடிவில் வானிலே காட்சி யளிப்பதை விவரிக்கின்றன இந்த வரிகள். எதற்காக இந்தத் தோற்றம் வேண்டும்?

இவ் வினாவிற்கு இரண்டு வகையாக விடையிறுத்தல் கூடும். கண்ணகி 'விண்ணக மாதர்க்கு விருந்தாயினாள்' என்பது மட்டுமன்றி, தெய்வப் பெற்றி எய்திச் சிறப்புற்றாள் என்பதனையும் தெளிவுறுத்துதற்கு அவளுடைய தெய்வப் பொலிவை ஆசிரியர் காட்டினர் எனக் கொள்ளலாம். வர மருளும் ஆற்றல் பெற்றனள் என்பதை விளக்கும் வகையில் பத்தினிப் பெண்டிர்க்கு உளதாகிய மறுமை மாண்பைப் புலப் படுத்துதலே இளங்கோவடிகளின் எண்ணம் என்பது இக் கொள்கையினர் விளக்கமாகும்.

ஆயின், இதனினும் சீரிய விளக்கம் மற்றொன்று உள் ளது. சிலப்பதிகாரக் காப்பியத்தின் முதல் இரு காண்டங் களை ஊடுருவிப் படித்தபின் ஒரு குறை தோன்றும். அக் குறைபாட்டை முதலில் ஈண்டுக் காண்போம்.

மதுரைக் காண்டத்துக்கு ஓர் அணியாயும் சிலம்பினுள் சிறப்பமைந்த ஒளி மணியாயும் அமைந்துள்ளவன் பாண்டியன் நெடுஞ்செழியன் ஆவான். அவன் ஆராயாது செய்த பிழை யால்தான் கோவலன் கொலை யுண்ணவும், கூடல் மாநகரம் எரியுண்ணவும் நேர்கின்றது. செங்கோல் வேந்தனாயின் ஆரா யாது தீர்ப்பளித்து உயிருண்ணும் கூற்றுவனாக அவன் ஆகி யிருப்பனோ என்ற சிறு ஐயம் சிலர்மாட்டு எழுதல் கூடும்.

சிலப்பதிகாரக் கதையினை மேலெழுந்தவாரியாகக் கேட்டறிந்தவர்களுக்கு இந்த ஐயம் எழுவது இயற்கைதான். ஏனெனில், கதையின் நிகழ்ச்சிகளில் முதன்மையானவற் றையும் கவர்ச்சி மிக்கவற்றையுமே அவர்கள் அறிந்திருப்பர். ஆயின், அடிகளாரின் காவிய நெறியினைப் பயின்று உணர்ந் தோர்க்கு இவ்வகையான ஐயம் எழுதற்குக் காரணமே இல்லை. இளங்கோ படைத்தளிக்கும் நெடுஞ்செழியன் நேர்மை யின் உருவகம்; செங்கோல் முறைமைக்கு ஒரு கட்டளைக்கல்.

மதுரைக் காண்டத்தின் முதற்காதையில் மறையவன் ஒருவன் வருகின்றான். அவனே மதுரைக்கு வழி கூறுகின்றவன். பாண்டி நாட்டி லிருந்து வருகின்ற அம்மறையவன்,

*'வாழ்க எங்கோ*
*மன்னவர் பெருந்தகை*
*ஊழிதொ றூழிதொ*
*றுலகம் காக்க........'*

(காடுகாண்: கரு–கசு)

என்று தொடங்கி

*'பிழையா விளையுள்*
*பெருவளம் சுரப்ப*
*மழைபிணித் தாண்ட*
*மன்னவன் வாழ்க'*

(காடுகாண்: உஅ–உகூ)

என்று பாண்டியனின் புகழ் கூறிக்கொண் டிருக்கிறான். இக்காட்சியினைக் கூறுமிடத்தில் கவிக்கூற்றாக உள்ள ஓர் அடி மனங்கொள்ளத் தக்கதாகும்:

*'தீதுதீர் சிறப்பின்*
*தென்னனை வாழ்த்தி'*

(காடுகாண்: ந0)

என்று இளங்கோவடிகள் கூறுங்கால் 'அரைசியல் பிழையா' அறநெறி மேற்கொண்டவன் பாண்டியன் என்பதைக் கருதியே யிருத்தல் வேண்டு மன்றோ? இவ்வாறு உய்த்துணர வைப்பது போதாதெனக் கருதிய ஆசிரியர் அம் மறையவன் கூற்றாலேயே இக்கருத்தைத் தெளிவுறுத்துகின்றார். வேதியன் ஏன் பாண்டியனை வாழ்த்துகின்றான்?

*'தென்னவன் நாட்டுச்*
*சிறப்பும் செய்கையும்*
*கண்மணி குளிர்ப்பக்*
*கண்டேன் ஆதலின்*
*வாழ்த்திவந் திருந்தேன்*
*................................'*

(காடுகாண்: ருச–ருரு)

என்பது அவன் கூறும் விளக்கமாகும். கண் குளிர்தலால் அகங் குளிரப் பெற்றது; மன மகிழ்ச்சி வாழ்த்துரையாக மலர்கின்றது.

இம்மட்டோ! புறஞ்சேரி யிறுத்த காதையுள் கோவலன் கூற்ருக வரும் சில வரிகளை நோக்குவோம்.

*'கடுங்கதிர் வேனில்இக்*
*காரிகை பொருஅள்*
*படிந்தில சீறடி*
*பரல்வெங் கானத்து'*

(புறஞ்சேரி: ௩–ச)

என்று கண்ணகியின் துயர்க்கு இரங்குகின்ருன் கோவலன். 'பகலிலே பயணம் மேற்கொளின் கதிரவன் வெப்பத்தைத் தாங்கலாற்ருது கண்ணகி துயர் உறுவாள்; இதுகாறும் கடந்து போந்த வழிகளில் அடைந்த வெப்பத்தால் கண்ணகியின் கால் களில் கொப்புளங்கள் தோன்றிவிட்டன. எனவே, மேலும் வெம்மை மிகுந்த பரற்கற்கள் நிறைந்த கானூடு எங்ஙனம் நடக்க இயலும்........'என்று பலவாருகக் கோவலன் துயர்ப் பட்டுக் கவுந்தியடிகளிடம் பயணக் காலத்திலே மாறுதல் செய்வது கருதிப் பேசுகின்ருன். இரவிலே செலவு மேற் கொளின் கதிரவன் கொதிப்பு இராதன்றே? கதிரவன்

கடுமை இராது; திங்களஞ் செல்வன் தண்ணொளி இருக்கும். ஆயின், கொடு விலங்குகள் இருக்கு மல்லவோ? இத்தடைக்குக் கோவலன் கூறும் விடையே இங்கு நம் கருத்திற்கு உரியதாகும்:

*'கோள்வல் உளியமும்*
*கொடும்புற்று அகழா*
*வாள்வரி வேங்கையும்*
*மான்கணம் மறலா*
*அரவும் சூரும்*
*இரைதேர் முதலையும்*
*உருமும் சார்ந்தவர்க்கு*
*உறுகண் செய்யா*
*செங்கோல் தென்னவர்*
*காக்கும் நாடென*
*எங்கணும் போகிய*
*இசையோ பெரிதே'*

(புறஞ்சேரி: ரு–ம)

இவ்வரிகளில் தென்னவர் ஆட்சியால் சிறப்புற்ற பாண்டி நாட்டில் கொடுமையே இயல்பான விலங்குகளும் சார்ந்தார்க்கு உறுதுணையாகும் பெற்றி படைத்தன என்ற கருத்து நோக்கற்பாலது. கொடுமையை அவை மறத்தற்கு யாது காரணம் என்பதையும் குறிப்பாக ஆசிரியர் சுட்டுகின்றார். பாண்டியர் செங்கோல் செலுத்துவோர் ஆகலின், யாண்டும் அன்பே பெருகிப் பரவி, அருளுணர்வு கனிந்திருந்தது என்பதைச்

*'செங்கோல் தென்னவர்*
*காக்கும் நாடு......'*

என்ற சொற்கள் தெளிவாக்குகின்றன. தென்னவர்க்கு

இயற்கையான செங்கோன்மையால் அவர் நாட்டில் அருள் ஆட்சி நிலவியது என்பது வெற்றுரை அன்று என்பதை அறிவுறுத்தவே, அப்புகழ் எல்லைக்குட்பட்ட தன்று எனச் சொல்கின்றார்:

*'எங்கணும் போகிய*
*இசையோ பெரிதே'*

என்பது கோவலனின் நம்பிக்கையை எதிரொலிக்கும் தெளிவுரை. இத்தெளிவு பிறந்தமையால்,

*'பகலொளி தன்னினும்*
*பல்லுயிர் ஓம்பும்*
*நிலவொளி விளக்கின்*
*நீளிடை மருங்கின்*
*இரவிடைக் கழிதற்கு*
*ஏதம் இல்'*

(புறஞ்சேரி: கக–கந)

எனக் கோவலன் முடிவு செய்கின்றான்; அறிவு ஆற்றல் அனுபவங்களால் முதிர்ந்த கவுந்தியடிகளும் அம்முடிபை ஏற்கிறார். பயணம் இரவிலே நடைபெறுகின்றது.

ஈண்டு ஓர் எச்சரிக்கை செய்தல் நலம். ''எங்கேனும் கரடி புற்று அகழாமல் இருக்குமோ? .............. என்பது போன்ற 'பகுத்தறிவு' வினாக்கள் எழக்கூடும். தென்னவர் செங்கோன்மைத் திறத்தைத் தெளிவாக்குவது ஒன்றே ஆசிரியர் குறிப்பு என்பதையும் அதற்காக அவர் உரைத்த கற்பனையின் கருப்பொருளை விடுத்து அதன் புறவடிவிலே அறிவைப் பறிகொடுப்பது பேதைமை என்பதையும் உணர்ந்து கொள்ளுதல் வேண்டும். நிற்க.

மற்றும் ஓர் இடம்: பாணர் கூட்டத்தைச் சார்ந்து யாழ் வாசித்த கோவலன் 'மதுரை இன்னும் எத்துணைத் தொலைவில் உள்ளது?' எனக் கேட்கின்றான். அவர்கள் 'நெடுந் தொலைவு இனி இல்லை; அண்மையிலேயே அந்நகர் உள்ளது' எனக் கூறினர். பலவாறு உரைத்த அவர் இறுதியில்,

*'மதுரைத் தென்றல்*
*வந்தது காணீர்*
*நனிசேய்த் தன்றுஅவன்*
*திருமலி மூதூர்'*

(புறஞ்சேரி: கஉ—ககூ)

என்று நவில்வதோடு அமையவில்லை.

*'தனிநீர் கழியினும்*
*தகைக்குநர் இல்......'*

(புறஞ்சேரி: கசு)

என்றும் கூறுகின்றனர். 'தன்னந் தனியாகச் சென்றாலும் தடுத்து நிறுத்தும் ஆறலை கள்வர் முதலானோர் இல்லை'என்று கூறியது யாது கருதி? பாண்டியனின் பழுதற்ற ஆட்சிச் சிறப் பினை அறிவுறுத்தக் கருதியே அன்றோ? பாணர் வாயிலாகத் தெளிவடைந்த மூவரும் முன்போலவே மேலும் இரவுப் பயணம் மேற்கொண்டனர்:

*முன்னாள் முறைமையின்*
*இருந்தவ முதல்வியொடு*
*பின்னையும் அல்லிடைப்*
*பெயர்ந்தனர்..............*

(புறஞ்சேரி: கரு—கசு)

என்பது இளங்கோவடிகள் இயம்பியது.

இறுதியில், கோவலனைக் கொல்லுமாறு கட்டளை பிறப்பிக்கும் இடத்திலே ஆசிரியர் பாண்டியனிடத்து அனுதாபம் காட்டுவார் போல,

*வினைவிளை காலம்*
*ஆதலின் யாவதும்*
*சினையலர் வேம்பன்*
*தேரான்.........*

ஆகினன் என்று வரைகின்றார்.

கொலைக் களக் காதையின் இறுதி வெண்பாவில் '**வளையாத** செங்கோல் வளைந்ததே' என்ற இரங்கலுரை மேலே கூறிய அனைத்தையும் சுருக்கமாக விளக்க வல்லதாகும்.

இத்துணைச் சிறப்புக்கும் நிலைக்களனாகிய பாண்டியனைக் கண்ணகி எவ்வாறு நோக்குகின்றாள்?

*'மறனொடு திரியும்கோல்*
*மன்னவன்'*

(துன்பமாலை: ச0)

என்று எடுத்த எடுப்பிலேயே நெருப்பைக் கக்குகின்றாள். பாண்டியனைக் குறித்தெழுந்த சினம்,

*'அறனெனும் மடவோய்'*

(துன்பமாலை: சக)

என்ற விளி வடிவில் அறத் தெய்வத்தை அறிவிலியாக்கிப் பொசுக்க முனைகின்றது. இக்கொடுங்கோலன் ஆட்சிக்கு உட்பட்ட நகரிலோ நாட்டிலோ பெண்மை சான்ற பெண்டிரும், சான்றோரும், தெய்வமும் நிலைத்தல் இயலாது என்று பத்தினியின் சினத் தீ பரவுகின்றது.

*'பெண்டிரும் உண்டுகொல்*
*பெண்டிரும் உண்டுகொல்*
*கொண்ட கொழுநர்*
*உறுகுறை தாங்குறூஉம்*
*பெண்டிரும் உண்டுகொல்'*

(ஊர்சூழ்: ருக–ருரு)

என்பது முதலாக வரும் அவலக் குரல் சிலம்பறிந்த யாவருடைய சிந்தையிலும் எஞ்ஞான்றும் நிலவி நிற்பதாகும்.

நகர வீதிகளிலே சின எரி பரப்பி மன்னவன் கோயிலை நண்ணுகின்றாள் கண்ணகி. **'தீ வேந்தன் தனைக்கண்டு இத்திறம் கேட்பல் யான்'** என்று எடுத்த மொழியால் இயம்பிய கண்ணகி பாண்டியன் கோயில் வாயில் உற்றனள். வாயில் காவலன் ஒருவன்; அவன் அஞ்சி நடுங்குகின்றான். ஏன்? தீ சுடுகின்றது. எப்படி?

*'வாயி லோயே*
*வாயி லோயே*
*அறிவறை போகிய*
*பொறியறு நெஞ்சத்து*
*இறைமுறை பிழைத்தோன்*
*வாயி லோயே'*

(வழக்குரை: உசு–உகூ)

என்று அழல் எழுநா எழுப்பி அவனை அடர்கின்றது. பாண்டியன் புகழை யன்றிக் கேட்டறியாத காது; அவன்றன் சிறப்பை யன்றிச் சீரழிவைச் செப்பும் குரல் ஒன்றும் எழாத வாயில்! அங்கே கண்ணகியின் சினம் ஊழிக் கூத்தாடுவதற்கு வேண்டிய முன்னணி அமைக்கின்றது.

உள்ளே—அரையன் திருமுன்னே – போகின்றாள். அன்பொழுக அவன் கேட்கின்றான்:

*'நீர்வார் கண்ணை*
*எம்முன் வந்தோய்*
*யாரை யோநீ*
*மடக்கொடி யோய்'*

(வழக்குரை: சஅ—சகூ)

இந்த ஆதரவான வினவை நின்று நிதானித்து, உணர்ந்து, செங்கோலனைக் காணும் நிலையிலா சினத்தின் வடிவான கண்ணகி நிற்கின்றாள்! சொல்லென்னும் பெயர்கொண்டு தீ வெளியேறுகின்றது :

*'தேரா மன்னா!'*

(வழக்குரை: ரு0)

எடுத்த எடுப்பிலே – பாண்டியன் முகத்துக்கு எதிரே—ஒரு பெண் சொல்லுகின்றாள் :—

*'தேரா மன்னா!'*

இதோடு விட்டதா சினத் தீ? 'கணவன் கள்வனல்லன்' என்பதை நிலைநாட்ட வேண்டுமே! சரி, அதனையும் நிலை நாட்டினாள். விளைவு யாது?

*'பொன்செய் கொல்லன்*
*தன்சொற் கேட்ட*
*யானோ அரசன்*
*யானே கள்வன்'*

(வழக்குரை: எச—எரு)

என்று மன்பதை காக்கும் மன்னவன் என்னும் நிலையைத்

துறந்து தன்னையே கள்வனென்றும் பழித்துக்கொள்கின்றான் வேம்பன். அந்த அளவோடு அரசன் அமையவில்லை. அவனுடைய அறவுள்ளத்தைப் பத்தினியின் சினத் தீ சுடுகின்றது. ஊழிக் கூத்து மிகத் தீவிரமாகின்றது. அறவுள்ளம் பாண்டியன் மனத்தை வாட்டுகின்றது.

*'மன்பதை காக்கும்*
*தென்புலங் காவல்*
*என்முதற் பிழைத்தது*
*கெடுகஎன் ஆயுள்'*

(வழக்குரை: எசு—எஎ)

என்று கூறி மயங்கி வீழ்ந்து உயிர் துறந்தனன்.

'ஒரு பெண்ணுக்குப் பெருந்துயர் இழைத்துவிட்டோமே என்ற ஏக்கத்தால் மயங்கினன் போலும் மன்னன்' என எண்ணினாள் கோப்பெருந்தேவி. அவன் மலரடி வீழ்ந்து வருடினாள்; அவன் ஆவி பிரிந்தமை உணர்ந்தாள். கணவனை இழந்த ஒருத்திக்குப் பிறர் எவரும் இலர் என்ற நினைவு அவள் உயிரையும் காணிக்கையாகப் பெற்றது. தன் உயிர்கொண்டு அவன் உயிர் தேடிப் போயினள்.

*கோப்பெருந் தேவி*
*குலைந்தனள் நடுங்கிக்*
*கணவனை இழந்தோர்க்குக்*
*காட்டுவது இல்லென்று*
*இணையடி தொழுதுவீழ்ந்*
*தனளே மடமொழி*

(வழக்குரை: எசு—அக)

*திருவீழ் மார்பின்*
*தென்னர் கோமான்*

*தயங்கிணர்க் கோதை*
*தன்துயர் பொறாஅன்*
*மயங்கினன் கொல்லென*
*மலரடி வருடித்*
*தலைத்தாள் நெடுமொழி*
*தன்செவி கேளாள்*
*கலக்கங் கொள்ளாள்*
*தன்துயர் பொறாஅள்*
*மன்னவன் செல்வுழிச்*
*செல்க யான்எனத்*
*தன்உயிர் கொண்டுஅவன்*
*உயிர்தே டினள்போல்*
*பெருங்கோப் பெண்டும்*
*ஒருங்குடன் மாய்ந்தனள்*

(காட்சி: எகூ—அகூ)

தன்னைப் போலவே ஒரு பெண்ணின் துயர் கண்டேனும் இரங்கினளா கண்ணகி? 'சினம் என்னும் சேர்ந்தாரைக் கொல்லி' யின் வசம் தன்னைப் பறிகொடுத்த கண்ணகி,

*'பட்டாங்கு யானும்ஓர்*
*பத்தினியே யாமாகில்*
*ஒட்டேன் அரசோடு*
*ஒழிப்பேன் மதுரையையும்'*

(வஞ்சினம்: நகூ—நஎ)

என்று கனன்றுரைத்து வெளியேறுகின்றாள். ஊழிக் கூத்து அரண்மனையி லிருந்து நகரம் முழுவதும் அரங்கேறுகின்றது. அருளிக் கூறினும் வெகுண்டு கூறினும் அவ்வப் பொருளைப் பயந்தேவிடும் சொல்லின் செல்வத்தை அடைந்த நிறையுடைய கண்ணகியின் சொல்லால் எரிகின்றது மாடமதுரை;

கூடல் நகரம் கொளுத்தப் படுகின்றது..........சினம்.........
சினம்.........தீ...................

மதுராபதித் தெய்வம் பத்தினித் தெய்வத்தின் முன் வர அஞ்சிப் பின் நின்று பேச முனைகின்றது.

*'.................காதின்*
*மறைநா வோசை*
*யல்லது யாவதும்*
*மணிநா வோசை*
*கேட்டதும் இலனே*
*அடிதொழு திறைஞ்சா*
*மன்ன ரல்லது*
*குடிபழி தூற்றும்*
*கோலனு மல்லன்'*

(கட்டுரை: ௩0–௩௪)

என்று தொடங்கிப் பாண்டியன் செங்கோற் சிறப்பை விரித்துக் கூறுகின்றது அத்தெய்வம். கண்ணகி கேட்கின்றாள்; அதனோடு தன் வினைக் கதையையும் கேட்கின்றாள். சினத்தின் வேகம் தணிந்தபாடில்லை; எரிப்பதற்கு ஒன்றும் இல்லை; திரும்பி வருகின்றது எய்தவனை நோக்கி; நெஞ்சைச் சுடுகின்றது. வெந்து தீயும் நெஞ்சச் சுடுகாட்டைச் சுமந்து,

*'கருத்துறு கணவற்*
*கண்டபின் அல்லது*
*இருத்தலும் இல்லேன்*
*நிற்றலும் இலனென'*

(கட்டுரை: ௧௭௯–௧௮0)

நவின்று மேடு பள்ளம், பகல் இரவு......ஒன்றையும் உண

ராது போகின்ருள். நெடுவேள் குன்றத்து வேங்கை மரத்தடியில்

*'தீத்தொழி லாட்டியேன்*
*யான்என்று ஏங்கி'*

(கட்டுரை: கசுஉ)

நிற்கின்ருள். அமரர்க்கு அரசன்தமர் வந்து எதிர்கொள்ள, விண்ணக மாதர்க்கு விருந்தாகப் போகின்ருள் பத்தினி கண்ணகி. இத்துடன் மதுரைக் காண்டம் முடிவுற்று விடுகின்றது.

'பாண்டியன் தீதற்றவன், நல்லவன்' என்ற கருத்தினை அவள் உள்ளம் ஏற்றுக்கொண்டதா? இதுகாறும் இல்லை. கதையோ முடிந்துவிட்டது. சிலம்புக் காப்பிய ஒழுங்குக்கு இது சரியன்று. நல்லவனைத் தீயவனென்றே கதைத் தலைவி முடிவுசெய்து போகின்ருள் 'முடிகெழு வேந்தர் மூவர்க்கும் உரியது' ஆகிய காப்பியத்தில் பாண்டியன் தீயவனுகவே முடிவுறுவதா? இளங்கோவடிகளுக்கு இது விருப்பமாக இருந்திராது.

மதுராபதித் தெய்வம் கண்ணகியிடம் குறையிரந்ததன் விளைவு யாது? பாண்டியனுக்கு மன்னிப்புக் கிடைத்ததா? இல்லை.

*மதுரைமா தெய்வம்*
*மாபத் தினிக்கு*
*விதிமுறை சொல்லி*
*அழல்வீடு கொண்ட*

(கட்டுரை: கஎஎ–கஎஅ)

தாகமட்டுமே இளங்கோவடிகள் குறிக்கின்ருர். மதுரையைப்

பொசுக்கிய தீ அவிந்தது; அவ்வளவே. மன்னவன் மாசற்றவன் என்ற பெயர் கிட்டிற்றே? இல்லை. கணவற் குற்ற பழியை அவன் இல்லாத விடத்துத் தான் முன் நின்று போக்கி மாசின்மையை நிலைநாட்டினள் கண்ணகி; கோப்பெருந்தேவியோ தன் உயிர்கொண்டு அவன் உயிர் தேடப் போயினள். இந்நிலையில் பாண்டியன் நலத்தினை உணர்த்துவார் யாவர்?

இளங்கோவடிகள் சேரன் செங்குட்டுவனைச் சொல்லச் செய்கின்றார்:

*'எம்மோ ரன்ன*
*வேந்தர்க்கு உற்ற*
*செம்மையின் இகந்தசொல்*
*செவிப்புலம் படாமுன்*
*உயிர்பதிப் பெயர்த்தமை*
*உறுக ஈங்கு என*
*வல்வினை வளைத்த*
*கோலை மன்னவன்*
*செல்லுயிர் நிமிர்த்துச்*
*செங்கோ லாக்கியது'*

(காட்சி: ௯௫–௯௯)

என்று செங்குட்டுவன் செப்பிப் பாண்டியனைப் புகழ்கின்றான். ஈண்டுச் சேரனின் நினைவு பாண்டியன் அறநிலைப் புகழ்ச்சியோடு மட்டும் நின்றதில்லை; அரச பதவியினரின் அல்லலை நினைப்பூட்டுவதாகவும் உள்ளது. ஆதலினால்தான்,

*'மன்பதை காக்கும்*
*நன்குடிப் பிறத்தல்*
*துன்பம் அல்லது*
*தொழுதகவு இல்'*

(காட்சி: ௧0௩–௧0௪)

என விளக்குகின்ருன். அரச மரபினரின் அல்லலை எடுத்துக் காட்டுவதாகவே பாண்டியன் நிகழ்ச்சியைக் காட்டுகின்ருன் செங்குட்டுவன்.

ஆயின், பாண்டியனின் தீதற்ற நிலையை — அந்த உயர்ந்த நிலைக்காகவே போற்றுவார் யாரும் இலராயினர். எனவே, எல்லைமீறிய நிகழ்ச்சி ஒன்று உள்ளே நுழைகின்றது. கண்ணகியே தெய்வ வடிவில் தோன்றிக் கூறுவதைவிட வேறு சிறந்த முறை ஒன்றும் இருக்கமுடியாது என்று கருதியே, பத்தினித் தெய்வத்தை வானிலே ஒளிரச் செய்கின்ருர் இளங்கோவடிகள்.

தென்னவன் நல்லவன் என்பதைத் தெளிவாக்குவதற்குத் தான் தெய்வ வடிவம் தோன்றுகின்றது என்பதை அத்தெய்வத்தின் கூற்றே வெளிப்படுத்துகின்றது. தோன்றியவுடன் தனக்குக் கோயிலெடுத்த செங்குட்டுவனை வாழ்த்திற்ரு? தன் கதையைப் பரப்பப்போகும் இளங்கோவை ஏத்திற்ரு? தன் துயர் கேட்டு வந்த ஐயை தேவந்தியரை விளித்ததா? இத்தனையும் நடைபெறவில்லை. அங்கிருந்தோர்க்கு நேரிடையாக எவ்விதத்திலும் பயனில்லாத ஒரு பேச்சை முதன் முதலில் பேசுகின்றது அத் தெய்வ வடிவம் :

*'தென்னவன் தீதிலன்*
*தேவர்கோன் தன்கோயில்*
*நல்விருந்து ஆயினன்*
*யானவன் தன்மகள்'*

(வாழ்த்து: க0)

மற்றையன யாவற்றையும் விடுத்து எடுத்த எடுப்பிலே— முதற்கண்ணே – 'தென்னவன் தீதிலன்' என்று கண்ணகி கூறுகின்ருள். இதனல் கதையிலே ஒரு நிறைவு; கதை எழுதிய ஆசிரியர் மனத்திலே ஒரு நிறைவு. கதையின் நிறைவே

ஆசிரியரின் மன நிறைவு; தம் மனம் நிறைவெய்த எதை வேண்டினும் செய்ய உரிமை படைத்தவர் ஆசிரியர்.

## இயற்கை இறத்தலும் இலக்கியமும்

எல்லை மீறலும், எல்லையுட் சிக்கலும் நம்மனோர்க்கே. எல்லை என்பதொன் றில்லாத கலைஞர்கட்கு அப்பாகுபாடு இல்லை. கலையின் நிறைவு ஒன்றே அவர்கட்கு வேண்டுவது; கலை நிறைவு எய்தாவிடில் அவர் மனம் அவரை ஆட்டி வைக்கும்; அல்லற்படுத்தும். அதற்கு இரையாக அவர் விரும்பார். இத்தகைய கலைத்துறை உண்மைகளை உணர் வார்க்கு இதுபோன்ற எல்லைமீறிய நிகழ்ச்சிகள் சிக்கல் எதுவும் விளைக்கமாட்டா.

எல்லைமீறிய நிகழ்ச்சிகள் எந்த நாட்டு இலக்கியத்திலும் உண்டு. எந்தக் காலத்து நூல்களிலும் உண்டு. கலையுலக வாழ்வினை மலை இவர்ந்து செல்லும் ஒரு நிகழ்ச்சியோடு ஒப் பிடலாம். மலைச் சிகரத்தே நிற்போர்க்கு எல்லையற்றுப் பரந்திருக்கும் காட்சி புலப்படும். ஆயின் அடிவாரத் திலிருந்து ஏறத் தொடங்குவோர்க்கு, அவர்தம் சூழ்நிலைகூட முழுதும் புலப்படுதல் இல்லை. கலையெனும் மாபெரும் மலை யின் அடிவாரத்தி லிருந்து தன் சிறப்பாற்றலால் கொடுமுடி இவர்ந்த கலைஞனுக்கு எல்லையென்ற வரையறை அற்றுப் போகிறது. காண்பன, கருதுவன எவையும் கட்டுப்படா தனவே. அவன் அடைந்த நிலையினை எய்துங்காறும் நாமும் நம் சூழ்நிலைச் சிக்கல்களாலும் சிந்தனைகளாலும் தொல்லைப் படுவது இயற்கையே. மலையிவர்ந்து செல்வார் கருதவேண் டிய தெல்லாம் 'நம் காட்சி முழுமையான தன்று' என்பதே. நம் திறன்கொண்டு கலைஞன் திறத்தை அளவிட முயன்று, அம்முயற்சியில் தோல்வி காணுமிடத்து அவன் திறத்தினை வெட்டிச் சமநிலை காணுதல் பேதமையிலும் பேதமையாகும்.

சிலம்பிலுள்ள எல்லேமீறிய நிகழ்ச்சிகள் பலவற்றுள் இரண்டின் விளக்கத்தை மேலே கண்டோம். எஞ்சி நிற்பனவும் பல உள. அவற்றுக் கெல்லாம் தனித்தனி விளக்கம் கூறுதல் இந் நூலின் நோக்கம் அன்று. எல்லே மீறிய நிகழ்ச்சியின் போக்கு தமிழிலக்கிய வரலாற்றில் ஒரு புது மாறுதலே அடையத் தொடங்கியது சிலப்பதிகார காலத்தில். இவ்வகையால் சிலம்பு ஒரு வரலாற்றுக் (historic) காப்பியமாக உள்ளது என்பதையும், எல்லேமீறிய நிகழ்ச்சிகளேக் கலேப்பண்பான முறையால் உணர்ந்து பயிலாமல் அறிவு வீங்கிய நெறியால் ஆய்ந்து இடர்ப்படுதல் தவறு என்னும் எச்சரிக்கை விடுப்பது சிலம்பு என்பதையும் தெளிவாக்க வேண்டுமென்பதே ஈண்டு நாம் மேற்கொண்டுள்ள பணியாகும்.

**ஜூலியஸ் சீசர்** என்ற நாடகக் காப்பியத்தில் ஷேக்ஸ்பியர் சீசரின் ஆவியை உலவச் செய்கின்றூர். **ஹாம்லெட்**டிலும் ஆவியின் பேச்சு உண்டு. மாய மந்திரம் 'வல்ல' சூனியக்காரிகளும் ஷேக்ஸ்பியரின் நாடகங்களில் வருவர். கனுத் திறம் உரைக்கும் வாயிலாக, வருவது கூறும் திறமும் அப் பெறலரும் புலவரின் நாடகங்களில் உண்டு. இத் தகைய நிகழ்ச்சிகளெல்லாம் எல்லேமீறியன அல்லவோ? ஆம் எனில் இவற்றிற்கு மேலே நாட்டு இலக்கிய ஆராய்ச்சியாளர் என்ன விளக்கம் கூறுகின்றனர்? பல ஆசிரியர்கள் எழுதியுள்ளவற்றின் சாரத்தை ஈண்டுத் தொகுத்துச் சுருக்கி உரைப்போம்.

ஹாம்லெட் காணும் ஆவி அவன் கண்ணுக்குமட்டுமே தெரிவதாகவும் அவன் அன்னே முதலாயினேர் கண்ணுக்குப் புலப்படாத தாகவும் இருப்பதாக எண்ணி, இங்கிலேயினேச் சிலர் விளக்கப் புகுகின்றனர். ஹாம்லெட்டின் மனக் குழப்பமே தந்தையின் ஆவியைக் காணச் செய்கிறது என்றும்,

அவனைப் போல மனத்திட்பம் இழவாத பிறருக்கு அது தெரியாததாக ஷேக்ஸ்பியர் காட்டுகிருர் என்றும் மேற்கூறிய சாரார் விளக்குகின்றனர். அதாவது, ஷேக்ஸ்பியர் ஆவிகளை எல்லைமீறிய நிலையினவாய்த் தோற்றுவிக்க வில்லை என்பதும், நாடகப் பாத்திரங்களின் மனக் கற்பனையாகவே படைக்கிருர் என்பதும் அவர்தம் கருத்தாகும். பேய் பிசாசு போன்ற மூட நம்பிக்கைகளி லிருந்து ஷேக்ஸ்பியரைப் பாதுகாப்பதாகக் கருதிக்கொண்டே இவர்கள் இந்த வகையான விளக்கங்கள் தர முயல்கின்றனர். இவர்கள் செயல் பொருந்தாது.

ஜுலியஸ் சீசரின் ஆவியைப் புருட்டஸ் காண்பதாக நாடகத்தில் தெரிகிறது. வேறு எவர் கண்ணிலும் அது படாததுகொண்டு புருட்டஸின் மனநிலையே பேய்த் தோற்றத்துக்குக் காரணம் என்று சிலர் சொல்ல முனைவர். ஆயின், அது தவருன விளக்கம். ஏனெனில் குறிப்பிட்ட பாத்திரம் மட்டுமன்றி மற்றவரும் ஆவியைக் காண்பதாக ஷேக்ஸ்பியர் குறிப்பிடுகின்ருர். ஹாம்லெட் நாடகத்தில் கதைத் தலைவன் மட்டுமன்றி ஹொராஷியோவும் காணுகின்ருன். மேலும், அந்த நாடகத்தில் ஆவி வெறும் தோற்றம் என்ற அளவில் நின்று விடாமல் நீண்டதொரு உரையாடலையே ஹாம்லெட்டோடு நிகழ்த்துகின்றது. நாடகத்தின் மூன்றும் அங்கத்திலே சீசர் இறந்துபடுகின்ருன். ஆனுல், கதை அதனேடு முடிவதில்லை சீசரின் ஆற்றலான சீசரியம் தொடர்ந்து நின்று கதையை நடத்துகின்றது. அந்தச் சீசரியத்தை அடையாள மாத்திரையாக நின்று சுட்டுவதே சீசரின் ஆவி.

## வருவதுணர்த்தும் கனு

இப்படியே அப்பெரும் புலவரின் நாடகங்களில் காணும் வருவதுணர்த்தும் கனு நிகழ்ச்சிகளையும் விளக்குகின்றனர்.

ஆராய்ச்சியாளர் இந்நிகழ்ச்சிகளை நுழைப்பதுபற்றி விளக்கிச் சொல்வனவற்றின் சுருக்கம் இதுதான்: கதை சுவைபட அமைவதற்காக எத்தகைய உத்திகளையும் கலைஞன் கையாள லாம். கதைச் சுவையைத் தடைசெய்வதாக இருந்தால் மட்டுமே குறைகூற முடியும்.

உதாரணமாகக் கண்ணகி காணும் கனவினை எடுத்துக் கொள்ளலாம். எங்கோ சென்று ஏதமுறுவதுபோல் கனவு கண்டதாகத் தேவந்திபால் கண்ணகி தெரிவிக்கின்றாள்.

*'கடுக்குமென் நெஞ்சம்*
*கனவினால்; என்கை*
*பிடித்தனன் போய்ஓர்*
*பெரும்பதியுட் பட்டேம்*
*பட்ட பதியில்*
*படாதது ஒருவார்த்தை*
*இட்டனர் ஊரார்*
*இடுதேளிட் டென்றன்மேற்*
*கோவலற் குற்றதோர்*
*தீங்கென்று அதுகேட்டுக்*
*காவலன் முன்னர்யான்*
*கட்டுரைத்தேன் காவலனோடு*
*ஊர்க்குற்ற தீங்கும்ஒன் று*
*உண்டால்....................'*

(கனாத்திறம்: சரு—ருக)

இவ்வாறு தீய கனவு கண்டு அஞ்சியவள் கணவனுடன் வெளியேறாது இருந்து, வேறு போக்கினை மேற்கொண் டிருந் தால் கதை என்னவாக இருக்கும்? சுவைகாண்டல் இயலா தன்றோ? கனவால் வருவதுணர்கின்றாள் கண்ணகி. ஆனால், நம்பியோ நம்பாமலோ கணவன் கருத்துவழி இயங்குகின்றாள்.

மாற்று உள்ள வாழ்க்கையினள் அல்லளோ? ஆசிரியர் முன் கூட்டியே குறிப்பித்த தீங்கு நிகழ்கின்றது. பயில்கின்ற நம்ம ஞேர்—அல்லது நடிக்கக் காணுகின்ற அவையினர் மனநிலை யாதாகும்? ''அடடா! முன்னரே கனவு கண்டபோதே நின்றிருக்கக் கூடாதோ? நின்றிராததால் களையாத துன் பத்தைக் கண்ணகி அடைந்தாளே!'' என்றவகையான இரக்க நிலை பெருகும். அவலத்தைப் பெருக்குகின்ற இரக்க உணர்வினைக் கனு நிகழ்ச்சியால் எளிதிலே பெற முடிகின் றது. எல்லைமீறிய நிகழ்ச்சியாக இருப்பினும் காப்பியத்துக்கு ஓர் அணியாக அமைந்திருக்கின்றது.

இங்ஙனமே பாண்டிமா தேவியின் கனவும் அமைவதை விளக்க இயலும். சிலம்புக் காவியம் போன்றே சீசர் நாடக மும் கனுத்திறம் உரைக்கின்றது. கல்பூர்னியா என்பாள் சீசரின் உயிர்க்குத் தீங்கு நேரும் என்பதைக் கனு வாயிலாக உணர்ந்து தடுக்கின்ருள். ஆனுல், சீசரின் நெஞ்சுரம் அத் தடையைத் துச்சமென ஒதுக்கிப் பாராளுமன்றம் நோக்கிச் சீசரைச் செலுத்துகின்றது. ஆங்கே சீசராகிய பெருவீரன் கொலையுண்டு வீழ்கின்ருன். இந் நிகழ்ச்சிக்கும் மேலை நாட்டு இலக்கிய ஆய்வாளர் நாம் முன்னே கூறியுள்ள விளக்கமே கூறுவர்.

சுவையைப் பெருக்கி யுதவும் வகையில் எல்லைமீறிய நிகழ்ச்சிகளை உத்தியாகக் கையாள்வது எல்லா நாட்டிலும் உள்ள மரபாகும்.

மேலே சொன்ன விளக்கம் ஒருபால் இருக்க, இலக் கியம் தோன்றிய காலத்தின் கோட்பாடும் எதிரொலிக்கும் என்பது மனங் கொள்ளத் தக்கது. காலத்தின் களனுகியும் கருத்தின் பதிப்பாகியும் அமைவது இலக்கியக் கருவூல மன்ருே? எனவே, அவ்வக் காலத்தாரின் நம்பிக்கையும்

இலக்கியங்களில் இடம் பெறுதல் கூடும். எலிசபெத் காலத்து இங்கிலாந்து ஷேக்ஸ்பியரின் நாடகங்களிலும் சங்க காலத்தை அடுத்துப் பிறந்த தமிழகம் சிலம்பிலும் ஒளிர் கின்றன என்பதுவும் நாம் மறவாது போற்ற வேண்டுவ தொன்றுகும்.

ஈண்டு ஓர் எச்சரிக்கை செய்ய விழைகின்ரேம். காப் பியத்தில் தரும் நிகழ்ச்சிகள் அனைத்தும் காட்சியிலும் நிகழக் கூடியன என்று கலைஞன் கருதுவதாக நினைத்தல் தவருன போக்கு ஆகும். அவ்வாறு அவன் நம்புதலும் கூடும்; நம்பாமையும் கூடுவதே.

இதுகாறும் நாம் சற்று விரிவாகப் பார்த்தவற்ருல் பெற்ற பயன் பின்வருமாறு: எல்லைமீறிய நிகழ்ச்சி என்பது கருத்துச் சுவைபடுவதற்காகக் கதையினில் இடம் பெறும் ஓர் உத்தி. அம் முறை எக்காலத்தும் எந்நாட்டினும் உண்டு. சுவை நோக்கமே கலைஞன் குறிக்கோள். எல்லைமீறிய நிகழ்ச் சிகள் நிகழக் கூடியன என்று கலைஞன் நம்பவேண்டுமென்ற கட்டுப்பாடு இல்லை.

எல்லைமீறிய நிகழ்ச்சிகள் உள்ளன என்பதால்மட்டுமே ஒரு நூலை ஒதுக்க முனைகின்றவர்களுக்கு ஒரு முன்னெச் சரிக்கைபோல் அமைந்துள்ளது இளங்கோ அருளிய இணை யற்ற இலக்கியம்.

௫

# ஏன் எழுதினர்?

பிரசாரச் சொற்பொழிவுகள் பலவற்றை ஒட்டிவைத்து, கதை என்ற பெயரிடவேண்டும் என்பதற்காகச் சில கூறுகளை ஒருமைப்படுத்தி, முழு நீளத் திரைப் படங்களை வெளியிடுகிற வேதனையான வேடிக்கை நமக்குத் தெரியாத தன்று. இத்தகைய கதைகளை நினைத்து, இளங்கோவின் இலக்கியத்தையும் நினைத்தால் 'நிழலருமை வெய்யிலிலே' என்ற பாடல் நம் இதயத் திரையில் நிழலாடுகின்றது.

கலையைப் படைக்கின்றவன் கடவுளல்லன்; சதையும் எலும்பும், நாடியும் நரம்பும் கொண்டு உலவுகின்ற நம்மனைய மனிதனேதான். அன்ருட வாழ்க்கையைக் கண்டு, அதிலே வேறு வழியின்றித் திளைத்தோ நொந்தோ வாழ்ந்து சாகின்றவன்தான் கலைஞனுகிய மனிதனும். அவன் விடுகின்ற மூச்சிலும்வாழ்க்கையின் சாயல் இருக்கும்; அவன் பேசும் பேச்சிலும்

வாழ்க்கை எதிரொலிக்கும்; எழுதுகின்ற எழுத்திலும் தீட்டும் ஓவியத்திலும் பாடும் பாட்டிலும் வாழ்க்கையை விட்டு அவ னுல் தப்பிவிட முடியாது. எங்கெங்கே அவன் சிந்தனே நிலவு கின்றதோ அங்கங்கே வாழ்க்கையின் நெடி படரத்தான் செய்யும்.

எனவே, காவியத்தைக் கவிஞன் அருள்கின்ருன் என் ருல்,வாழ்க்கையை வடித்தெடுக்கிருன் என்பது தானே பெறப் படும். கலே, வாழ்க்கையின் மறு படி; கலே, வாழ்க்கையின் நிழல்; கலே, வாழ்க்கையின் எதிரொலி.........சுருக்கமாகச் சொன்னுல், வாழ்க்கை இல்லாமல் கலே இல்லே.

கலேயின் எவ்வு நவிலும் வாழ்க்கை இடம் பெறும் என் ருல், வாழ்வின் நல்லாக்கத்திற்கு ஏற்ற பிரசாரங்களேக் கலே யில் புகுத்துதல் கூடாதா என்ற வினு எழும். நேர்மையான கேள்வி. இதற்குரிய விடையினேச் சிலம்போடு ஒட்டி நின்று காண்பதே இப்போது நாம் மேற்கொள்ளவேண்டிய கடமை.

இளங்கோவடிகள் ஏன் சிலப்பதிகாரத்தை எழுதினுர் பலர் பற்பல விதமாகக் கூறுகின்றனர். தமிழகத்தில் வைதி கத்துக்கு இடம் தேடித் தருதற்காக எழுந்தது சிலம்பு என வும், சாத்தன் என்ற தெய்வ வழிபாட்டின் மேம்பாட்டை நிலே நாட்ட வந்தது இந்தக் காப்பியம் எனவும் சொல்லும் கூற் றுக்களே யான் கேட்டிருக்கின்றேன்;படித்தும் இருக்கின்றேன். மேற்குறித்த கருத்துக்களுக்கு மாறுபட்ட கொள்கைகளே வெளியிடுவாரும் மிகப் பலர் உள்ளனர் என்பது யாவரும் அறிந்ததே. இவற்றுள் ஏற்கத்தக்கது யாது என்பதைச் சுருக்கமாக ஆராய்வோமாயின், இளங்கோவடிகளின் நோக் கம் ஒருவாறு புலப்படக்கூடும்.

## வைதிக நெறி:

முதற்கண், இளங்கோவடிகள் வைதிகத்தின் தூதுவர் என்பார் கருத்தைக் காணலாம்.

கோவலன் – கண்ணகி திருமணம் நடந்த வகையினைக் குறிக்குமிடத்து,

*மாமுது பார்ப்பான்*
*மறைவழி காட்டிடத்*
*தீவலம் செய்வது*

(மங்கலம்: ருஉ–ருங)

ஆகிய வைதிகச் சடங்கினை அமைத்துள்ளார் இளங்கோவடிகள். மேலும் வஞ்சிக் காண்டத்து நடுகற் காதையுள் மாடல மறையோன் செங்குட்டுவனை நோக்கிக் கூறுவனவாக இளங்கோவடிகள் குறித்துள்ள

*வையங் காவல்*
*பூண்டநின் நல்யாண்டு*
*ஐயைந் திரட்டி*
*சென்றதற் பின்னும்*
*அறக்கள வேள்வி*
*செய்யா தியாங்கணும்*
*மறக்கள வேள்வி*
*செய்வோ யாயினை*

.....................................

*வானவர் போற்றும்*
*வழிநினக்கு அளிக்கும்*
*நான்மறை மருங்கின்*
*கேள்விப் பார்ப்பான்*

*அருமறை மருங்கின்*
*அரசர்க்கு ஓங்கிய*
*பெருநல் வேள்வி*
*நீசெயல் வேண்டும்*

(நடுகல்: கஉகூ—களஅ)

என்னும் வரிகள் சிந்தனைக்கு உரியன. மாடலன் கூற்றை ஏற்றுச் செங்குட்டுவன் உடனே மறைவேள்வி இயற்றுதற்கான பணிகளை மேற்கொள்வதையும் இளங்கோவடிகள் குறித்துள்ளார்:

*மறையோன் மறைநா*
*உழுது வான்பொருள்*
*இறையோன் செவிசெறு*
*வாக வித்தலின்*
*வித்திய பெரும்பதம்*
*விளைந்துபதம் மிகுத்துத்*
*துய்த்தல் வேட்கையின்*
*சூழ்கழல் வேந்தன்*
*நான்மறை மரபின்*
*நயந்தெரி நாவின்*
*கேள்வி முடித்த*
*கேள்வி மாக்களை*
*மாடல மறையோன்*
*சொல்லிய முறைமையின்*
*வேள்விச் சாந்தியின்*
*விழாக்கொள ஏவி*

(நடுகல்: கஅள—ககூச)

என்ற அடிகளின் வாக்கால் நான்மறை வேள்வியினைத் தமிழ்

வேந்தன் ஏற்றதை — ஏற்குமாறு இளங்கோ செய்ததை — அறிகின்றோம்.

மறை வழிப்பட்ட மணத்தை முதலிலும் மறை வேள்வியினை இறுதியிலும் எடுத்து இயம்பியதோ டன்றி, ஆங்காங்கே வடமொழி மறைக் கோட்பாடுகளையும் வழிபாடுகளையும் ஆசிரியர் சுட்டிச் செல்கின்றார். இவற்றை யெல்லாம் நோக்குவாருள் மகிழ்வார் சிலர்; நோவார் சிலர். ஆயின்; மகிழ்ச்சி நோதல் இரண்டும் விருப்பு வெறுப்புக்களின்பாற் பட்ட செய்கைக ளாகும்.

இளங்கோவடிகள் நான்மறை நெறியினரு மல்லர்: அதனைப் போற்றக் கருதியவரு மல்லர். அவர் தாம் கண்ட தமிழகத்தைக் காவியம் ஆக்கினர்; அவ்வளவே.

அகநானூற்றிலே தமிழகத்தின் திருமணச் சடங்கு விவரிக்கப்படுவதை யாவரும் அறிவர்.* அம்முறைக்கும் சிலம்பிலே நாம் காணும் காட்சிக்கும் நிரம்பிய வேறுபாடு உள்ளது. அங்கே கண்ட முது மகளிரை இங்கே காணோம். இங்கே காணும் மாமுது பார்ப்பானை அங்கே காண இயலாது, இன்னும் பல வேறுபாடுகளையும் காணுகின்றோம். வேறுபட்ட வேத மணத்தை இளங்கோவே புகுத்தினரா? மேலே குறித்த படி ஒரு சாரார் இளங்கோ வேத நெறிக்கு ஆக்கம் தேடவே இங்ஙனம் செய்தார் எனச் சாதிப்பர். அவர் கொள்கை தவறுடையது.

வைதிக நெறியில் மணமுடிப்பார் யாவர்? வைதிக மதக் கோட்பாடுகளை ஏற்றுக் கொள்பவர்கள்தாமே! பிறர் கொள்ளமாட்டார். கோவலன் எச்சமயத்தான்? கொலைக் களக் காதையுள்,

---

* *அகம், 86, 136.*

*'சாவக நோன்பிகள்*
*அடிகள் ஆதலின்*
*நாத்தூண் நங்கையொடு*
*நாள்வழிப் படூஉம்*
*அடிசில் ஆக்குதற்கு......'*

(கொலைக்களம்: கஅ–உ0)

என்ற வரிகள் காணப்பெறுகின்றன. பகற்பொழுதே உணவுண்ணும் சாவக நெறியினன் கோவலன் என்பது தெளிவாகின்றது. கோவலனுக்கும் கண்ணகிக்கும் கூடலில் நிகழ்ந்த துயர் அறிந்த அவர்தம் பெற்றோர் நிலையினைச் சிலப்பதிகாரம் குறித்துள்ளது. இரு தாயரும் உயிர் நீத்தனர். தந்தையர் நிலை யாதாயிற்று?

*கோவலன் தாதை*
*கொடுந்துயர் எய்தி*
*மாபெருந் தானமா*
*வான்பொருள் ஈந்துஆங்கு*
*இந்திர விகாரம்*
*ஏழுடன் புக்காங்கு*
*அந்தர சாரிகள்*
*ஆறைம் பதின்மர்*
*பிறந்த யாக்கைப்*
*பிறப்பற முயன்று*
*துறந்தோர் தம்முன்*
*துறவி எய்தி*

(நீர்ப்படை: கூ0–கூரு)

னன் கோவலன் தாதை. பௌத்த சமயத் துறவிகள் முன் சென்று அம்மதத் துறவி ஆயினன் மாசாத்துவான்.

கண்ணகியைப் பயந்த மாநாய்கன் ஆசீவகத் துறவி ஆயினன். இதனைப் பின்வரும் வரிகள் விளக்குகின்றன:

*கண்ணகி தாதை*
*கடவுளார் கோலத்து*
*அண்ணலம் பெருந்தவத்து*
*ஆசீ வகர்முன்*
*புண்ணிய தானம்*
*புரிந்தறங் கொள்ளவும்......*

(நீர்ப்படை: கூஅ–க00)

இவ்வரிகளால் நாம் உய்த்துணரவேண்டிய ஓர் செய்தி உண்டு. இச்சொற்கள் மாடல மறையோன் ஆகிய வைதிகனால் கூறப்பெறுவன. இச் சொற்களிலே பிற சமயத்தவரைப் பழிக்கும் மனப்பான்மை ஒரு சிறிதும் இல்லை என்பது கருதத்தக்கது. இளங்கோவடிகள் வைதிக சமயப் பாதிரியாராக இருந்திருப்பா ராயின், தம் எழுத்தாணியை இயக்கும் வகையிலேயே இவர்கள் அனைவரையும் முனிபுங்கவர்களாக்கித் தருப்பைப் புல்லை ஏந்த வைத்திருக்கலாம். அவ்வாறு செய்தனரா? இல்லையே! இத்தகைய மனம் படைத்தவர் மண நிகழ்ச்சியைக் கூறும்போது வேண்டுமென்றே வேத நெறியை வலிந்து புகுத்தியிருப்பாரா என எண்ணிப் பார்த்தல் வேண்டும். அவ்வாறு நீள நினைந்தால், தம் காலத்துக்கு முன்னரே ஏற்பட்டுவிட்ட சடங்கினை இளங்கோவடிகள் எடுத்து இயம்பியிருக்க வேண்டும் என்ற முடிவே ஏற்படும்.

'கோவலன் குடியினரும் கண்ணகி குடியினரும் முதற்கண் வேதநெறி மேற்கொண் டிருத்தல் வேண்டும்; பின்னரே வாழ்வில் வெறுப்பேற்பட்டபோது மாசாத்துவான் பௌத்தனாகவும் மாநாய்கன் ஆசீவகனாகவும் ஆகியிருக்க

வேண்டும்'.—இவ்வாறு கொள்வோரும் உளர்[1]. துறவு மேற் கொள்ள நினைந்த வைதிகர்கள் வைதிக சந்நியாசம் மேற் கொண் டிருக்கலா மன்றோ? வேத நெறியினர் விரித் துரைக்கும் நால்வகை ஆசிரமத்துள் சந்நியாசமும் உண்டு. எனவே, அவர்கள் முதற்கண் வைதிகரா யிருந்து துறவு மேற் கொண்ட காலத்து வேற்றுச் சமயங்களை நாடினர் என்று கூறுதல் பொருந்தாது.

மேலும், கோவலன் மணத்தை வைதிக நெறியினதாக முதலிற் கூறிய இளங்கோவடிகள் அவனைச் சாவக நோன் பினனாகப் பின்னர்க் குறிக்கின்றார். வைதிகத்தி லிருந்து எப் போது மாறினான்? மாறுவதற்கு ஏதுவான எந்த வகையான நிகழ்ச்சியையும் காணோம்! எனவே, சட்டை மாற்றுவது போல் சமயத்தையும் அக்காலத்தவர் மாற்றினர் என்று கொள்வது பொருந்தாது.

இவ்விடத்தே ஏனைய பழந்தமிழ்க் காப்பியங்களில் உள்ள திருமணக் காட்சிகளை நினைவூட்டுதல் சாலப் பொருத்த மாகும். சீவக சிந்தாமணி சமண சமயக் கருத்துக் களைத் தன்னகத்தே நிறைவுறப் பெற்றுப் பொலிவது. அதனை அருளிய திருத்தக்க தேவர் சமண சமயத்தைப் பரப்பும் நோக்கமே உடையவர். சிந்தாமணியின் தலைவனாகிய சீவக நம்பி தான் வாழ்ந்த வாழ்க்கையாலும் பிறருக்குக் காட்டிய வழியாலும் சமண சமயத்தையே போற்றினான். அந் நம்பி யின் வாழ்வையும் வழியையும் வகுத்துரைக்கும் அக் காப்பி யத்துள் வரும் சில திருமணக் காட்சிகளை இங்கே காணலாம். காந்தருவதத்தையைச் சீவகன் ஏற்ற திருமணச் சடங்கினைச் சொல்லப் புகுந்த திருத்தக்கதேவர்,

1 *திரு. மார்க்கபந்து சர்மா வரைந்துள்ள சிலப்பதிகார ரசனை என்ற நூலைக் காண்க.*

*இன்னியம் முழங்கி ஆர்ப்ப*
*ஈண்டெரி திகழவேதம்*
*துன்னினர் பலாசிற் செய்த*
*துடுப்பின்நெய் சொரிந்துவேட்ப*
*மின்னியல் கலச நன்னீர்*
*சொரிந்தனன் வீரனேற்ருன்......*

(சிந்: அ௩௪)

என்று குறித்தார். வேத நெறிப்பட்ட அந்தணர்கள் நெய் சொரிந்து வேத மந்திரங்கள் ஓதி வளர்த்த தீ முன்னர்ச் சீதத்தன் நீர் சொரிந்து காந்தருவதத்தையைச் சீவகனுக்குத் தந்த காட்சிதான் இங்கே காணப்படுகின்றது. கனகமாலை யார் இலம்பகத்துள்ளும் தீ வளர்த்துத் திருமணம் செய்த காட்சி (௧௬அ௭) வருகின்றது. சுரமஞ்சரியைச் சீவகனுக்கு மணம் செய்துகொடுத்தவன் குபேரதத்தன். அவன் சுரமஞ் சரிக்குக் கொடுத்த சீதனம்பற்றிக் குறிப்பிடும்போது *'எரி அழல்முன்னர் நேர்ந்தேன் என்மகட்கு* (உ0௭௬) என்று காணப்படுகின்றது. இங்கே குறித்த மறைநெறிப்பட்ட திருமண நிகழ்ச்சிகள் மிக விரிவாக இலக்கணையார் இலம் பகத்துள்ளே பேசப்படுகின்றன. வேத நெறியுணர்ந்து திளைத்த அந்தணர் தருப்பை முதலியவற்ருற் காப்பிட்ட மணற்பரப் பிலே நெய்விட்டு வளர்த்த நெருப்பின் முன்னிலையில் திருமணம் நடத்தியதையே திருத்தக்கதேவர் கூறுகின்ருர்.

சீவக சிந்தாமணி போலவே பெருங்கதையும் சைன காவியமே. அதன்கண் காணப்படும் ஒரு திருமணக் காட்சி யையும் இங்கே காணலாம். வாசவதத்தைக்கும் உதயண னுக்கும் நிகழ்ந்த திருமணம் மிக விரிவாகக் கொங்குவேளி ரால் பேசப்படுகின்றது. நன்முழுத்தம் இதுவெனக் குறிப் போர் தீ வளர்க்கும் நேரம் வந்தது எனக் கூறினர்; அப்போது

*அறுதொழில் முத்தீ*
*அருந்துறை போகிய*
*மறைநவில் நாவின்*
*மரபியல் அந்தணன்*
*பல்பூம் பந்தருள்*
*செல்வம் சிறக்கும்*
*இருநிலத்து இலக்கணம்*
*இயற்பட நாடி*
*வெண்மணல் நிரப்பம்*
*கொளீஇக் கண்ணுறப்*
*புண்ணியப் பலாசின்*
*கண்ணிறை சமிதை*
*முக்குழிக் கூட்டத்து*
*உட்பட ஒக்கி*
*ஆற்ருச் செந்தீ*
*அமைத்தனன்..............*

(உசகூஉ—உசகூகூ)

என்று கொங்குவேளிர் கூறுகின்ருர். இதன்மேலும் விவரிக் கப்படுகின்ற மணச் சடங்கு நிகழ்ச்சிகளில் வேத நெறிக்கு இயைந்த கருத்துக்களும் காட்சிகளும் உள்ளன.

சிந்தாமணி, பெருங்கதை ஆகிய இரண்டும் சைன காவியங்கள்; சைன சமய மேன்மையைப் பரப்புதற்கென்றே எழுந்தன எனக் கூறினும் தவறில்லை. அப் பெருநூல்கள் இரண்டினும் பேசப்படுகின்ற திருமண நிகழ்ச்சிகள் சிலப் பதிகார நிகழ்ச்சியையே பெரும்பாலும் ஒத்துள்ளன.

இந் நிலையில் நாம் கொள்ளத்தக்க முடிவு இதுதான்: எச்சமயத்தவரும் திருமண நிகழ்ச்சியைப் பொறுத்தவரை யில் மாமுது பார்ப்பானின் மறைவழியினையே மேற்கொண் டிருக்க வேண்டும். அல்லது, எச்சமயத்தவரும் ஏற்குமாறு

அமைந்த ஏதோ ஒரு மறை நெறி இருந்திருக்கலாம். அல்லது, வைதிக நெறியினரே அவ்வச் சமயத்தவர்க்கு ஏற்ற படி நடந்திருக்க வேண்டும்......... எங்ஙன மாயினும் இளங் கோவடிகள் வேத வழக்காற்றைப் பரப்பவே சிலம்பினை யாத்தார் என்று கொள்ளுதல் எவ்வாற்றானும் ஏற்றுக் கொள்ளத் தக்கதன்று.

'மணவினைச் சடங்கு கிடக்கட்டும்; வேத வேள்விக்கு என்ன சொல்லமுடியும்' என வினவலாம். அந் நிகழ்ச்சியாலும் இளங்கோவடிகள் தம் கருத்தைக் கூறினர் என்றல் பொருந்தாது. எங்ஙனம்?

மதுரைக் காண்டத்தின் முதற்கண் உள்ள காடுகாண் காதையுள் எரி ஓம்பும் வேதியன் ஒருவன் வருகின்றான். அவனிடமிருந்து கவுந்தி முதலான மூவரும் மதுரைக்குச் செல்லும் வழியைக் கேட்டு அறிகின்றனர். அவன் அவர்களுக்கு மூன்று வழிகள் கூறுகின்றான். இடப்பக்கத் தமைந்த வழிபற்றிச் சொல்லும் வரிகளிற் சில நாம் அறியத் தக்கன.

*விண்ணோர் ஏத்தும்*
*வியத்தகு மரபின்*
*புண்ணிய சரவணம்*
*பவகா ரணியோடு*
*இட்ட சித்தி*
*எனும்பெயர் போகி*
*விட்டு நீங்கா*
*விளங்கிய பொய்கை*
*முட்டாச் சிறப்பின்*
*மூன்றுள ஆங்குப்*
*புண்ணிய சரவணம்*
*பொருந்துவி ராயின்*

*விண்ணவர் கோமான்*
*விழுநூல் எய்துவிர்*
*பவகா ரணிபடிந்து*
*ஆடுவி ராயின்*
*பவகா ரணத்திற்*
*பழம்பிறப் பெய்துவீர்*
*இட்ட சித்தி*
*எய்துவி ராயின்*
*இட்ட சித்தி*
*எய்துவிர் நீரே*

(காடுகாண்: கூஉ—க0ரு)

என்று பலவாறு கூறுகின்றுன் அம்மறையவன். 'அருமறை மருங்கின் ஐந்தினும் எட்டினும் வருமுறை எழுத்தின் மந்திரம் இரண்டும்' பெரியன எனக் கருதிப் போற்றும் வேதியனின் சார்பினர் அல்லர் இளங்கோவடிகள். அவன் சார்பினராயின் அன்னவனுக்கு மறுப்புரை நிகழ்த்த மாட்டார். ஆயின், அவன் கூற்றுக்களைக் கவுந்தியடிகளைக் கொண்டு மறுக்கின்றுர்:

*மாமறை யோன்வாய்*
*வழித்திறங் கேட்ட*
*காவுந்தி ஐயைஓர்*
*கட்டுரை சொல்லும்*
*'நலம்புரி கொள்கை*
*நான்மறை யாள*
*பிலம்புக வேண்டும்*
*பெற்றிஈங் கில்லை'*

(காடுகாண்: கரு0—கருரு)

எனப் பொதுப்பட முதற்கண் மறுக்கின்றுர். பின்னர் அவன்

கூறிய ஒவ்வொரு பொய்கை பற்றியும் அருக சமய நெறிப் படி மறுப்புரைக்கின்றார்:

*கப்பத்து இந்திரன்*
*காட்டிய நூலின்*
*மெய்ப்பாட் டியற்கையின்*
*விளங்கக் காணாய்*

(காடுகாண்: கருச—கருரு)

என்று சொல்லிப் புண்ணிய சரவணப் பொய்கை மூழ்க வேண்டாமை சுட்டுகின்றார். அருகதேவன் அருளிய பரமாக மம் போதும் என்பது அவர் துணிபு. இனி, இவ்வண்ணமே பவகாரணி, இட்ட சித்தி ஆகிய பொய்கைகளிலும் மூழ்க வேண்டுவ தில்லை எனக் குறிக்கிறார்:

*இறந்த பிறப்பின்*
*எய்திய எல்லாம்*
*பிறந்த பிறப்பிற்*
*காண யோநீ*

(காடுகாண்: கருசு—கருஎ)

எனவும்,

*வாய்மையின் வழாது*
*மன்னுயிர் ஓம்புநர்க்கு*
*யாவதும் உண்டோ*
*எய்தா அரும்பொருள்*

(காடுகாண்: கருஅ—கருகூ)

எனவும் வரும் அடிகள் ஆராயத் தக்கன. தாம் வரைய மேற்கொண்ட கதைக்கு நேரடியான தொடர்பு எதுவுமில்லா

ஒரு நிகழ்ச்சியினைக் கூறவந்த இடத்தில் ஒரு மறையவனைப் படைத்து அவன் பேசும் மந்திர நம்பிக்கைக் கூற்றுகளை மறுத்துரை பேசும் பொறுப்பைக் கவுந்தியடிகளுக்கு ஆக்கும் அடிகள் வைதிகத்தின் தூதுவராக இருக்க முடியுமா? முடியாது.

சேரன் செங்குட்டுவன் வேத வேள்வி செய்தனன் என்பதால் இளங்கோ அதனைக் கூறினார் என்று கொள்வதே நேர்மையாகும். 'சேரன் செங்குட்டுவன் என்பவன் வரலாற்றில் யாண்டும் இல்லாதவன்; அவனுக்கு இளங்கோ என்ற இளவலும் இல்லை' என்று ஆராய்ந்து முடிவு சொல்வாரும் உளர்.[2] பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி போன்ற பண்டைத் தமிழ் வேந்தர் வேத வேள்வி செய்யும் வழக்கத்தை மேற்கொண்டிருந்தனர் என்பதை அறிந்திருந்த சிலப்பதிகார ஆசிரியர் தாம் 'படைத்த' செங்குட்டுவன்மாட்டு அவ் வழக்கத்தினை ஏற்றினார் என்று இவ்வாராய்ச்சியாளர்கள் அமைதி காணலாம்.

## சாத்தன் வழிபாடு

இனி, சாத்தன் வழிபாட்டினை ஏன் கூறினார்? அவர் காலத்தில் தமிழகத்தில் அவ் வழிபாடு இருந்தது; கூறினார். அவ்வளவே. அது பெரிதென்றோ சிறிதென்றோ தீர்ப்புக் கூறும் பொறுப்பினை இளங்கோ ஏற்றுக்கொள்ள வில்லை. 'சிலப்பதிகார காலத்தில் வடநாட்டுக் கலைகள் கலந்துவிட்டமையால் இச் சாத்தன் வணக்கம் சான்றோரால் எண்ணப்

2 திரு ஆர். கே. சண்முகம் செட்டியார் வரைந்த உரைப் பதிப்பின் மதிப்புரையாக உள்ள திரு. வையாபுரிப் பிள்ளையவர்களின் கூற்றுக்களும் பச்சையப்பர் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் திரு. வெ. சு. சுப்பிரமணிய ஆச்சாரியார் அவர்களின் நூற் கருத்துக்களும் காண்க.

படாததாய்ப் புறமாயிற்று'—என ஒரு பேராசிரியர் குறிக்கின்ருர்.[8] அது சிறிது என்று சான்ருேரின் புறக்கணிப்பால் ஒதுக்கப்பட்ட தாயின் இளங்கோவடிகள் ஏன் கூறுகின்ருர்? அவ் வழிபாட்டினை மாண்பற்றதாகக் குறிக்காமல், அதனுலும் வியத்தகு நிகழ்ச்சிகளை யன்ருே விரித்துக் காட்டுகின்ருர்! அச் சாத்தன் வழிபாடு செய்த தேவந்தி ஆவேசமுறுகின்ருள்; ஆவேசமாக வந்த சாத்தனின் சொற்படி மாடல மறையோன் தன் கரக நீரை மூன்று சிறுமியர்மீது தெளிக்கின்ருன். அச் சிறுமியர் பழம் பிறப்பின் உணர்ச்சி பெற்று அரற்றுகின்றனர். அவர்கள் கோவலன் கண்ணகியரின் தாயரும், மாதரியும் ஆவர். இத்தகைய வியப்பான நிகழ்ச்சிகளுக்குக் காரணமாகக் காட்டப்பெறுவது சாத்தன்வழிபாடு. இதனைச் சான்ருேர் புறக்கணித்தது என்று ஏன் கொள்ளுதல் வேண்டும்?

மேலும், அப்பேராசிரியர் கூற்றுப்படி நோக்கினுல் இப் புன்னெறி தொலைந்ததற்குக் காரணம் வடநாட்டுக் கலைகள் கலந்தமையே ஆகிறது. வடநாட்டுக் கலைகள் என்பது நான்மறை வேள்வி நெறிப்பட்ட வைதிகம்தான். அந்த வைதிகத்தைப் பரப்பிய மாடலன் வாயிலாகவே சாத்தன் தன் செயலை நடத்துகின்ருன். மேலும், தேவந்தி யார்? 'பீடன்று' என்ற தமிழ்ச் சொல்லைக் கண்ணகிபாற் கேட்கும் பேறு பெற்ற வேதியப் பெண்தானே!

நம் கருத்தை இலக்கியத்திலே திணிப்பது பொருந்தாத வழக்கமாகும். இளங்கோவடிகள் தாம் கண்ட தமிழ்ச் சமுதாய வாழ்க்கையை அப்படியே தருகிருர். சிறியது பெரியது, இழிந்தது உயர்ந்தது என்ற தீர்ப்புக் கூறும் விருப்பம் அவருக்கு இல்லை.

---

8 திரு. வி. ரா. இராமச்சந்திர தீட்சிதர்.

## சமயப் பூசலும் பிணக்கும்

இளங்கோவடிகள் தீட்டிய சிலப்பதிகார காலத்தில் எல்லாச் சமயங்களும் தமிழகத்தில் உலவின. சிலம்புக் காலம் ஒரு மாறுகாலம் (Transition Period). சங்ககாலச் சமுதாயத்தில் இறை வழிபாடு உண்டு; ஆனால் நிறுவன வடிவான சமயம் (Institutional Religion) இருந்ததாகச் சொல்ல இயலாது. இத்தகைய தமிழகத்தில் நெடுங்காலத்துக்கு முன்னரே வைதிகம் படையெடுத்தது. பின்னர்ச் சமண, பௌத்தங்கள் புகுந்தன. வேறு பல சிறு வழிபாடுகளும் இடம்பெற்றன. சமயம் என்று நிறுவனமாகின்றதோ அன்றே மந்திர மாயங்களும் இடம்பெற்றே தீரும். அந்த நிலையில் மக்கள் அற்புத நிகழ்ச்சிகளை நம்புவர்; போற்றுவர். இத்தகைய சமுதாயம் சமரசமான ஒருமைப்பாட்டுடன் இருந்தால் நல்லது; பெரும்பாலும் இருக்கமுடியாது. ஒருமைப்பாட்டுரிமை மறைந்தால் சமயப் பூசலும் பிணக்கும் பெருகும். இவற்றின் பெருக்கத்தையே இடைக்காலத் தமிழகம் கண்டது. இப்பிணக்கால் வரக்கூடிய இழிவுகளை இளங்கோவடிகள் எதிர்பார்த்திருக்கக் கூடும். ஆகையால்தான் பல்வேறு சமயத்தவர்களையும் ஒப்பப் புகழ்ந்து போற்றுகின்றார். மாடலன் பௌத்தர்களையும் ஆசீவகரையும் மதிப்புடன் குறிப்பதும், வழிகூறிய மறையவனைக் கவுந்தியடிகள் 'நலம்புரி கொள்கை நான்மறையாளன்' எனப் போற்றுவதும் பொருளற்ற நிகழ்ச்சிகள் அல்ல. அடிப்படையில் நல்ல நோக்கோடு நின்று 'காமுறு தெய்வம் கண்டு அடிபணி'யும் உரிமை யாவர்க்கும் உண்டு என்பதே இளங்கோவடிகளின் கருத்தாகும். இந் நடுவுநிலைமை பிறழ்வதால் ஏற்படும் கோணலைச் சாத்தனாரின் மணிமேகலை புலப்படுத்துகின்றது. சமயப் பூசல் கூடாது என்ற எச்சரிக்கை விடுப்பது சிலப்பதிகாரம். அந்த எச்சரிக்கையினைப் புறக்கணித்த தமிழகம் பட்ட அல்லல் தெரியுமே!

சமயத் துறையில் இளங்கோவடிகள் தமக்கென ஒரு நெறி அற்றவர் அல்லர். அவர் சமண நெறியினர்; ஆயினும் அதனை வெளிப்படையாகக் கூறுது போயினமை பெரிதும் கருதத் தக்கது. தம்மை மறந்து சில குறிப்புத் தந்துள்ளார் எனினும், பொதுமையே பெரிதும் பேணுகின்றுர். ஏன்? தமிழகத்தின் நல்வாழ்வே அவர் நோக்கம். சமயப் பூசலுக்குத் தமிழகம் இடம் தருத லாகாது என்ற பேராவல் படைத்தவர் அப்பெருந்தகையாளர்.

தன் சமயப் பற்றில் உரிமையும் பிற சமயத்தவரோடு இனிய உறவும் கொண்டு, ஒரே தமிழினத்தவராக வாழ்தல் வேண்டும். இதுவே இளங்கோவடிகள் சமயத் துறையினர்க்குத் தம் காவிய வாயிலாகத் தெரிவிக்கும் செய்தி.

## சமணமும் சிலம்பும்

நாம் ஏற்கெனவே குறித்துள்ளபடி எந்தக் கலைஞனும் வாழ்க்கைக்கு அப்பாற்பட்டவ னல்லன். அவன் தான் காணும் வாழ்க்கையைச் சித்தரிக்கும்போது தன்னை அறியாமலே தான் நம்பும் தத்துவத்தையும் வெளியிடக் கூடும். வேண்டாம் என்று அவன் தீவிரமாக நினைத்தாலும் அந்தத் தத்துவம் அவனையும் மீறி வெளிவந்துவிடுவ துண்டு. இக் கருத்து இலக்கிய ஆராய்ச்சியாளர்கள் உடன்பட்ட தாகும். இக் கருத்தின் வழி இளங்கோவடிகளின் சிலம்பினை நோக்கினுல், தம்மை மறந்து தம் சமயக் கோட்பாட்டை வெளிப்படுத்துவதை அறியலாம். மேலும், தம் சமயக் கருத்துக்களைப் புலப்படுத்துதற்கே கவுந்தியடிகளைப் படைத்தனர் என்று கொள்வதிலும் தவறு இல்லை.

சைனத்தைப் பரப்புவது அவர் நோக்கமாயின், சாத்தனுரைப் போலப் பிற சமயங்களைப் பழித்து, தம் கோள் நிறுவியிருக்கலாம். அங்ஙனம் அவர் செய்யவில்லை என்பதே இளங்கோவடிகள் தமிழகத்துக்கு விடுத்த எச்சரிக்கையை வலிமையுடைய தாக்குகின்றது.

சமணர்கள் தமிழ் மொழிக்குச் செய்த நற்பணிகள் பல வாகும். இசை முதலான நுண்கலைகள் மனித வாழ்வை இழிநிலைப் படுத்தும் என்ற கருத்தால், அத்தகு நுண்கலைகளை மறைத்தனர், அழித்தனர் என்பது சமணர்களுக்கு யாண்டும் ஏற்படும் ஒரு பழிப்புரையாகும். இளங்கோவடிகளும் நுண் கலைகளின் தீய விளைவுகளைப் புலப்படுத்துமாற்ருன் சமணர்க் குச் சிறப்பு நல்கவே சிலப்பதிகாரம் இயற்றினர் என்ற வியத் தகு 'ஆய்வுரை' பேசப்படுதலை ஒருகால் கேட்க நேர்ந்தது. நுண்கலைப் பயிற்சியும் அதன்பால் ஈடுபாடும் கொண்ட கோவலன் ஆடல் பாடல் அழகு என்ற கலைகளின் வடிவான மாதவிமாட்டு மனம் பறிகொடுத்தமையால் ஏற்பட்ட அவ லமே சிலப்பதிகாரம் என்றும், மறைமுகமாக இக்கருத்தினை ஊட்டிச் சமணத்தை நிலைநாட்டுவதே ஆசிரியர் கருத்து என் றும் அவ்வாராய்ச்சியாளர் விரிவுரை கூறி விளக்கினுர்! நுண்கலை எதிரியாக இளங்கோவடிகளை ஆக்குவதில் அவ் வறிஞர்க்கு ஏற்பட்ட ஆவல், அடிப்படை ஆதாரமற்றுத் தவிக்கின்றது. 'இசைக் கலையின் எதிரி' இளங்கோவடிகள் வரிப்பாடல்களை இயற்றுவாரா? நுண்கலையின் உருவகமாகிய 'மாதவியின் எதிரி'யான இளங்கோ அவளை வானுற ஏத்திப் புகழ்வாரா? முதலிலும் முடிவிலும் இசை, நாடக மயமாகவே நூலை ஆக்கியிருப்பாரா? அரங்கின் அமைப்பு, ஆடலரசியின் இயல்பு, இசையாசிரியன் இலக்கணம் ........... என்றின்ன சிறப்பியல்புகளோடு மட்டுமோ சிலம்பு நிற்கின்றது! இருந்து இறந்துபோன தமிழர் இசைக் கருவியாகிய யாழ் விபுலாநந் தர் வாயிலாக உருவாவதற்கு 'இசையின் எதிரி' இளங்கோ வடிகள்தாமே காரணம்! — தமிழகத்தின் நல்வாழ்வு கருதி இசை முதலான நுண்கலைகளைப் போற்றியது இளங்கோவின் இலக்கியம். இதனை நிறைவேற்றுவதில் இளங்கோவின் சம யம் குறுக்கிடவில்லை. இதுவே இலக்கிய ஆசிரியரின் நடுவு பிறழாத நன்னெஞ்சை விளக்குகின்றது.

சா

# இலக்கியத்தில் கலைஞன் இதயம்

''வாழ்க்கை பலதிறப்பட்ட கூறுகள் உடையது. பலவாகிய அக் கூறுகளில் ஒன்றோ பலவோ ஆகிய வாழ்க்கைப் பகுதிகளை எடுத்து விளம்புவதே கலைஞனின் குறிக்கோளாக அமைகின்றது. எனவே, வாழ்க்கையை விளம்ப முனைகின்ற பொழுது தன்னிடத்து வாழ்க்கை எவ் வெண்ணத்தை எழுப்பியுள்ளது என்பதை வெளிப்படையாகவோ, மறைமுகமாகவோ, குறிப்பாகவோ தெரிவிக்காமல் தப்பமுடியாது. தான் எழுத நினைக்கும் கதையினைக் குறிப்பிட்ட சில கொள்கைகளையோ, கருத்துக்களையோ வெளியிடுதற்கான சாதனமாக்குவதுபற்றிக் கனவுகூடக் காணுமல் இருக்கலாம்; எனினும், எந்தக் கதைகளிலும் சில கொள்கைகளும் கருத்துக்களும் இடம்பெற்றே தீரும். மிக எளிய கதைகூட இக் கருத்துவழி நின்று ஆராயப்படுமாயின், உறுப்பினர்களிடமும் நிகழ்ச்சிகளிலும் தெளிவாகக்கூடிய அறவுண்மைகள்

இருப்பதைக் காட்டிவிடும். எனவே, இந்த அளவிலேனும் ஒவ்வொரு புனைகதையும்—எவ்வளவு நொய்ம்மை யுடையதாயினும்—உலக வாழ்வு பற்றிய ஒரு தீர்ப்பினை அடிப்படையாகக் கொண்டே எழுந்திருக்கும் எனலாம். பொதுப்படையாகவுள்ள பல கோட்பாடுகளையும், பருமையான நிலையிலுள்ள பொதுவான வாழ்க்கைத் தத்துவத்தையும் தருவதே புனை கதைகளின் அடிப்படையாக இருப்பதைக் காணலாம். .........மிகப் பெரிய புனைகதை ஆசிரியர்கள் யாவரும் வாழ்க்கையைப் பற்றிய சிந்தனையாளர்க ளாகவும், அவ்வாழ்வினை ஊன்றி நோக்குபவர்க ளாகவுமே இருந்திருக்கின்றனர். மக்களைப் பற்றிய பண்பாராய்ச்சியும் உலகை நிகழ்த்தும் எழுச்சி, உணர்வு, வெறிகளின் தெளிவும் நீடு நிலவுகிற உண்மைகள், அனுபவ முதிர்ச்சியில் கண்ட சிக்கல்கள் ஆகியவற்றைத் தெளிவுறக் காட்டும் பண்பும் — யாவும் ஒருங்கு இணைந்து ஆசிரியர்கள் உலகைப் பற்றிக் கருதிய கருத்துக்கு ஓர் அறவழிப்பட்ட நிலைக்களனை அளித்துவிடுகின்றன. அறிவுநெறி நிற்கும் எந்த வாசகனும் இந்த அறத்தின் அடிப்படையைப் புறக்கணித்துவிட முடியாது. புனை கதைகளிலே வாழ்க்கைத் தத்துவம் எவ்வளவு இன்றியமையாதது என்பதை நாம் எப்படி உணரலாம்? ஏதேனும் ஒரு சிறந்த புனை கதையைப் பற்றி ஆராய்ந்து அளவளாவத் தொடங்கினால், சிறிது நேரத்திற் கெல்லாம் வாழ்க்கையைப் பற்றியே அலசி ஆராய்ந்துகொண் டிருக்கிறோம் என்பதை அறிய நேரிடுவதிலிருந்து இப் பேருண்மையினை நாம் தெளிவாக அறியலாம். [ஷேக்ஸ்பியரின் நாடகத் திறனாய்வின் மிகப் பெரும்பகுதி மானிட வாழ்க்கைத் திறனாய்வாகவே அமைகிறது. ஏனெனின் ஷேக்ஸ்பியரின் நாடகப் படைப்புகள் வாழ்க்கையின் பல்லாயிரக் கணக்கான பகுதிகளைத் தொட்டு உறவாடிச் செல்கின்றன என்று பேராசிரியர் மௌல்டன் குறிப்பிடுவது கருதத் தக்கது]''

—ஹட்சன்.

## இளங்கோவடிகளின் சமயநெறி

மேலே விவரித்த கருத்துவழி நின்று சிலப்பதிகாரச் செய்யுளை ஊடுருவி நோக்கின், வாழ்க்கைபற்றி இளங்கோ வடிகள் யாது கருதினுர் என்பது தெளிவாகப் புலப்படும். இக் கட்டுரையின்கண் சமயவாழ்க்கை பற்றிய கருத்துக்களை மட்டிலும், சிலப்பதிகாரக் கதையில் உள்ளவாறு காணலாம். சங்க காலத்தை அடுத்து நிலவிய நிலைமையினை உருவாக்க நினைந்தார் அப்பெருந்தகை. தமிழினம் என்றென்றும் பெரு மிதம் உறுதற் கேற்ற வண்ணம் சிலம்பின் வென்ற சேயிழை யின் கதையைச் செப்பினுர். தமிழக வாழ்வினை உருவாக் கும் வகையில் தமிழினத்தின் நல்வாழ்வுக்கு வழிகோல வேண்டும் என்பதே இளங்கோவடிகளின் எண்ணம்; 'தன் கோள் நிறுவுதல்' அவர் கருத்தன்று. தம் கோட்பாட்டைப் பிறர்மாட்டுத் திணிக்கும் முயற்சியினைச் சிலப்பதிகாரத்திலே காண இயலவில்லை என்பதனுல், அவர் தமக்கென ஒரு தத் துவ நெறி அற்றவராயினுர் என்று கொள்ளுதல் தவறு. ஹட் சன் குறிப்பிடுவதுபோல மறைமுகமாகத் தாம் நம்பிய சமய நெறியினைக் குறித்திருக்கின்றுர்.

கண்ணகி கோவலர்க்கு வழித்துணையாய் அமைந்த கவுந் தியடிகள், இளங்கோ படைத்த பாத்திரம்; தாம் எண்ணிப் போற்றிய சமண சமயக் கருத்துக்களைப் பரப்புதற்குக் கவுந்தியடிகளைப் பயன்படுத்துகின்றுர். இது மறைமுகமான முயற்சி. ஆயினும் கவுந்தியடிகளைக் கதையினேடு இரண் டறக் கலந்துவிடுமாறு செய்துவிட்டமையால், ஆசிரியரின் பிரசாரப் போக்கு வலிமை அற்றுவிடுகிறது. சமண சமயக் கருத்துக்களை வலியுறுத்தும் நோக்கம்மட்டுமே ஆசிரியர்க்கு இருந்திருக்கு மாயின், கவுந்தியடிகளை வழித்துணை என்ற அள வோடு நிறுத்தியிருக்க வேண்டும். ஆயின், கவுந்தியடிகள் கதைத் தலைவன் தலைவியரின் வாழ்க்கையோடு இணைந்த

தோடு மட்டுமன்றி, அவர்தம் வாழ்வோடு இரண்டறக் கலந்துவிடுகின்ற தன்மையினையும் சிலப்பதிகாரத்தில் காணு கின்றோம். கோவலன் கொலையுண்ணவும், யாரும் படாத பெருந்துயரம் கண்ணகி படவும் ஆன அவல நிகழ்ச்சிகளை அறிந்த கவுந்தியடிகள் தாமும் உயிர் விடுக்கின்றார். பாண் டியன் செய்த பிழை கவுந்தி மூதாட்டிக்குச் சினம் விளைத் தது. ஆயின், வளைந்த கோலை நிமிர்த்த அவன் உயிர்விடுத்த செய்கை அப்பிராட்டியின் சினத்தை அவித்தது. ஆயினும், கண்கண்ட தெய்வம் எனத் தம்மால் போற்றப்பட்ட கண்ண கிக்கும் அவள் கணவனுக்கும் ஏற்பட்ட அவலம் கவுந்தியடி களின் பற்றற முயன்ற நெஞ்சையும் பற்றி வாட்டிற்று. எனவே, உண்ணா நோன்பு மேற்கொண்டு உயிர்விடுத்தனர்.

*தவந்தரு சிறப்பிற்*
*கவுந்தி சீற்றம்*
*நிவந்தோங்கு செங்கோல்*
*நீணில வேந்தன்*
*போகுயிர் தாங்கப்*
*பொறைசா லாட்டி*
*என்னோ டிவர்வினை*
*உருத்த தோவென*
*உண்ணா நோன்பொடு*
*உயிர்பதிப் பெயர்த்த*

(நீர்ப்படை: எகூ—அரு)

செய்தியினை இளங்கோவடிகள் இறுதியில் அறிவிக்கின்றார். இந் நிகழ்ச்சியால் கவுந்தியடிகள் சிலப்பதிகாரக் கதையூடு பின்னிப் பிணைந்து, இரண்டறக் கலந்துவிடுகின்றார். எனவே, சமயப் பிரசாரப் பாணி என்று அடையாளம் காண இயலா வண்ணம் கலைப் பண்பு எய்துகின்றது. மறைமுகமாகத் தம்

சமய நெறியைப் புலப்படுத்திய இளங்கோவடிகள், கலையிய லின் மேன்மை வெற்றுப் பிரசாரத்துக்காக இழிநிலை எய்து தல் கூடாது என்ற உண்மையினை இங்கே விவரித்ததைக் கண்டோம்.

சைன சமயமே தாம் போற்றிய சமயம் என்பதை மறை முகமாகக் குறித்து, அதற்கு ஆக்கம் தேடும் ஓர் இடமும் சிலம்பின்கண் உள்ளது. நாடுகாண் காதையுள் வருகின்ற சாரணர், கதைக்கு எவ்வகையானும் தொடர்பு உடையா ரல்லர். அவர்களின் வருகை, அவர்தம் தலைவன் ஊழ்வினை யின் ஆற்றல்பற்றியும் அருகதேவன் மாண்பு பற்றியும் விரித் துரைத்தல், அவ்வுரை கேட்ட கவுந்தியடிகள் அருகனைத் தவிரப் பிற தெய்வம் போற்றுவதில்லை என்று கூறுதல் முதலிய செய்திகளால் அருக சமயப் பிரசாரம் அன்றி வேறு எதுவும் விளங்குவதில்லை. மேலும்,

*அங்கம் பயந்தோன்*
*அருகன் அருள்முனி*
*பண்ணவன் எண்குணன்*
*பாத்தில் பழம்பொருள்*
*விண்ணவன் வேத*
*முதல்வன் விளங்கொளி*
*ஓதிய வேதத்து*
*ஒளியுறின் அல்லது*
*போதார் பிறவிப்*
*பொறியறை யோர்எனச்*

(நாடுகாண்: கஅஎ—ககக)

சாரணர் கூறுமாற்ருல், அருக தேவனைச் சார்ந்தாலன்றிப்

பிறவி என்னும் பூட்டிய அறைச் சிறையில் சிக்கியோர் வெளிவந்து விடுதலையடைய மாட்டார் என்ற கருத்தினை வலியுறுத்துவதை அறிகின்றோம். இதே கருத்தினைக் கதை யோடு இணைந்து வருவோரும் இடையீடின்றிக் கலந்தோரும் ஆகிய பாத்திரங்கள் கூறியிருப்பின், கவலை இல்லை. அக் காலத்தின் ஒருசார் கருத்தினைக் கலைஞன் தருகின்றான் என்ற நிலையோடு அஃது அமையும். ஆயின், இளங்கோ வடிகள் இக்கருத்தினைத் தெரிவிக்கும் முறை ஊன்றி நோக் கற்பாலது. சிலம்பின் வென்ற நங்கையின் சித்திரத்துக்கு எவ்வாற்றானும் முன்னும் பின்னும் தொடர்பற்றார் ஆகிய சாரணர் இடைநடுவே நுழைக்கப் பெறுகின்றனர்; அருக சமய மேன்மையினை வலியுறுத்தியபின் வந்த சுவடுதானும் தெரியாமல் கரந்து கரைந்து போகின்றனர். எனவே, இப் படைப்பு இளங்கோவடிகளின் இதயத்திலிருந்த எண்ணத் தினைப் புலப்படுத்துவதற்கே யாகும் என்பது தெளிவு.

கவுந்தியடிகள், சாரணர் ஆகிய இருவராலும் இளங்கோ வடிகள் தம் சமயத் தத்துவத்தினை விளக்க முயன்றமையினை இதுகாறும் கண்டோம். ஆயின், நாம் ஏற்கெனவே குறித் துள்ளபடி தம் கருத்தைப் பிறர்மாட்டுத் திணித்துத் 'தன் கோள் நிறுவும் மதம்' அவர்க்கு உடன்பா டன்று. ஆகையி னால்தான், சிலப்பதிகார நூல் முழுமையிலும் சமய நெறிகள் யாவற்றையும் பெரிது சிறிது என்ற வேறுபாடின்றி ஒப்பப் புகழ்ந்துள்ளார். சமய நெறிகளின் ஒருமைப்பாட்டினை உடன் பட்டுப் போகின்ற இடங்களும் சிலம்பில் காணப்படுகின்றன. ஒரு சமயத்தார் பிற சமயத்தார்களை வெறுப்பின்றிப் போற் றிய காட்சியினை முன்னம் கண்டோம். ஈண்டும் ஒன்றினைக் காண்போம்.

கோவலன் சைன சமயத்தவன்.* ஆனால், காடுகாண் காதையுள் அவன் கொற்றவை மந்திரத்தை ஓதி, மயக்கும் கானுறை தெய்வத்தினின்றும் தப்புவதைக் கேட்கின்றோம்.

*மயக்கும் தெய்வம்இவ்*
*வன்காட் டுண்டென*
*வியத்தகு மறையோன்*
*விளம்பின னாதலின்*
*வஞ்சம் பெயர்க்கும்*
*மந்திரத் தால்இவ்*
*ஐஞ்சி லோதியை*
*அறிகுவன் யானெனக்*

(காடுகாண்: கசூஉ—கசூரு)

கோவலன் ஒரு மந்திரம் உச்சரித்தான். அம்மந்திரம்,

*பாய்கலைப் பாவை*
*மந்திரம் ஆதலின்*

(காடுகாண்: கசூஎ)

வேற்றுருக்கொண்டு மயக்கிய தெய்வம் தன் உண்மைநிலை கூறிச் செல்கின்றது. பாய்கலைப் பாவையாவாள் கொற்றவை. கொற்றவை வழிபாடு சைனர்க்கு உடன்பாடோ? அன்று. எனவே, இந்நிகழ்ச்சி ஆராயத் தக்கது. ஆராயுமிடத்து யாது தோன்றுகின்றது? சமய ஒருமைப்பாட்டினை அன்றைய

---

* *சமண சமயத்தைச் சார்ந்த இல்லறத்தார் சாவக (சிராவக) நோன்பிகள் எனப்படுவர். கொல்லாமை முதலிய பத்துவகை ஒழுக்கங்கள் அவர்கட்கு உரியன. கோவலன் சாவக நோன்பினன் என்பது முன்னர்க் கூறப்பட்டது.*

(பக்கம் 62-ல் காண்க)

தமிழகம் கொண்டிருந்தது என்றே, இளங்கோவடிகள் சமய ஒருமையினை விழைந்தார் என்றே முடிவு செய்தல் வேண்டி யுள்ளது.

பல்வேறு சமயங்களும் தம்முட் பூசலின்றி விளங்கிய பான்மை சற்று வியப்பூட்டுவதே யாகும். ஆயினும், வியப் பூட்டுவன வெல்லாம் நிகழத் தகாதனவோ இயலாதனவோ அல்ல. இன்றும் இலங்கையில் ஒரே குடும்பத்தில் உள்ளார் பல்வேறு சமய வழிபாடுகளைக் கையாள்வதனைக் காணுகின் றோம். இதே நிலைமை சங்க காலத்தை அடுத்துத் தமிழகத் தில் நிலவியிருத்தல் கூடுமன்றோ?

நிறுவன வடிவான சமய நிலையங்கள் சங்க காலத்திய தமிழகத்தில் நிலவிய தில்லை என்று கொள்வதில் பிழை எது வும் இல்லை. அத்தகைய தமிழகத்தில் பல்வேறு சமய அமைப்புகள் புகுந்தன; வேரூன்றி நிலைக்க முயன்றன. ஒவ் வொருவரும் தத்தமக்கு விருப்பமான சமயக் கோட்பாட்டைப் பின்பற்றிய நிலைமை அப்போது ஏற்பட்டிருத்தல் வேண்டும். ஒரே குடும்பத்தில் பல்வேறு அரசியல் கொள்கை யுடையார் ஒருங்கிருந்து வாழும் காட்சியினை நாம் காணுகின்றோம். அரசியல் தெளிவு — முடிவு — ஏற்படாத நாட்டில் இத்தகு காட்சிகள் இயல்பே யாகும். இதுபோன்றே சமய அமைப்புகளைப் பற்றிய தெளிவு ஏற்படாத அப்பழங் காலத் தில் பலவும் கலந்துள்ள ஒருமைக் காட்சி நிலவியிருத்தல் கூடும். திரு. மு. இராகவ ஐயங்கார் இந்நிலையினைத் 'தந்தை மதம் மகனுக்கும் உற்றோர் மதம் சுற்றத்தார்க்கும் என்ற நியதி இல்லை' எனக் குறித்துள்ளார். சமரசம் தொலைந்து, போட் டியும் பூசலும் மிகுந்த பின்னைய காலங்களிலே அக் 'நியதி' ஏற்பட்டது.

## இளங்கோ கண்ட புதிய சமயம்

அன்றைய தமிழகத்தின்கண் நிலவிய சமயங்களின் ஒற்றுமைப் பான்மையில் திளைத்தனர் இளங்கோவடிகள் என்பதோடு, சமயமாகவே அவர் போற்றிய மற்றொரு கோட்பாடும் சிலப்பதிகாரக் கதையினை ஆராய்கின்றபோது புலப்படுகின்றது,

*உரைசால் பத்தினிக்கு*
*உயர்ந்தோர் ஏத்தலும்*

என்ற பதிகப் பகுதியும்

*காதலன் தனக்கு*
*நடுங்குதுயர் எய்தி*
*நாப்புலர வாடித்*
*தன்துயர் காணாத்*
*தகைசால் பூங்கொடி*
*இன்துணை மகளிர்க்கு*
*இன்றி யமையாக்*
*கற்புக் கடம்பூண்ட*
*இத்தெய்வ மல்லது*
*பொற்புடைத் தெய்வம்*
*யாம்கண் டிலமால்*

(அடைக்கலம்: கங-கூ—கசசு)

என்ற கவுந்தியடிகள் கூற்றும் ஒன்று மற்ற வெற்றுரைகள் என்று தள்ளத் தக்கன அல்லன.

'பெண்ணிற் பெருந்தக்கது இல்' எனவும் 'பெண்ணிற் பெருந்தக்க யாவுள' எனவும் இயம்பிய வள்ளுவர் வழி வந்த இளங்கோவடிகள், கண்ணகியின் வாழ்வினை உருவாக்கும்

போது பத்தினி வழிபாடு ஆகிய ஒரு புதுச் சமய நெறியினை யும் வகுக்கின்றார். அப்பத்தினிக்குரிய தோத்திரமும் அவரே பாடினார்.

*கொங்கச் செல்வி*
*குடமலை யாட்டி*
*தென்றமிழ்ப் பாவை*
*செய்தவக் கொழுந்து*
*ஒருமா மணியாய்*
*உலகிற் கோங்கிய*
*திருமா மணி*

(வேட்டுவவரி: சஎ–ருO)

என்பது பத்தினித் தெய்வத்திற்குச் சூட்டிய திருவாசகம்.

அமரிலே வீரத்தை நிலைநாட்டும் ஆடவர்க்குக் கல் லெடுக்கும் வழக்கத்தைப் பண்டைய இலக்கியங்களில் நாம் காண்கின்றோம். தொல்காப்பியம் இந்நடுகல் விழாவின் சிறப் பினைப் பலபட விரித்துரைக்கின்றது. வீரரின் பீடும் பெயரும் எழுதி நாட்டும் நடுகல் தமிழகத்தின் வீரவழிபாட்டுக் குத் தக்க பெருமிதமூட்டும் சான்றாகும். 'வினையே ஆட வர்க்கு உயிரே' என்று பாடிய பழம்புலவன், அவ்வாடவரே மனையுறை மகளிர்க்கு உயிர் என்றும் பாடினான். ஆயின், ஆடவர்க்குக் கல்நாட்டிப் போற்றிய நாம், பெண்டிர்க்குச் சிறப்புத் தராதுபோதல் இழுக்கன்றோ? இவ்வாறு கருதியே இளங்கோவடிகள் கண்கண்ட தெய்வமாகிய பத்தினிக்குக் கோயிலெடுக்கின்றார். பத்தினிக் கல் இளங்கோவடிகளின் புதுப்படைப்பு; தாம் போற்றிய ஒரு புதிய சமய நெறிக்கு அவர் தந்த காணிக்கை. தொல்காப்பியத்துள் நடுகல் விழா வில் காணப்படும் துறைப் பெயர்களைக் காட்சிக் காதை

முதலாகக் காதைகளின் பெயர்களாகவே அமைத்துச் சிறப் பிக்கின்றூர். சிலம்பு காட்டும் புதிய சமயம் இது.

தொல்காப்பியத்தில் நடுகல் விழாப் பற்றிக் கூறும் சூத்திரப் பகுதி வருமாறு;

*காட்சி கால்கோள்*
*நீர்ப்படை நடுதல்*
*சீர்த்தகு சிறப்பின்*
*பெரும்படை வாழ்த்தல்என்று*
*இருமூன்று வகையிற்*
*கல்லொடு புணர.........*

(தொல். புறத்திணை: ரு)

இதனுட் கூறப்பட்ட துறைப் பெயர்கள்: காட்சி, கால்கோள், நீர்ப்படை, நடுதல், பெரும்படை, வாழ்த்தல் என ஆருகும். கண்ணகிக்குக் கோயிலெடுத்துச் சிறப்பிக்கும் வஞ்சிக் காண்டம் ஏழு பகுதிகளா லாயது. குன்றக் குரவை முதலா வது. வஞ்சிக் காண்டத்தின் முகப்பாக உள்ள இப்பகுதி மதுரைக் காண்டத்தோடு தொடர்புபடுத்திக் கதையோடு இணைக்கும் முன்னுரைப் பகுதியாய் அமைகின்றது. இறுதிக் காதை வரந்தரு காதை என்பதாகும். வீரர்க்கு நடுகல் எழுப்பிப் போற்றிய அளவோடு நிறுத்துவதுபோல் கண்ணகி கோயிலையும் நிறுத்த இளங்கோவடிகள் விரும்பவில்லை. கண்ணகியார்'கடவுள் நல்லணி காட்டிய' பான்மை தோற்றி, அம்மங்கை நல்லாளின் தெய்வப் பெற்றி நிறுவ நினைக்கின் ரூர். அத்தெய்வம் வரம் நல்கும் சிறப்போடு முடிப்பதே தம் பத்தினிச் சமய நெறிக்கு ஆக்கம் தருவதென அவர் எண்ணி யிருப்பது இயற்கையே யன்ருே? எனவே, வரந்தரு காதை இறுதியில் நிற்கின்றது. குன்றக் குரவையாகிய முன்னுரைக் கும் வரந்தரு காதையாகிய முடிவுரைக்கும் இடையே யுள்ள

பகுதிகள்: காட்சிக் காதை, கால்கோட் காதை, நீர்ப்படைக் காதை, நடுகற் காதை, வாழ்த்துக் காதை என ஐந்தாம். தொல்காப்பிய இலக்கணத்தோடு பொருந்தி நிற்கும் இயல்பு காண்க. *

இதுகாறும் கண்டவற்றால் இளங்கோவடிகளின் காப்பியத்தில் சமயத் தத்துவங்கள் எவ்வாறு இடம்பெறுகின்றன என்று தெளிந்தோம். சமய ஒற்றுமையில் திளைக்க விரும்பும் இளங்கோவடிகள் சைன மேன்மையைக் குறிப்பிக்கிறார் என்பதும், பத்தினி வழிபாடு என்ற புதிய சமயத்தை நிறுவுகின்றார் என்பதும் மனங்கொள்ளத் தக்கன.

---

* பெரும்படை என்ற துறையினை ஒரு காதையாக இளங்கோவடிகள் அமைக்கவில்லை. தொல்காப்பியத் துறையமைதிக்கும் சிலப்பதிகாரத் துறையமைதிக்கும் ஓரளவு வேற்றுமை இங்கே காணப்படுகின்றது. திணைகள் பற்றியும் துறைகள் பற்றியும் பண்டைப் புலவரிடையே பலவகைக் கருத்துக்கள் நிலவியிருத்தல் வேண்டும். எடுத்துக் காட்டாகச் சிலப்பதிகாரத்தின் காட்சிக் காதையுள் வரும் சிலவற்றை இங்கே சுட்டிக் காட்டலாம். வழிநின்று பயவா மாண்பில் வாழ்க்கை, கழிந்தோர் ஒழிந்தோர்க்குக் காட்டிய காஞ்சி என்பது சிலப்பதிகாரம். 'நிலைநின்று பயன்படாத வாழ்க்கையை மரித்தோர் இருந்தோர்க்குக் காட்டிய நிலையாமை' என்பது அதன் அரும்பதவுரைக் குறிப்பாகும். இதனைப் பெரும்பாலும் ஒத்தது எனக் 'கழிந்தோர் ஒழிந்தோர்க்குக் காட்டிய முதுமையும்' என்ற தொல்காப்பியப் பகுதியைச் சுட்டலாம். நிலையாமையையே இரண்டும் சுட்டுதலால் ஒருவாறு ஒருமைப்பாடு உளது எனக் கொள்ளலாம். மகட்பாற் காஞ்சி என்பதற்குரிய விளக்கத்தில் வேற்றுமை காணப்படுகின்றது. முதுகுடிப் பிறந்த முதிராச் செல்வியை, மதிமுடிக்கு அளித்த மகட்பாற் காஞ்சி என்று விதிக்கின்றது சிலப்பதிகாரம். 'நிகர்த்துமேல் வந்த வேந்தனொடு முதுகுடி, மகட்பாடு அஞ்சிய மகட்பால்' எனத் தொல்காப்பியத்தும் 'ஏந்திழையாள் தருகஎனும், வேந்தனொடு வேறுநின்றன்று' எனப் புறப்பொருள் வெண்பா மாலையினும் இதே துறை விளக்கப்பட்டுள்ளது. இவ்வாறு திணை, துறைகள்பற்றி தொல்காப்பியம், பன்னிருபடலம், புறப்பொருள் வெண்பாமாலை முதலான நூல்களில் வேறுபாடுகள் காணப்படுகின்றன. இவைபற்றிய விரிவான ஆராய்ச்சிக்கு இங்கு இடமில்லை.

எ

# ஒற்றுமைக் காப்பியம்

## முன்னோர் நல்கிய செல்வம்

சொற்பொழிவுப் போட்டி ஒன்று நிகழ்ந்தது. இளம் மாணக்கர்கள் போட்டியிற் பங்கு கொண்டனர். நன்கு உரையாற்றிய தோழர் ஒருவர்க்குப் பரிசு கிட்டவில்லை. ஏமாற்றம் உற்றனர் பலர்; அவருட் சிலர் துணிவு பெற்று நடுவர்களைக் காரணம் வினவினர். 'தோழர் மிக நன்றாகப் பேசினார். ஆயின், அவர் அந்த இரண்டு பேர்களுடைய பெயர்களைக் குறிப்பிட்டிருக்கக் கூடாது' என்று 'விளக்கம்' கூறினர் நடுவராக இருந்த பெரியார்கள். பேசிய நண்பரின் சொற்பெருக்கிலே சாக்ரடீஸ் வந்தார்; அரிஸ்டாடில் ஊடாடினார்; பிளாடோவும், ரூஸ்ஸோவும் இடம் பெற்றனர்; மார்க்ஸும் லெனினும் புகழப் பெற்றனர். இந்தப் பெயர்களிலெல்லாம் தடை ஒன்றும் அவர்கள் காணவில்லை. ஆயின் தகாதன

என்று அப் பெருமக்களால் குறிக்கப் பெற்றவர்கள் தமிழினத்தார்; அதிலும் இன்று வாழும் தமிழறிஞர்கள். தமிழறிஞர் பெயரைத் தமிழகத்தில் எடுத்துப் போற்றிய குறைக்காக ஒரு தோழர் பரிசை இழக்க நேர்ந்தது. இது வெறும் புனைந்துரை யன்று; நிகழ்ந்த நிகழ்ச்சி. 'தமிழ்நாட்டில் தமிழரைப் போற்ருதே; அது தவறு' என்ற மனப்பான்மை இன்னும் இந்த மண்ணை விடுத்து நீங்கவில்லை.

'தமிழர்க்கு அறிவுண்டு; இமயத்தின் மீதேறிச் சென்று கொடிநாட்டும் ஆற்றலுண்டு; நாவாயால் நானிலத்தின் எப்பாலும் செல்லும் துணிச்சல் உண்டு; பண்பும் பண்பாடும் கொள்ளை கொள்ளையாய் உண்டு; கலை ஆர்ந்த நிலை உண்டு...' என்று புகழுமாறு சீரும் சிறப்பும் எய்தியிருந்தது நம் தமிழ் நாடு. சங்க இலக்கியங்களில் இக் கருத்துக்களை வலியுறுத்தும் காட்சிகளை இன்னும் காண்கின்ருேம். அவற்றைக் காண்டொறும் காண்டொறும் உள்ளம் உவகையில் திளைக்கின்றது. எனினும், அந்தப் பீடுற்ற தமிழினம் நசித்துப் போயினதே, ஏன்? சங்க நூல்களிலே இவ்வினவிற்கு விடை உண்டோ? உண்டு. எல்லாம் குறைவறப் பெற்ற தமிழினத்தார் ஒரு பண்பைச் சிறிதும் பெற்றிலர். ஒற்றுமை—ஒற்றுமை—ஒற்றுமை என்ற அப்பண்பின் சாயல்தானும் அவர்பால் காண இயலவில்லை. இன்றுமட்டு மன்று; அன்றும் இங் நோதகு காட்சியே மலிந்து கிடந்தது.

மக்களின் ஆற்றல் உலகை ஆளும் காலம் இது; அத் தொன்மைக் காலமோ, குடிதழீஇக் கோலோச்சும் மன்னனின் காலம். பண்டைத் தமிழக மன்னர்கள், முடையுடை மூவேந்தர்களாக மட்டுமன்றி, முடி உடைக்கும் வேந்தராயுமிருந்தனர். போர், போர்.........என்று தம்முட் பொருது பொருது அழிந்தனர்; அழித்தனர். வீரத்தின் விளை நிலமான இத் தமிழகம் வெறுப்புக்கு வித்திடுகின்ற உள்ளங்களையும்

வளர்த்துவிட்டது. கோவூர்கிழார் போன்ற தண்டமிழ்ச் சான்ரேர் அவ்வப்போது இத்தீய பண்பினுல் வருதலாம் கேடுகளை எடுத்துக் கூறித் திருத்தினர். எனினும், இந் நாட்டின் சிறப்புக்களுக்கு அருமையும் பெருமையும் ஊட்டுதல் போல, ஒருமை இன்மை நிலைத்துவிட்டது. அன்று தொட்டு இன்றளவும் அஃது அழிந்தபா டில்லை. 'நம்முள் ஒருவன் நாம் காண உயர்வதா' என்ற மனப்பான்மை பெரும்பாலும் தமிழர் அனைவர் உள்ளத்திலும் ஊறிக் கிடக்கின்றது. இப்பண்பு இன்றேல், எவ் வினத்திற்கும் சளைக்காத இவ்வினம் ஏற்றத்தின் எல்லைக் கோட்டைத் தன்வயப்படுத்தியிருக்க வேண்டும். அறிவாற்றல்கள் அற்ருரும் இன்றைய சமுதாயத்தில் ஒற்றுமையாகிய ஒரே பண்பால் உயர்ந்திருப்பதை நம் கண்ணுரக் காண்கின்ருேம். ஆயின் ஒற்றுமை ஒன்றுமட்டுமின்றி, ஏனைச் சிறப்புக்கள் யாவும் பெற்ற நாம் உலக அரங்கிலே பெற்றுள்ள இடம் யாது? பிறர்க்குப் பணிந்து, பிறர் வழி நடந்து, பிறபட்டே கிடக்கும் நிலையொன்றே நாம் அறிந்தது.

இச் 'செல்வம்' நம் மூதாதையர் நமக்கு விடுத்துச் சென்ற தாகும். பல நூருயிரம் மதிப்புள்ள நிலபுலன்களை விட்டுச் சென்ற தந்தை, ஒரு பாழ்ங் கிணற்றையும் விட்டுப் போயினுன். அப் பாழ்ங் கிணற்றில் உறவினர் பலர் வீழ்ந்து மாய்கின்றனர். அறிவுடைய மகன் யாது செய்வான்? பாழ்ங்கிணற்றைத் தூர்த்துவிடுவான். அதுவே நாம் செய்யத் தக்க பணியாகும்.

## ஔவையார் உவகை

புறநானூற்றிலே ஒரு செய்யுள்; ஔவையார் அருளியது. அப்பெருமாட்டியார் காணுத—காண இயலாத—ஒரு காட்சியினைக் காணும் பேறு பெற்ருர். அவருடைய தமிழ்

உள்ளம் களிகொண்டு கூத்தாடிற்று; களிப்பிலே பிறந்தது அந்தக் கவிதை. சேரமான் மாரிவெண்கோவும், பாண்டியன் கானப்பேர்தந்த உக்கிரப் பெருவழுதியும், சோழன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளியும் யாது காரணம் பற்றியோ ஒருங்கே இருந்தனர். தமிழக வேந்தர் மூவரும் ஒற்றுமை உணர்வுடன் ஓரிடத்தமைந்த காண்டற்கரிய காட்சி! போர் செய்து செய்து பொட்டலாக்கும் புரவலர்கள் பூசலற்றுப் பொலிகின்ற காட்சி! ஆகா! எண்ண எண்ணவே இறும்பூது எய்துகின்றோம் நாம். ஔவைப் பிராட்டியார் என்ன எண்ணியிருப்பார்?

'வாள், வேல், வில், களம், அடுதல், தொலைதல்...... என்றே வாழ்நா ளெல்லாம் கழிக்கின்ற இந்தப் பெருமன்னர்களுக் குரியதும் முப்பாற்பட்டது மாகிய தமிழகத்தில் வளம் இல்லையா? வாழ வழி இல்லையா? போர் போர் என்று பூசலிட்டு என்ன பயனை அடையப்போகின்றார்கள்? நல்வினைப் பயனன்றி வேறு யாது இவர்களுடைய மறுமைக்கு உதவ வல்லது? வாழும் காலத்துச் செய்த நல்வினை யன்றி, ஆழும் காலத்தின்கண் இவர்க்குப் பிறிது எதுதான் புணையாக உதவ வல்லது? வெற்றிச் சிறப்பும் வளமான வாழ்வும் பெற்ற இப் பெருந்தகையாளர்கள் இப்படியே ஒற்றுமையோடு நீடுழி வாழ்தல் வேண்டும்.........' இவ்வாறு அந்தப் பெருமாட்டியின் உள்ளம் எண்ணிற்று. பாடலைப் பாடினார்:

*நாகத் தன்ன*
*பாகார் மண்டிலம்*
*தமவே ஆயினும்*
*தம்மொடு செல்லா*
*வேற்றோ ராயினும்*
*நோற்றோர்க் கொழியும்*
*ஏற்ற பார்ப்பார்க்கு*

ஈர்ங்கை நிறையப்
பூவும் பொன்னும்
புனல்படச் சொரிந்து
பாசிழை மகளிர்
பொலங்கலத் தேந்திய
நாரரி தேறல்
மாந்தி மகிழ்சிறந்து
இரவலர்க்கு அருங்கலம்
மருகாது வீசி
வாழ்தல் வேண்டும்இவண்
வரைந்த வைகல்
வாழச் செய்த
நல்வினை யல்லது
ஆழுங் காலைப்
புணைபிறிது இல்லை
ஒன்றுபுரிந் தடங்கிய
இருபிறப் பாளர்
முத்தீப் புரையக்
காண்தக இருந்த
கொற்ற வெண்குடைக்
கொடித்தேர் வேந்திர் !
யான்அறி அளவையோ
இதுவே வானத்து
வயங்கித் தோன்றும்
மீனினும் இம்மென
இயங்கு மாமழை
உறையினும்
உயர்ந்துமேந் தோன்றிப்
பொலிகநும் நாளே

(புறம்: ௩௬௭)

நிலைபேறற்ற நிலவுலக வாழ்விலே நிரம்பிய இன்பம் பெற்று வாழ்தல் வேண்டும். இம்மை வாழ்வியலே மறுமை வாழ்வுக்கும் ஆம். எனவே ஈண்டு நமக்கு வரையறுத்த வாழ்நாளில் நல்லன செய்து களித்துக் கழித்தல் வேண்டும். பூசலின்றி ஒன்றுபட்டால் நல்வாழ்வு உறுதியாக உண்டு. அது நிலவுதல் தமிழகத்துக்கு இன்றியமையாதது. இதனை ஔவைப்பிராட்டி உணர்ந்தார். ஒருங்கிருந்த மூவேந்தரைப் பாராட்டி வாழ்த்தினர்.

## இளங்கோவடிகளின் எண்ணம்

பிராட்டியாரின் பண்புள்ளம் அறிந்த உண்மையினை இளங்கோவடிகளும் உணர்ந்தார். தமிழரிடையே ஒற்றுமை நிலவுதலின் இன்றியமையாமையினை அவரும் உணர்ந்தார். பல்வேறு பண்புகளும் பண்பாடுகளும் சமயங்களின் வாயிலாகத் தமிழகத்திலே படையெடுத்த காலத்திடையே வாழ்ந்தவர் அடிகள். இயற்கையாகவே ஒற்றுமையற்ற மக்களிடையே இந்தப் பிரிவுகளும் இடம்பெறுமாயின் இனம் உருக்குலையும் என்பதை அறிந்தார். ஆகவே............,

### *1. சமய ஒற்றுமை :*

மொழியால் ஒன்றுபட்ட மூவேந்தரையும் ஒப்பப் போற்றினர்; தமிழினத்தார் போற்றிய எல்லாச் சமயங்களையும் காழ்ப்பின்றி ஒப்பப் புகழ்ந்தார். தாம் போற்றிய சமயம் சைனம்; தம் கதையிலே வருவோர் துறவு பூண நேர்ந்த காலத்து எல்லோரையும் சைன சமயத் துறவிய ராக்கவில்லை. மாதவி பௌத்தத் துறவி யாகிருள். ஏன்? சமயம் தனி வாழ்க்கைக்கு உரியது; தொகுப்பான இன வாழ்க்கையிலே அதனை நுழைப்பதால் காழ்ப்பு ஏற்படும். சமயத் துறைப் பற்றுள்ள ஒருவரின் கடும் பற்றுள்ளம் இனத்தைச் சீர் குலைத்த லாகாது. நடுவுநிலை நிலை சிறிதும் பிறழாத நெறி

யுணர்ந்த கலைஞர் இளங்கோவடிகள். ஆதலின், தமிழகத்துக்குத் தாம் உருவாக்கிய காப்பிய வாயிலாக மறைமுகமாக எச்சரிக்கை விடுத்தார். அது பயன்பட்டதா? இல்லையே!

தமிழகத்தில் தமிழினத்தாரிடையே தமிழறிஞரைப் போற்றினால், இளைஞர் பரிசு இழக்கிறார். அரசியல் மேடையிலே 'தமிழ்' என்றால் நாமே 'குறுகிய நோக்கம்' என்கின்றோம். 'தமிழ்' என்று சொல்லிப் போற்றுவோ ரிடையேயும் எண்ணத் தொலையாத பிரிவினைகள் நிலவுகின்றன.

*2. மும்மைத் தமிழகம்:*

சோழ நாட்டையும் அதன் தலைநகராகிய புகாரையும் முறையே நாடுகாண் காதையிலும், இந்திர விழா ஊரெடுத்த காதையிலும் மிக விரிவாக ஆசிரியர் எடுத்துரைக்கின்றார். விரிவஞ்சி அவற்றை ஈண்டுத் தர இயலவில்லை. நாடுகாண் காதையின் ஈற்றிலுள்ள கட்டுரையினைமட்டும் இவண் காணலாம். அதன்கண் சோழ நாட்டின் சிறப்புக்கள் பலபட எடுத்துரைக்கப் படுகின்றன.

*முடியுடை வேந்தர்*
*மூவ ருள்ளும்*
*அறனும் மறனும்*
*ஆற்ற லும், அவர்தம்*
*பழவிறல் மூதூர்ப்*
*பண்புமேம் படுதலும்,*
*விழவுமலி சிறப்பும்,*
*விண்ணவர் வரவும்,*
*ஒடியா இன்பத்து*
*அவர்உறை நாட்டுக்*
*குடியும், கூழின்*
*பெருக்கமும், அவர்தம்*

*தெய்வக் காவிரித்*
*தீதுதீர் சிறப்பும்,*
*பொய்யா வானம்*
*புதுப்புனல் பொழிதலும்,*
*அரங்கும், ஆடலும்,*
*தூக்கும், வரியும்*
..................................
*என்றிவை யனைத்தும்*
*பிறபொருள் வைப்போடு*
*ஒன்றித் தோன்றும்*
*தனிக்கோள் நிலைமையும்*

ஒருபடித்தாகக் கூறுகின்ற புகார்க் காண்டம் முற்றியதாக அக் கட்டுரை கூறுகின்றது. அக்கூற்றின் திரண்ட பொருள்:

> சோழ மன்னர் அறம் மறம் இருதுறைக் கண்ணும் சிறந்தவர்; புகார், வெற்றிச் சிறப்பமைந்த தொன்மையான வளம்பதி; விழா மலிந்தது சோணாடு; அங்கே தேவரும் வருவர்; குறையாத இன்பத்தோடு அந்நாட்டவர் வாழ்கின்றனர்; பொருள் வளம் கொழிப்பது சோணாடு; காவிரி, பொய்யா நல்லாறு; வானம் பொய்ப்பதில்லை; அரங்கு முதலான நுண் கலைச் சிறப்புடையது சோழனுடைய நன்னாடு; இன்னும் பல சிறப்புக்களும் உடையதாகிய ஒப்பற்ற நிலைமை படைத்த சோழ நாட்டைச் சிறப்பிக்கும் புகார்க் காண்டம் முடிவுற்றது.

பகையரசர் என்றே மற்றவரைக் கருதுகின்ற அரசர் குடியில் தோன்றிய இளங்கோவடிகள் இதனைக் கூறுகின்றார். இங்ஙனமே பாண்டி நாட்டினையும், கூடலம்பதியினையும் அழகுபட முறையே காடுகாண் காதையிலும் ஊர்காண் காதையிலும் மிக விரிவாக எடுத்துரைக்கின்றார். ஆயின்,

தம் நாடாகிய சேர நாட்டினையும் அந்நாட்டுத் தலைநகராகிய வஞ்சியினையும் இத்துணை விரிவாக எடுத்துக்கூறினா ரில்லை. காட்சிக் காதையால் மலைவளம் கூறப்பெறுதல் உண்மையே. ஆயினும் பாண்டிய நாடு, சோழ நாடு என்ற முறையில் தனிப்படச் சிறப்பித்ததுபோல அடிகள் தமிழகத்தின் தம் பகுதியாகிய சேர நாட்டினை விரித்துச் சித்தரிக்கவில்லை.

ஈண்டுக் காட்டிய கட்டுரையின் கருத்துக்களும், தொடர்களும் பின்வரும் மதுரைக் காண்டம், வஞ்சிக் காண்டம் ஆகிய பகுதிகளின் இறுதிக்கண்ணும் அமைந்துள்ளன. மூவேந்தர் ஒப்பப் புகழப்படுதலே ஆசிரியர் நோக்கம் என்பது இதனால் போதருமன்றோ?

நம்மனையோர் சிலம்பைப் பாடத் தொடங்கி யிருப்பின் எங்ஙனம் நூல் அமையும் என்பதனை ஈண்டு எண்ணிப் பார்த்தல் வேண்டும். அப்போதுதான் இளங்கோவடிகளின் சீரிய மனம் நம்மனோர்க்கு விளங்கும்.

### 3. *சேரநாட்டில் சோழனும் பாண்டியனும் :*

வஞ்சிக் காண்டத்துள்ளும் சேரனுக்குமட்டுமோ இடம் கொடுத்துள்ளார்? இதுவும் சிந்திக்கவேண்டிய ஒன்று.

வாழ்த்துக் காதையுள் 'வஞ்சி மகளிர் சொல்' என்ற தலைப்பின்கீழ் அமைந்த வரிகளை நோக்குமின் :

*வஞ்சியீர்! வஞ்சி*
*இடையீர்! மறவேலான்*
*பஞ்சடி ஆயத்தீர்*
*எல்லீரும் வம்எல்லாம்!*

(வாழ்த்து: கக)

எல்லாரையும் எதற்கு அழைக்கின்றார்கள்? கண்ணகியைப்

பாடுதற்காக. எத்தகையாள் அவள்?

*கொங்கையாற் கூடற்*
*பதிசிதைத்துக் கோவேந்தைச்*
*செஞ்சிலம்பால் வென்றாளைப்*
*பாடுதும் வம்எல்லாம்*

(வாழ்த்து: கக)

சிலம்பின் வென்ற சேயிழை இப்போது யார் தெரியுமா?

*தென்னவன் தன்மகளைப்*
*பாடுதும் வம்எல்லாம்*

(வாழ்த்து: கக)

கண்ணகி பாண்டியன்றன் மகளாயினள். இனி வருகின்ற அடியினைச் சற்று உன்னித்து நோக்குங்கள்:

*செங்கோல் வளைய*
*உயிர்வாழார் பாண்டியர்.........*

(வாழ்த்து: கக)

யார் சொன்னது இக்கூற்றினை? 'செங்கோல் வளைய நேர்ந்தால் பாண்டியர் உயிரைவிடுத்து வளைந்த கோலை நிமித்துவர்' என்று சேரன் சொன்னான். அப்படி அவன் சொல்லுமாறு—தமிழ் மன்னன் ஒருவன் மற்றொரு தமிழ் மன்னனைப் புகழுமாறு—செய்தாளே, கண்ணகி, அவளைப் போற்றுவோம் வம்மின்:

*செங்கோல் வளைய*
*உயிர்வாழார் பாண்டியரென்று*
*எங்கோ முறைநா*
*இயம்பஇந் நாடடைந்த*

*பைந்தொடிப் பாவையைப்*
*பாடுதும் வம்எல்லாம்*
*பாண்டியன் தன்மகளைப்*
*பாடுதும் வம்எல்லாம்*

(வாழ்த்து: கக)

சேரன் செங்குட்டுவன் பாண்டியன் செங்கோல் நெறியை எப்போது புகழ்ந்தான்? அதனை இளங்கோவடிகள் எங்ஙனம் எடுத்துரைக்கின்றார்? இவ்விவரங்களை விரிவாக அறிய விரும்புவோர் வஞ்சிக் காண்டத்துக் கடைசிக் காதையினைப் பயில்க. ஈண்டுச் செங்குட்டுவன் கூற்றினைமட்டும் குறிப்பிடுவோம்:

*எம்மோ ரன்ன*
*வேந்தர்க்கு உற்ற*
*செம்மையின் இகந்தசொல்*
*செவிப்புலம் படாமுன்*
*உயிர்பதிப் பெயர்த்தமை*
*உறுக ஈங்கென*
*வல்வினை வளைத்த*
*கோலை மன்னவன்*
*செல்லுயிர் நிமிர்த்துச்*
*செங்கோ லாக்கியது*

(காட்சி: கூ௫—கூகூ)

பாண்டியற் குற்ற, துன்பத்துக்கு இரங்கும் செங்குட்டுவன் கூற்று நுணுகி ஆராய்தற்பாலது. கோல் வளைந்தது; எங்ஙனம் வளைந்தது? செழியன் செயலால் வளைந்ததோ? அன்று. வல்வினை வளைத்தது. செழியன் செயல் வாயிலாக வினையே வளைத்தது. ஊழ் செய்த தீவினைக்கும் உயிர் கொடுத்தான்

பாண்டியன். அவன் விடுத்த உயிர், கோலினை நிமிரச் செய்தது.................

இதுபோல் தமிழரிடையே செங்குட்டுவர்கள் பெருகினால், தலைவர்களிடையே தூற்றுதல் தொலைந்து போற்றுதல் பெருகினால்.........இந்தத் தமிழ்நாடு உய்தியடைவதில் ஒரு கண நேரத் தாமதமும் ஆகாதே! தமிழ்நாட்டுக்கு இளங்கோ விடுத்த எச்சரிக்கை பயன்படும் காலம் இனியேனும் வல் விரைந்து வருவதற்கு இளைஞர்கள் எழுவார்களாக.

இனி, வாழ்த்துக் காதையிலேயே அம்மானை வரியால் சோழனின் புகாரையும், கந்துக வரியால் பாண்டியனையும், ஊசல் வரியால் சேரன் செயலையும் புகழ்கிறார் இளங்கோ வடிகள். அடுத்துள்ள வள்ளைப்பாட்டிலோ மூவர் திறமும் ஒருங்கே காட்சி நல்குவதைக் காணுகின்றோம். தனித் தனி யாக இயங்கும் மூவேந்தரையும் ஒருங்கு இயைய வைத்து— கண்ணகி கதையால் பிணைத்துவிட்டு — பெறற்கரிய ஒற்றுமைக் காட்சியினை நல்கிய சிலப்பதிகாரம், உண்மையில் ஓர் ஒற்றுமைக் காப்பியமே யாகும்.

இளங்கோவடிகளின் தந்தை நெடுஞ்சேரலாதன் 'குமரியொடு வட இமயத்து ஒரு மொழிவைத்து உலகாண்ட' தாகக் குறிப்பிக்கப்பெறுகிறான். இமயந் தொட்டுக் குமரி ஈறான நிலப்பரப்பிலே தமிழ் மொழியே ஆட்சி செலுத்திய தாம். அது இமய வரம்பன் சிறப்பு. ஆனால், நம் நிலை யாது? ஒற்றுமையற்ற வாழ்வால் மலைநாட்டை மலையாள மாக்கி விட்டோம். சிலப்பதிகாரத்தை நமக்கு நல்கிய சேரநாடு இன்று நம்முடைய தில்லை. மூவேந்தர் ஒற்றுமையைக் கனவு கண்ட இளங்கோவடிகள் இன்றைய தமிழகத்தைக் கண்டால், என்ன எண்ணிப் புலம்புவாரோ? வடவேங்கடம் தென்குமரி என்றும்,குண குட கடல் என்றும் தமிழகத்துக்கு

எல்லை கூறும் துணிவுகூட நமக்கு இருக்கின்றதா?இதுதானும் இல்லாத நிலையிலுள்ள நாம் இளங்கோவடிகளின் புலம்பலைப் பற்றி எண்ணவா?

## பிறர்முன் நாம்

நமக்குள்ளேயே பூசலிடுகின்ற நாம், அயலவனைப் பற்றி என்ன கருதப் போகின்றோம்? இத்துறையிலும் இளங்கோ வடிகள் எச்சரிக்கை விடுத்திருக்கின்றார்.

சேரன் செங்குட்டுவன் வட இமயத்தில் பத்தினிக் கல் எடுக்கப் புறப்படுகின்றான். அதனோடு வடநாட்டுப் படையெடுப்பும் ஒன்றுகின்றது. இப் படையெடுப்பு எற்றுக்கு? வடவாரிய மன்னர் ஆங்கோர் மடவரலை மாலைசூட்டி உடனுறைந்த இருக்கைதன்னில் ஒன்றுமொழி நகையினராய்த் 'தென்றமிழ் நாடாளும் வேந்தர் செருவேட்டுப் புகன்றெழுந்து மின்தவழும் இமய நெற்றியில் விளங்கு விற்புலி கயல் பொறித்த நாள் எம்போலும் மன்னர் ஈங்கு இல்லை போலும்'—என்று தமிழர் வீரம் பழிக்கப்பட்டது. இதனை அறிந்தனன் செங்குட்டுவன். அப்பழிச் சொல் சேரனைச் சுட்டியதன்று; சோழனைச் சுட்டியதன்று; பாண்டியனைச் சுட்டியதன்று. ஆயின், தமிழரசர் மூவரையும்—தமிழர் யாவரையும் சுட்டி நிலைப்பதாகும். அதனை அழிப்பது தமிழர் கடன். இதனை உணர்ந்தான் செங்குட்டுவன்.

*அமையா வாழ்க்கை*
*அரைசர் வாய்மொழி*
*நம்பால் ஒழிகுவ*
*தாயின் ஆங்கஃது*

*எம்போல் வேந்தர்க்கு*
*இகழ்ச்சியும் தரூஉம்*

(கால்கோள்: க0—கஉ)

என்று கொதித்துச் சூளுரைக்கின்றான்.

அப்போது அரசன் அருகில் இருந்தவர், ''அரசே! நின்னைப் பழித்துக் கூறல் இயலுமோ?பாண்டியரையும் சோழரையும் பழித்தனரே யன்றி, இமயம்வரை வெற்றிகொண்ட நின்னை இகழ்ந்தா ரல்லர்'' என எடுத்துக் கூறினர்.

*ஆர்புனை தெரியலும்*
*அலர்தார் வேம்பும்*
*சீர்கெழு மணிமுடிக்கு*
*அணிந்தோர் அல்லால்*
*அஞ்சினர்க்கு அளிக்கும்*
*அடுபோர் அண்ணல்! நின்*
*வஞ்சினத்து எதிரும்*
*மன்னரும் உளரோ*
*இமய வரம்ப! நின்*
*இகழ்ந்தோ ரல்லர்*

(கால்கோள்: கக—உங)

என்ற அவர்தம் கூற்றைப் பொருட்படுத்தினனா? 'என்னைப் புகழ்ந்தால் போதும்; என் இனம்பற்றி எனக்குத் தெரியாது' என்று வாழும் நம்மனோர், ஈண்டு இளங்கோவடிகளின் இதயச் செய்தியை எண்ணிப் பார்த்தல் வேண்டும்.

தமிழர்க்கு ஒரு பழி வரின் — அதனைத் துடைப்பது தமிழர் ஒவ்வொருவர் கடனுமாகும். 'என்னையா இகழ்ந்தனர்; அவனைத்தான் பழித்தனர்' என்ற மனப்பான்மை ஒற்றுமை

யின்மையின் பிறிதொரு சார்பாகும். பகைவர் கண்முன்னர்த் தமிழர் ஒன்றுபட்டுத் தோன்றுதல் வேண்டும். தமிழ் இனத்துக்கு வந்த பழி ஒவ்வொரு தமிழனுக்கும் வந்த பழி. இங்ஙனம் எண்ணியவன் செங்குட்டுவன்.

*காவா நரவிற்*
*கனகனும் விசயனும்*
*விருந்தின் மன்னர்*
*தம்மொடுங் கூடி*
*அருந்தமி ழாற்றல்*
*அறிந்திலர் ஆங்கெனக்*
*கூற்றங் கொண்டுஇச்*
*சேனை செல்வது*

(கால்கோள்: கருகூ—கசூஉ)

என்று படையெடுப்புக் குரிய காரணத்தைக் குட்டுவன் குறித்ததை ஆராய்ந்தால் மேற்சொல்லிய கருத்துக்கள் புலப்படும்.

## தமிழனும் தமிழரும்

இன்றைய தமிழர் நிலை யாது? வேலனைப் பழித்தால் வேலன் சீறுவான். முருகனைப் பழித்தால் வேலன் வாளா கிடப்பான். தமிழ் மொழியைப் பழித்தால் தமிழன் பல்லை இளிப்பான். தமிழ் நாட்டையும் இனத்தையும் தூற்றினால் 'யார்க்கு என்ன வந்தது' என்று கட்டைபோல் கிடப்போம். தனிப்பட்ட தமிழன் தன்னைப் பிறன் பழிக்க விடுவதில்லை; ஆனால் தன் இனத்தைப் பிறன் பழிப்பதைத் தடுப்பதில்லை. 'நான்' என்ற உணர்ச்சித் தடிப்பைத் தவிரத் 'தமிழன்' என்ற இனத் தொகுப்புணர்ச்சி காண்பது அருமையாக இருக்கின்றது. சிலப்பதிகாரச் செங்குட்டுவன் நமக்கு வழி காட்டுகின்றான். 'தமிழாற்றல்' பழிக்கப்படக் கூடாது.

ஒற்றுமை உள்ளும் புறமும் நிலவினு லன்றித் தமிழினம் உய்ய முடியாது.

ஒரு மொழி வைத்து உலகு ஆண்ட காலம் போயிற்று: அது இனி நமக்கு வேண்டா,

*குமரி வேங்கடம்*
*குணகுட கடலா*
*மண்திணி மருங்கின்*
*தண்டமிழ் வரைப்பு*

(நூற்கட்டுரை: க–உ)

என்று தமிழ் மொழிக்கு எல்லை வகுத்தார் இளங்கோவடிகள். குட (மேற்குக்) கடல் என்று சொல்ல இனி வழி இல்லை. வேங்கடத்துக்கு ஏங்குகின்ருேம். குமரிமுனை 'கொடுமலை யாளக் குடியிருப்பினுள்' சிக்கியிருக்கிறது. மூவர் இருவ ராயினர். இருவரும் இலராயினுர். தமிழகம் தேய்ந்து சுருங்குகின்றது. ஏன்? ஏன்? ஒற்றுமை இல்லை. 'முடி உடை(த்த)வேந்தரின் பரம்பரையே! எண்ணிப் பார்' என்கின் றது சிலப்பதிகாரம்.

தமிழ் மகனுக்குக் கோடி கோடியாய்ப் பொன் கொழிக் கும் நிலம் உண்டு; நடுவே ஒரு பாழ்ங் கிணறும் இருக் கின்றது. அது தூர்க்கப்பட வேண்டும். 'நம் முன்னேர் செல் வம்' என்று இன்னமும் அதைப் போற்றினுல், சுற்றியுள்ள நிலபுலன்களைக் கட்டிக் காக்க ஆளில்லாமல், வாரிசாக வுள்ள இன்றைய தமிழனும் அந்தப் பாழுங்கிணற்றில் விழவேண்டியதே.

சூ

# உரிமையும் உறவும்

முன் கட்டுரையில், சிலப்பதிகாரம் எங்ஙனம் ஒற்றுமைக் காப்பியமாக ஒளிர்கின்றது என்பதைக் கண்டோம். ஓர் இனத்தாரிடையே ஒற்றுமை நிலவுதல் நலமென்றும், அப்பண்பால் அவ்வினம் பல்லாற்றுனும் முன்னேற்றம் அடையும் என்றும் அறிவுரைகளைச் கூறிச் செல்லுதல் எவர்க்கும் எளியதே. ஆயின், அப்பண்பினை மக்கள் வாழ்க்கையில் அமைத்தல் எங்ஙனம் என்பதனைக் குறித்துக் காட்டுவதே சீரிய பணியாகும். அத்தகைய நற்பணியினை இளங்கோவடிகள் சிறப்புற ஆற்றியுள்ளார்.

ஓர் இனத்தார் தம்முள் ஒன்றுபட்டு வாழ்தல் இன்றியமையாததே. ஆயின், ஒன்றுபட்ட இனத்தார் பிறரோடு முரணியோ மோதியோ வாழாதிருத்தல் அதனினும் சிறப்புடையதாகும்.தமிழர் தம்முள் ஒன்றுபட்டு வாழ்தல் வேண்டும்

என்னும் சீரிய எண்ணங் கொண்டவர் இளங்கோவடிகள். எண்ணத்தை வெறும் அறவுரை வடிவில் மாத்திரம் அவர் சொல்லிச் செல்லவில்லை. தம் எண்ணத்தை நிகழ்ச்சிகள் வாயிலாகச் செயற்படுத்திச் சென்றுள்ளார்.

தமிழர் தம்முள்ளும் பிறரொடும் ஒன்றுபட்டு, நல்லுறவுடன் வாழ அவர் காட்டிய வழிகள் எவை, அவ் வழிகளுக்குரிய காட்சிகளை நமக்கு அறிவுறுத்துவது எப்படி என்பவற்றை இக் கட்டுரையிற் காணலாம்.

## விதிவிலக்கான கலைஞர்

உணர்ச்சியின் முருகிய நிலையில் பிறரால் காண இயலாத காட்சிகளைக் கலைஞர்கள் காணுகின்றனர். ஆயினும், உணர்ச்சி வயப்பட்ட அவர்களுடைய படைப்புகளால் கலையுலகுக்கு குறை ஒன்று உண்டு. உணர்ச்சியின் ஈர்ப்புக்கு இரையாவதால், வெறியின் எல்லைக் கோட்டினைக் கலைஞர்கள் அடிக்கடி நண்ணுகின்றனர்; பலர் அந்த எல்லையைக் கடந்துவிடுதலும் உண்டு. கவிஞர்கள் ஆகிய கலைஞரும் இந்த விதிக்கு விலக்கானவர்கள் அல்லர். கவிஞர்கள் ஏதேனும் ஒரு பொருளால் கவரப்பட்டால், அதன்கண்ணேயே திளைத்துத் திளைத்து, அதனுள்ளே கரந்து கரைந்துவிடுவர். இந்நிலையில் நடுவுநிலை பிறழ்ந்து ஒரு சார்பான தீர்ப்புத் தருதல் கூடும். கலைநெறியாளரைப் பின்பற்ற முனைகின்ற போது இந்த எச்சரிக்கையை மனத்தில் இருத்திக்கொள்ளுதல் வேண்டும். இன்றேல், கலைஞர் வாழ்வில் உள்ள 'கோணல்' எங்கும் பரவிடும்.

கவிஞர்களுள்ளும் சிலர் விதிவிலக்குப் பெற்ற கலைஞர்களாக இருக்கின்றனர். அவர்களும் உணர்ச்சி என்ற பரி இவர்ந்து செலுத்துவோரே; ஆயினும், அந்தக் குதிரை

நினைத்தபடி 'பறக்க' முடியாது. அறிவு என்ற 'கண்மறைப்பும்' அற உணர்ச்சி என்ற கடிவாளமும் இடப்பட் டிருக்கும். அறிவுக்கும் அற உணர்வுக்கும் மதிப்புத் தரும் கலைஞர்களே, மக்களிடையே ஒற்றுமையும் ஒருமையும் நிலவுதற்கான நெறி வகுத்துக் காட்டும் திறமை படைத்தவர்கள்.

இளங்கோவடிகள் மேற்குறித்த விதிவிலக்கான கலைஞர் களில் ஒருவராய் விளங்கி ஒற்றுமைக் காட்சியை ஒப்பற்ற காவியக் காட்சியாகக் காட்டியுள்ளார்.

## மூவர்க்கும் உரிய கதை

தமிழகத்தில் அரசு செலுத்திய மூவேந்தரும் ஒருவருக் கொருவர் பூசலிட்டுப் பொருவதிலேயே பெரும்பான்மையான காலத்தைக் கடத்தினர். அந்த முடிமன்னர் மூவரையும் இனிய உறவுடன் ஒரே இடத்தில் காணுதல் அரிது. ஒற்று மையின்மையே தமிழகத்தின் பெருங்குறையாக இருந்தது.* இக் குறைகண்டு மனம் புழுங்கிய கோவூர் கிழார், ஔவை யார், காவிரிப்பூம் பட்டினத்துக் காரிக் கண்ணனார் போன்ற சங்கப் புலவர்களின் பாடல்களை இன்றும் காணலாம். இந்தப் பின்னணியில் சிலப்பதிகாரத்தைப் பயின்றால்தான், தமிழ் வேந்தரிடையே இளங்கோவடிகள் காட்டிய ஒற்றுமைக் காட்சியின் விழுப்பம் புலப்படும். சேர சோழ பாண்டியர்கள் மூவரையும் ஏற்றத் தாழ்வின்றி ஒப்பப் புகழ்கின்றது சிலப் பதிகாரம் என்பதை முன்னரே நாம் அறிந்துள்ளோம்.

கதையின் அமைப்பு இந்த அரிய செய்தியினைச் செப்பு தற்கு மிகவும் பொருத்தமாக வாய்ந்துள்ளது. சோழ நாட்டில் தொடங்கி, பாண்டி நாட்டினுள் பரந்து, சேர நாட்டில் முடி வுறுகின்றது சிலப்பதிகாரக் கதை. இங்ஙனம் மூவேந்தர்க்கும்

* இதன் விரிவினை முன் கட்டுரையில் காண்க.

உரிய கதையை வெறும் மண்ணளவில் நிறுத்திவிடா மல் மன ஒருமைக்கும் உரிய தாக்கிய பெருமை இளங்கோ வடிகளையே சேரும்.

## அரசியல் துறையில் ஒற்றுமை

திருச்செங்குன்றில் வாழ்ந்த குறவர் கண்ணெதிரே கண்ணகியைத் தேவர் வந்து அழைத்துச் சென்றனர். இந்த அருங் காட்சியைக் காணும் பேறு பெற்ற குறவர் தம் மன்ன னாகிய சேரன் செங்குட்டுவனிடம் தெரிவிக்கின்றனர். கண்ணகி வரலாற்றின் மதுரைச் செய்திகளை மதுரையி லிருந்து வந்த சாத்தனார் என்னும் புலவர் செங்குட்டுவனுக் குத் தெரிவிக்கின்றார். கண்ணகி சேரநாட்டை வந்தடைந் ததை அவர் குறிப்பிடும்போது,

*கொற்ற வேந்தன்*
*கொடுங்கோல் தன்மை*
*இற்றெனக் காட்டி*
*இறைக்கு உரைப்பனள்போல்*
*தன்னாட்டு ஆங்கண்*
*தனிமையில் செல்லாள்*
*நின்னாட் டகவையின்*
*அடைந்தனள் நங்கை*

(காட்சி: அஎ—கூ0)

எனக் கூறுகின்றார். 'பாண்டியனுடைய கொடுங்கோன்மை இத்தகையது என்பதை மூவேந்தருக்கும் தலைவனாகிய செங் குட்டுவனிடம் முறையிடுவதற்காகவே தனக்குரிய சோழ நாடு செல்லாமல் சேர நாட்டுக்குக் கண்ணகி வந்தாள்' என் பது சாத்தனார் கருத்து. இந்தச் செய்தியைச் சிலப்பதிகாரத் தில் சேர்த்துப் பாடியவர், சேரர் குலத்தைச் சேர்ந்த இளங்

கோவடிகள். நடுநிலை உணர்வு அவரிடத்து இல்லாமல் போயிருப்பின், ''ஆகா! சேரர் புகழே புகழ்! பாண்டியன் கொடுங்கோன்மையை நிலைநாட்டிய கண்ணகி தேவியார் வாழ்க!'' என்ற நெறியில் பாடியிருத்தல்கூடும். ஆயின், இளங்கோவடிகளின் சிலம்பு சாத்தனுருக்குச் 'சூடு' கொடுக்கின்றது, செங்குட்டுவன் வாயிலாக. ''யான் நீதியினின்றும் வழுவிய செய்தி என்னைப் போன்ற மன்னரைச் சென்று சேருமுன் உயிர்விடுத்த செய்தி சேரட்டும் எனக் கூறுவான்போல வினைப்பயனால் வளைந்த கோலைத் தன் உயிர்விடுத்து நிமிர்த்தினான்'' என்று பாண்டியனைப் பாராட்டுகின்றான் சேரன் செங்குட்டுவன்.*

கண்ணகியின் கதையைச் சாத்தனார் வாயிலாகவே இளங்கோவடிகள் முதன் முதல் அறிந்தார்; அறிந்த அப்பொழுதே தமிழரிடையே நல்லுறவு நிகழ்வதற்கு ஏதுவான கரு நிகழ்ச்சி அதனிடம் அமைந்திருப்பதையும் கண்டு கொண்டார். சாத்தனாரும் சிறந்த புலவரே; ஆயினும், அவர் சேரனுக்குச் சிறப்பும் பாண்டியனுக்கு இழிவும் தரும் கதையாகக் கண்ணகி வரலாற்றைக் கண்டார். அறவழிப்பட்ட இளங்கோவடிகளோ ஒற்றுமைக் காப்பியமாக உருவாக்க வழி கண்டார். இந்த மனப்பான்மையின் வேறுபாடு நம் சிந்தனைக் குரியது. சிலப்பதிகாரக் கதையின் தலைவியாகிய கண்ணகி யாரும் படாத பெருந்துயரம் அடைவதற்குக் காரணமாயினன் பாண்டியன். எனவே, அவனைக் கொடுங்கோலன் என்று சாத்தனார் பழிப்பதில் தவறு இல்லை என்று சிலர் வாதாடலாம். ஆயினும், இளங்கோவடிகள் அத்துணை எளிதாக ஒரு மன்னனைப் பழிக்கின்ற

---

* சேரன் கூற்றை முன் கட்டுரையிற் காண்க. தொடர்பு கருதி ஈண்டுச் சுருக்கமே தரப்பெற்றுள்ளது.

புல்லிய மனம் படைத்தவ ரல்லர். சோழனின் செங் கோன்மை பற்றியோ சேரனின் செங்கோன்மை பற்றியோ மிக விரிவாக அவர் பாடவில்லை; அவ்வாறு பாடுதற்குரிய தேவையும் கதையில் இல்லை. பாண்டியன் சொல்லால் தவறு நேர்ந்தது. எனவே, அவனுடைய ஆட்சிமுறை பற்றி ஆராயவேண்டி யுள்ளது. இதனை எதிர்பார்த்தே இளங்கோவடிகள் தம் காப்பியத்தை இயற்றியுள்ளார். பாண் டியன் செங்கோலனே என்பதை நிறுவுதற்குப் பலவாறு பாடுபடுகின்றார் இளங்கோவடிகள். பாண்டியனின் செம் மையை நிறுவுவதற்காக எல்லைமீறிய நிகழ்ச்சி ஒன்றைப் படைக்கவும் ஆசிரியர் தயங்கவில்லை.

இத்துணைப் பாடுகளும் எதற்கு? தமிழ் மன்னருள் ஒரு வனை மற்ற மன்னர்கள் பழிப்பதற்குக் காரணமான ஒரு நிகழ்ச்சி நிகழ்ந்துவிட்டது. 'ஒற்றுமை வேண்டும்' என்னும் உணர்ச்சி அற்றோர்க்கு இவ்வளவு போதும்; உடனே 'பாண் டியன் கொடுங்கோலன்' எனப் பழி பரப்பத் தொடங்கிடுவர். தண்டமிழ் ஆசான் எனப் புகழப்படும் சாத்தனார் போன்ற புலவர்களே விதிவிலக்கானவர் அல்லர் எனின், பொதுமக் களைப் பற்றியும், பொருதலும் பொறுமையுமே கொண்டிருக் கும் ஏனைய மன்னர்களைப் பற்றியும் எங்ஙனம் குறைகூற முடியும்? அவ்வாறு தவறு செய்யக்கூடியவர்களுக்கு நல் லுறவு நிலவும் ஒற்றுமைக்கு வழிகாட்டுதலே இளங்கோ வடிகளின் குறிக்கோள். சேரன் செங்குட்டுவன் பாண்டி யனைப் பழிப்பதற்குப் பதிலாகப் போற்றினான். அவ்வாறு குறை நேர்ந்தால் குணங்கண்டு குறை மறப்பதும் குணம் போற்றுவதும் மக்களிடையே நல்லுறவு நிலவுதற்குரிய வழிகளாகும்.

## சமயத் துறையில் ஒற்றுமை

மக்களிடையே நல்லுறவு நிலவாமல் இருப்பதற்குரிய காரணங்கள் மிகப் பல; அவற்றுள் இரண்டு சிறப்பானவை. ஒன்று, அரசியல்; மற்ரொன்று, சமயப் பிணக்கு. அரசியல் தலைவரிடையே மறந்து மன்னித்தலும், புரிந்து போற்றுதலும் நிலவுமாயின் ஒற்றுமை நீடிக்கும். அதனை முன்னே சேரன் செங்குட்டுவன் செயலால் கண்டோம். சமயத் துறையிலும் நல்லுறவு நிலவுதற்குரிய வழிகளை இளங்கோவடிகள் காட்டியுள்ளார்.

இளங்கோவடிகள் வாழ்ந்த காலம் ஒரு மாறுதல் காலம். அவருக்கு முன்பிருந்த சங்க காலத்தில் கடவுள் நம்பிக்கையும் வழிபாடும் நிலவின; எனினும் இன்று நாம் கொண்டிருப்பது போல் சைவம், வைணவம், கிறிஸ்தவம், பௌத்தம்.........போலச் சமய நிலையங்கள் கிடையா. இளங்கோவடிகள் காலத்தில் அத்தகைய நிலையங்கள் ஏற்படலாயின. அவ்வாறு சமய நிலையங்கள் தோன்றுவதால் ஏற்படக்கூடிய நன்மை தீமைகளை அவர் ஆராய்ந்து பார்த்திருக்கிருர். சமயக் கொள்கைகளைப் பரப்பும் குரவர்கள் கடும்பற்றுள்ளம் கொண்டவர்களாயின், சமயப் பிணக்கும் பூசலும் பெருகும் என்பதை உணர்ந்திருக்கின்ருர். பூசலும் பிணக்கும் பிற துறைகளில் இருந்தாலும் பரவாயில்லை; உயிர்கள் யாவும் இறைவன் மக்கள் என்று கொள்ளும் சமயத் துறையில் அவை ஏற்படக் கூடாதன. ஆனால், அவை எல்லா நாடுகளிலும்போல நம் நாட்டிலும் தோன்றின. சமய வெறியால் எவ்வளவு பெரிய அவலம் ஏற்படக்கூடும் என்பதை நம் தலைமுறை மிக நன்ருக உணர்ந்திருக்கின்றது. பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளுக்கு ஒரு முறைகூடக் காணமுடியாத காந்தியடிகளையே நாம் பலிகொடுத்தோம்;பறிகொடுத்தோம். இத்துணைப் பெருங்கேடு நிகழக்கூடும் என்பதனை இளங்கோ

வடிகள் உணராதிருந் திருக்கலாம். எனினும், சமயப் பிணக் கால் வேண்டாத தொல்லைகள் ஏற்படும் என்பதை மிகத் தெளிவாக அறிந்திருக்க வேண்டும். ஆதலால், சமயப் பிணக்குக்கு ஒரு சிறிதும் இடம் இல்லாமல் தம்முடைய சிலப்பதிகாரத்தை இயற்றியுள்ளார்.

*பிறவா யாக்கைப் பெரியோன்*

(இந்திரவிழவு: கசுகூ)

என்று சிவபிரானைப் புகழ்கின்றார். அவரே,

*பஞ்சவர்க்குத் தூது*
*நடந்தானை ஏத்தாத*
*நாஎன்ன நாவே*
*நாராயணா என்னா*
*நாஎன்ன நாவே*

(ஆய்ச்சியர் குரவை)

என்று திருமாலைப் புகழ்கின்றார். இப்படியே பௌத்தர், அருகர் எவராயினும் அவ்வச் சமயத்தார் போலவே அவ்வச் சமயங்களைப் போற்றுகின்றார்.

இளங்கோவடிகளுக்குச் சமண சமயத்தில் பற்று உண்டு. அச்சமயக் கொள்கையைப் பரப்பும் நோக்கமும் அவருக்கு உண்டு. எனினும், தம் கருத்தைப் பரப்புதற்காகப் பிறரைப் பழிக்கவேண்டும் என்று அவர் கருதவில்லை. அவர் சமணர். அதனையும் அவர் தெளிவாக—வெளிப்படையாகக் கூறிக்கொள்ள வில்லை. சிலப்பதிகாரத்தைப் பலமுறை பயின்றால் தான் உணரமுடியும். அந்த அளவுக்கு ஏனைய சமய நெறிகளையும் அவர் போற்றியுள்ளார். கதைத் தலைவன் தலைவியர்க்கு வழித்துணையாகக் கவுந்தியடிகள்

என்ற சமண சமயத் துறவியைப் படைக்கின்றார். வழி நெடு கிலும் சமண சமயக் கொள்கைகளை அவர் எடுத்துரைத்து வருகின்றார். இடையே வானில் இயங்கும் சமண சாரணர் வருகின்றனர்; அருகன் புகழ் பாடப்படுகின்றது. எனினும், பிற சமயப் பழிப்புக்கு அணு அளவும் அங்கே இடம் இல்லை. ஆக்க நெறியில் கருத்தைச் செலுத்தும் அறச் செல்வர் களுக்கு எள்ளளவும் அழிவுச் சிந்தனை இருத்த லாகாது. இதனைத் தெளிவாக உணர்ந்தவர் இளங்கோவடிகள். கோவ லன் சமண சமயத்தவன்; ஆயினும் கொற்றவை மந்திரம் சொல்லுகின்றான். இளங்கோவடிகள் சமணத் துறவியாக இருந்தும் அவருடைய காப்பியத்தில் வருகின்ற கோவல னின் தந்தை பௌத்தத் துறவி ஆகின்றான். மாதவியும் மணிமேகலையும் பௌத்தத் துறவிகள் ஆகின்றனர். சிலப் பதிகாரத் தொடக்கத்தில் மாமுது பார்ப்பான் மறைவழி காட் டித் தீவலம் செய்யும் திருமணம் பேசப்படுகின்றது. மாடல மறையவன் கூற்றுப்படி சேரன் செங்குட்டுவன் வேத வேள்வி செய்தல் சிலப்பதிகாரத்தின் இறுதியில் வருகின் றது. ஆன்மநேய ஒருமைப்பாட்டுரிமையுடன் செவ்விய நெறிப்பட்ட சமய சமரசக் காட்சியே இளங்கோவடிகளின் சிலப்பதிகாரத்தில் சித்தரிக்கப்பட் டுள்ளது.

## வேங்கடத்துக்கு அப்பாலும்......

மக்கள் நல்லுறவுடன் வாழும் வாழ்க்கை தமிழகத்துக்கு மட்டுமே வேண்டும் என்று இளங்கோவடிகள் கருதியவ ரல்லர். வேங்கடத்துக்கு அப்பாலுள்ளவர்களும் மக்களே என்ற மதிப்பு அவருக்கு உண்டு. தமிழ் மன்னர்களைக் கன கன், விசயன் என்ற வடநாட்டு மன்னர்கள் பழித்தனர். இச் செய்தி செங்குட்டுவனுக்குச் சினத்தை ஊட்டிற்று. 'பத் தினிப் படிமத்துக்குரிய கல்லை இமயத்தி லிருந்து எடுத்துக் கனக, விசயர் தலையிலேயே ஏற்றிக் கொணர்வேன்' என்று

வஞ்சினம் கூறினன். மேற்கொண்ட சூளுரையைத் தன் அரும்பெறல் வெற்றியால் நிறைவேற்றியும் காட்டினன். தமிழரசரின் வீரத்தைப் பழித்ததால் அவமானம் அடைந்த மன்னர்களைச் சோழனுக்கும் பாண்டியனுக்கும் காட்டிவர அனுப்பினன், சேரன் செங்குட்டுவன். சோழனும் பாண்டியனும் பாராட்டி யிருப்பர் என்றுதான் பொதுவாக எவரும் எதிர்பார்ப்பர். ஆனால், சிலப்பதிகாரத்தின் செய்தி அஃதன்று. "தமிழரின் பொது எதிரி ஒடுக்கப்பட்டது சரியே. எனினும், போர்க்களத்தி லிருந்து மாறுவேடம் பூண்டு அஞ்சி ஓடிய இவர்களைப் பிடித்து வருவதோ வீரர்க்கு வெற்றி!" என்று கூறினர். இந்தச் செய்தி என்ன அறிவிக்கின்றது? 'பகைவர் எனின் அவர்கள் அவமானத்துக் குள்ளாக வேண்டியவர்களே' என்ற கருத்தை மறுக்கின்றது. பகையை ஒடுக்கலாம்; போரில் வென்றதே ஒடுக்கியதாகி விட்டது. வஞ்சினம் நிறைவேறுவதற்காக அவர்களைப் பிடித்துக் கல்லை அவர்கள் தலையில் சுமத்தி யிருக்கலாம். ஆனால், அவர்களை ஏனைய மன்னர்களிடமும் காட்டிவரச் சொல்வது அவமான மன்றோ? தோற்றவர்களும் மக்களின் தலைவராகிய மன்ன ரல்லரோ? — இவ்வாறு எண்ணியது அன்றைய மன்னர் மனம். மற்றவர்க்கு உரிய மதிப்பைக் கொடுப்பது மக்களிடையே நல்லுறவு நிலவுதற்கான வழி என்பதை இதன் வாயிலாக இளங்கோவடிகள் குறிப்பிடுகின்றார்.

## உரிமை போற்றும் உறவு

பல்வேறு கூட்டத்தாரும் ஒற்றுமையாக வாழவேண்டும் என்பது சிலப்பதிகாரத்தின் சிறப்பான செய்தி. ஒற்றுமை எனின் ஒரு சாரார் உரிமையைப் பறிகொடுத்துவிட்டு அடிமையாய் வாழ்கின்ற ஒற்றுமை என்பது பொருளன்று.

அவரவர் எல்லையில், அவரவர் அளவில் உரிமையோடு வாழ்கின்ற ஒற்றுமையே சிலப்பதிகாரத்தில் நாம் காணுகின்றோம். உறவுக்காக உரிமையைப் பறிகொடுக்கச் சொல்லினாரல்லர் இளங்கோவடிகள்.

*நெடியோன் குன்றமும்*
*தொடியோள் பௌவமும்*
*தமிழ்வரம் பறுத்த*
*தண்டமிழ் வரைப்பு*

(வேனில்: க—உ)

என்று தமிழகத்தின் உரிமைக்கு எல்லை வரையறை செய்கின்றார். உரிமைக்கு எல்லை வகுத்த இளங்கோவடிகள் உறவுக்கும் அதே எல்லையை வரையறுக்க வில்லை. செங்குட்டுவன் வடநாட்டின்மீது படையெடுத்துப் போகும்போது, முனிவர்கள் சிலர் வந்து அவனைக் காண்கின்றனர். கண்டு அவனை நோக்கி,

*மலயத்து ஏகுதும்*
*வான்பே ரிமய*
*நிலயத்து ஏகுதல்*
*நின்கருத் தாகலின்*
*அருமறை அந்தணர்*
*ஆங்குளர் வாழ்வோர்*
*பெருநில மன்ன*
*பேணல்நின் கடன்*

(கால்கோள்: க00—க0ரு)

என்று கூறுகின்றனர். இமய மலையில் வாழும் முனிவர் தென்னாட்டு மலைய மலைக்கு வருதலையும், தென்னாட்டு மன்னர் இமய மலையில் வாழும் அந்தணரைப் பேணுதலையும்

குறித்துப் பேசுகின்ற சிலப்பதிகாரத்தின் கருத்து ஆராயத் தக்க தாகும். கனக, விசயரை எதிர்த்துச் செல்லுகின்ருன் செங்குட்டுவன். அவனிடம் இமயத்து அந்தணரைப் பேண வேண்டும் என்ற வேண்டுகோள் விடுக்கின்றனர். இது உதவி நாடும் உறவு; ஆதலால் ஏற்றுக்கொள்ளத் தக்கது.

ஆனல், தமிழ் இனத்தாரின் வீரத்தைப் பழித்த பேச்சு, உரிமைப் புகழுக்கு மாசு தருவது; அந்தப் பேச்சைக் கேட்ட பின்னும் வாளா விருப்பது உரிமையைப் பறிகொடுத்து உறவு தேடும் இழிதகவுடையதாக முடியும். இத்தகைய உறவை இளங்கோவடிகள் ஏற்றுக்கொள்ள வில்லை. ஆதிக்கமும் அடிமைத்தனமும் நிலவ இடந்தரும் உறவு, உண்மையில் நல்லுறவு எனக் கொள்ளமுடியாது.

பத்தினிப் படிமத்துக்குக் கல் எடுப்பது ஒன்றே நோக்க மெனின் சேரன் செங்குட்டுவன் படையெடுத்து வடநாடு நோக்கிச் செல்ல வேண்டா; தன்னுடைய வடநாட்டு நண்பர் கள் வாயிலாக அந்தச் செயலை முடித்துக்கொள்ள இயலும். நூற்றுவர் கன்னர் என்ற நட்பரசர் அவ்வாறே தெரிவிக் கின்றனர். அப்போது செங்குட்டுவன் தன் வடநாட்டுப் படையெடுப்புக்கு உரிய காரணத்தைச் சொல்லுகின்ருன்.

*காவா நாவின்*
*கனகனும் விசயனும்*
*விருந்தின் மன்னர்*
*தம்மொடுங் கூடி*
*அருந்தமி ழாற்றல்*
*அறிந்தில ராங்கெனக்*
*கூற்றங் கொண்டுஇச்*
*சேனை செல்வது*

(கால்கோள்: கருகூ—கசுஉ)

தமிழாற்றலைப் பழித்தவர்க்குப் 'பாடங் கற்பிக்க'வே சினங் கொண்டு சேனை செல்வதாகச் சேரன் செப்புகின்றான். மக்களிடையே நல்லுறவு நிலைப்பதற்கான செய்திகளைக் கூறும் சிலப்பதிகாரத்தில், இந்தச் சினமும் சேனையும் வருவது ஏன் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

ஒருவரை ஒருவர் பழிக்கும் பழக்கம் உள்ளவரையில் பகைமையும் நிலவும். நல்லுறவு நிலவவேண்டு மாயின் அவரவர்க்கு இயல்பான உரிமையை மதித்துப் போற்ற வேண்டும். உரிமை இல்லா இடத்தில் உறவும் இருத்தல் இயலாது. எவரும் பிறரைப் பழிக்கவில்லை என்றால், நல்லுறவு தானே நிலவும்.

சமயத் துறைக்கும் இவ்வுண்மை பொருந்தும். மதுரை செல்லும் வழியில் கவுந்தியடிகள், கோவலன், கண்ணகி ஆகிய மூவர்க்கும் வழி கூறுகின்றான் ஒரு மறையவன். அவன் வழி உரைக்கும்போது மூன்று பொய்கைகளைப் பற்றிக் குறிப்பிட்டு, அவற்றில் மூழ்கி எழுந்தால் என்னென்ன நற்பயன் கிட்டும் என்பதை விரித்துக் கூறுகின்றான். அவன் குறித்த பொய்கைகளும் பயன்களும் வைதிக நெறிக்கே உரியவை. கவுந்தியடிக ளாகிய சமணத் துறவி இருப்பதைத் தெளிவாக அறிந்துகொண்டும், தன் வைதிகப் பற்றை அவன் காட்டிக்கொள்கின்றான். கவர்ச்சியான பயன்களைச் சொல்லித் தம் மதத்துக்கு ஈர்க்கும் முறைபோல அவன் கூற்று அமைகின்றது. இது பிறர் உரிமையில் தலையிடுவ தாகும். எனவே, உரிமையை இழக்க விரும்பாத கவுந்தியடிகள் அவன் கருத்தை மறுக்கின்றார்; வேறு வழியில்லை. அவ்வாறு மறுக்குமிடத்தும் 'நலம்புரி கொள்கை நான்மறையாள' என அவனை மிக்க மதிப்புடன் நடத்துகின்றார். இம்முறையில் மறுப்பிலும் பிறர் உரிமைக்கு மதிப்பும் உயர்வும் தந்தால் நல்லுறவு நிலவும் என்பது உறுதி.

சேரன் செங்குட்டுவன் வடநாடு செல்லுமுன், தன் வழி படு கடவுளாகிய சிவபிரானை வணங்கி வழிபட்டான். வழி பட்டு, அப்பெருமானின் திருவடிகளைத் தன் முடிமீது சூடிக் களிறு ஏறிப் புறப்பட்டான். புறப்படும்போது ஆடகமாடம் என்ற திருமால் கோவிலி லிருந்து பிரசாதம் வந்தது. சைவ னாகிய செங்குட்டுவன் திருமாலின் பிரசாதத்தை மறுக்க வில்லை; ஏற்றுக்கொண்டான். ஆனால், தான் வழிபட்ட சிவ பிரானுக்கு அடுத்த நிலையே தருகின்றான். தன் நெறிக்கு இழிவின்றிப் பிறர் நெறிக்கு மதிப்புத் தருதல் வேண்டும் என்பதே ஆசிரியரின் கருத்தாதல் வேண்டும்.

*உலகுபொதி உருவத்து*
*உயர்ந்தோன் சேவடி*
*மறஞ்சேர் வஞ்சி*
*மாலையொடு புனைந்து*
*இறைஞ்சாச் சென்னி*
*இறைஞ்சி வலங்கொண்டு*
.....................................
*கடக்களி யானைப்*
*பிடர்த்தலை ஏறினன்*
*குடக்கோக் குட்டுவன்*
*கொற்றம் கொள்கென*
*ஆடக மாடத்து*
*அறிதுயில் அமர்ந்தோன்*
*சேடம் கொண்டு*
*சிலர்நின் றேத்தத்*
*தெண்ணீர் கரந்த*
*செஞ்சடைக் கடவுள்*
*வண்ணச் சேவடி*
*மணிமுடி வைத்தலின்*

*ஆங்கது வாங்கி*
*அணிமணிப் புயத்துத்*
*தாங்கின ஞகி..............*

(கால்கோள்: ருரு—சுஎ)

என்பது சிலப்பதிகாரம். சிவபிரான் அருளால் தோன்றி அவரையே தன் வழிபடு கடவுளாகக் கொண்டவன் செங் குட்டுவன்; சிவபிரான் திருவடிக்குத் தன் முடியும், திருமால் பிரசாதத்துக்குத் தன் புயமும் கொடுத்த அவன் செயல் சிந்தனைக்கு உரியது. ஒற்றுமைக்கு வழிகோலுவதற்குத் தன்மதிப்பை இழக்கவேண்டு மென்ருே, தன்மதிப்பை இழந் தால்தான் நல்லுறவைத் தேட இயலும் என்ருே கருத இடமில்லை யன்ருே ?

## அன்புரிமையும் அருளுறவும்

சமுதாயத்தின் பொறுப்பேற்பவர் அரசியல் தலைவர் களும், சமய குரவர்களும் ஆவர். அத்தகைய பெரியோர் களின் செயல்களாலும் சொற்களாலும் ஒற்றுமைக்கும் உற வுக்கும் உரிய நெறிகளை இளங்கோவடிகள் வகுத்துரைத் ததை இதுகாறும் கண்டோம். ஆயின், சிறுபான்மைய ராகிய தலைவர்களே சமுதாய முழுமை ஆகிவிட மாட்டார்கள். அன்ருட வாழ்க்கையிலும் இத்தகைய பண்புகள் அமையு மாறு செய்தலே மேலும் சிறப்புடைய தாகும்.

மதுரை நகரத்து மாதரியி னிடத்து நாம் காணும் பண்பு எவர் உள்ளத்துக்கும் நல் விருந்தாம். மாதரிக்குப் புதுவதாக அறிமுகம் செய்யப்பட்டவள் கண்ணகி. ஆயின், மாதரியின் உள்ளத்தில் உரிமையோடு உறவுறும் இடத்தினைக் கண்ணகி பெறுகின்ருள். கவுந்தியடிகள்பால் கண்ணகியை அடைக் கலமாகப் பெற்று ஆயர் சேரியினுட் புகும் மாதரியைப்பற்றிக்

குறிக்குமிடத்து இளங்கோவடிகள்,

*அரும்பெறற் பாவையை*
*அடைக்கலம் பெற்ற*
*இரும்பேர் உவகையின்*
*இடைக்குல மடந்தை*

(கொலைக்களம்: க—உ)

என்று வரைந்துள்ளார். முன்பின் தொடர்பில்லா ஒருத்தியைத் தன் அடைக்கலமாகப் பெற்றுள் மாதரி. அப்பேற்ருல் மிகப் பேருவகை கொண்ட மாதரியின் அன்பு முதிர்ச்சியுற்று விளைக்கும் பயனை நாம் உணர்தல் வேண்டும். உள்ளத்து மலர்ந்த உவகை உரை யினிமையாய்க் காய்த்து அரிதின் ஓம்பும் அருட்கனியாய்ப் பழுக்கின்றது. ''உமக்கு அடித் தொழிலாட்டி இல்லை என்று கருதற்பாலீ ரல்லீர்; என் மகள் ஐயை காணும் அடித்தொழிலாட்டி; யான் உம்மைப் பொன் போலப் பொதிந்து கொள்வேன்.........'' என்று அடியார்க்கு நல்லார் உரைவகுக்குமாறு அமைந்தன அம் மாதரி நல்லாளின் இன்னுரைகள். ஐயையைக் கண்ணகியொடு உறவின் முறையின ளாக்கும் அளவுக்கு மாதரியின் மாசற்ற அன்பு சிறக்கின்றது. ஐயையைக் குறிக்கும் மற்ருேர் இடத்தில் '**நாத் தூண் நங்கை**' எனப் பேசுகின்றுள். தன் மகளைக் கோவலனுடன் பிறந்த உறவின்முறையின ளாகக் கொண்டாடு முகத் தான், அயலுணர்வு அடியற்ருெழியச் செய்கின்றுள் அவ் வன்பின் தெய்வதம்; அயன்மை, புதுமை உணர்வுகளால் கண்ணகியின் உள்ளம் அலைவுற்றுத் தொல்லையுரு வண்ணம் மாதரியின் இனிய சொற்களும் செயல்களும் அமைகின்றன.

கண்ணகி ஐயையின் துணைபெற்றுத் தன் கைப்படச் சமைத்த உணவினைக் கோவலனுக்குப் படைக்கின்றுள்.

துணைவன் துயர்போக்கித் தன் துயர் மறக்கும் துணைவியாம் கண்ணகி பரிமாறுகின்றாள். அப்பெறலரும் அமுதினை உண்ணும் பேறு பெற்ற கோவலன் உணவருந்துகின்றான். அந்தக் காட்சியை மாதரியும் ஐயையும் கண்டு மகிழ்கின்றனர்.

*ஆயர் பாடியின்*
*அசோதைபெற் றெடுத்த*
*பூவைப் புதுமலர்*
*வண்ணன் கொல்லோ*
*நல்லமு துண்ணும்*
*நம்பி ஈங்குப்*
*பல்வளைத் தோளியும்*
*பண்டுநம் குலத்துத்*
*தொழுனை யாற்றினுள்*
*தூமணி வண்ணனை*
*விழுமம் தீர்த்த*
*விளக்குக் கொல்லென*

(கொலைக்களம்: சசு–டுக)

ஐயையும் அவள்தன் தவ்வையாம் மாதரியும் விம்மிதம் எய்தினர் என இளங்கோவடிகள் வரைகின்றார். இவ்வரிய காட்சியில் இடம் பெறும் இவ்வெளிய மக்களால் இளங்கோவடிகள் தெரிவிப்பது யாது? அன்புரிமையால் அருள் உறவு கொண்டாடும் களங்கமற்ற உள்ளம் எவர்பாலும் இருக்குமேல், உலகில் தொல்லை ஏது? எளிய குடிப் பிறந்து, உழைத்தே பிழைக்கும் வாழ்வினளாகிய மாதரி வாயிலாக இத்துணை உயரிய உண்மையினை நமக்கு அறிவுறுத்துகின்றார் இளங்கோவடிகள். அன்பு செலுத்தும் திறம் உடையவர்க்கு – அவ்வன்புரிமை காரணமாக–எவரும் உறவுடையராவர் என்பது இளங்கோவடிகள் செப்பும் செய்தி யாகு

அன்றாட வாழ்க்கையில்—ஏழை எளியவரும்—இந்நெறியினைப் பின்பற்றுதல் வேண்டும் என்பதே அவர்தம் இதய ஒலியாம். தன் மகள் ஐயையைக் கண்ணகியின் நாத்தூண் நங்கை யாக்கி, கரவும் களங்கமு மற்ற அன்பு செலுத்தி, அகம் பூரிக்கும் மாதரி தமிழர்க்கும் பிற இனத்தினர்க்கும் ஒப்பற்ற விளக்காக ஒளிர்கின்றாள்.

## உரிமை > உறவு

இதுகாறும் இக்கட்டுரையில் விவரித்த சிலப்பதிகாரக் காட்சிகளின் வாயிலாக அடிகள் அறிவுறுத்துவன யாவை? சுருங்கச் சொன்னால் 'உரிமை > உறவு' என்னும் வாய்பாடாக அமையக் காணலாம். இவ்வாய்பாடு இரண்டு விளக்கங்களுக்கு இடம் தருகின்றது. ஒன்று: அவரவர் உரிமை போற்றின் உறவு நிலைக்கும். இரண்டு: அன்பாகிய உரிமையால் அயலவரும் உறவாவர்.

